Registered as a News Paper
பொழிவு 22
குவிப்பு 01
பக்கங்கள் 16
விலை 40/-
ஜனவரி 2019
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Center, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 076-2192122, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 149 / News / 2018"

## அரச கிறிஸ்து பிறப்புவிழாக் கொண்டாட்டம்







இலங்கை அரசின் கிறிஸ்தவ அமைச்சும், கிறிஸ்தவமத அலுவல்கள் திணைக்களமும் இணைந்து ஒவ்வொரு வருடமும் நடாத்தும் அரச நத்தார் கொண்டாட்டம் "கிறிஸ்துவின் பிறப்பும், நத்தாரின் சிறப்பும்" என்னும் தொனிப்பொருளில் இவ்வாண்டு மன்னார் நகரில் நடைபெற்றது. 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணிக்கு மன்னார் நகரசபை விளையாட்டுத்திடலில் இவ்விழா நடைபெற்றது. மன்னார் மாவட்டச் செயலர் உயர்திரு மோகன்றாஜ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இவ்விழாவிற்கு இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின் ஜனாதிபதி மேன்மைதங்கிய மைத்திரிபால சிறிசேன அவர்கள் முதன்மை விருந்தினராகவும், இலங்கைக்கான திருத்தந்தையின் வத்திக்கான் பிரதிநிதி அதிமேன்மைமிகு பியர்நோவன்வான் ரொட் ஆண்டகையும், இலங்கை ஆயர்பேரவையின் தலைவர் பேரருட்கலாநிதி வின்ஸ்ரன் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகவும் பிரசன்னமாகியிருந்தனர். இவர்களோடு மன்னார் மாவட்டத்திலுள்ள இந்து, முஸ்லிம், பௌத்த சமயத்தலைவர்களும் வருகைதந்திருந்தனர்.

➡ 14



## வாழ்த்துகின்றோம்

### ஆயர் நியமனம் - குருத்துவ ஆண்டு
### 30.12.2018 – 06.01.1973



கடந்த 06.01.2019 ஆம் திகதி தனது குருத்துவ அர்ப்பணத்தின் 46ஆவது ஆண்டையும் கடந்த 30.12.2018 ஆம் திகதி மன்னார் ஆயராக நியமனம் பெற்ற முதலாம் ஆண்டையும் நினைவுகூருகின்ற எம் பாசமிகு ஆயர் தந்தை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக மகிழ்வோடு வாழ்த்துக்களைத் தெரிவித்து, தொடர்ந்து இறையாசீர் அவரோடு இருக்கும்படி ஆசிக்கின்றோம்.

மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை, மறைமாவட்ட குருக்கள், துறவிகள், அருட்சகோதர, சகோதரிகள் பொதுநிலைப் பணியாளர்கள், இறைமக்கள் சார்பாக மன்னா உளம் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

➡ 15

## பொங்கல் நல்வாழ்த்துக்கள்




ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் தினமாகும். உலகத்தைப் படைத்த முழுமுதலாம் இறைவனுக்கு இறைவன் வழங்கிய வாழ்வின் நிறைவிற்கு நன்றி கூறுகின்றோம்.

மன்னா வாசகர்கள் அனைவருக்கும் தமிழர் திருநாளாம் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். உங்கள் உள்ளங்களும், இல்லங்களும் இறை அன்பினால் பொங்கி வழியட்டும். பொங்கலோ பொங்கல்! •

- மன்னா பதிப்பாசிரியர். -

## மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவுதின நிகழ்வு



அமரர் அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் படுகொலை செய்யப்பட்டு இறந்த 34ஆம் ஆண்டு நினைவு இம்மாதம் 06ஆம் திகதி வங்காலையில் உணர்வு பூர்வமாக நினைவுகூரப்பட்டது.

அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் திருப்பலி முடிந்தவுடன் இரங்கல் வழிபாடும் தொடர்ந்து அடிகளாரின் உருவச் சிலைக்கு முன்பாக அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் ஒவ்வொரு ஆண்டைப்போன்றும் இந்த வருடமும் ஆலய வளாகத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வுகள் அனைத்தையும் வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. மாக்கஸ் மற்றும் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. மரிய கிளைன் ஆகியோர் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.•

## 57ஆவது குருத்துவ நினைவு நாள்



மன்னார் மறைமாவட்ட முன்னைநாள் குருமுதல்வர் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார் கடந்த 20.12.2018 அன்று தனது குருத்துவ வாழ்வில் 57ஆவது ஆண்டை நிறைவு செய்துள்ளார்.

மறைமாவட்டத்தின் இதயமாக விளங்கும் மடுமாதா சிறிய குருமட அதிபராக பல ஆண்டுகள் பணியாற்றி பல குருக்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

எனவே மறைமாவட்டம் சார்பாக மன்னா எம் அன்புக் குருவை வாழ்த்தி அவருக்காக இறையாசீர் வேண்டி நிற்கின்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், குருக்கள், அருட்சகோதர சகோதரிகள், பொதுநிலைப்பணியாளர்கள் மறைமாவட்ட இறைமக்கள் உங்களை அன்போடு வாழ்த்தி நிற்கின்றனர்.•

## திருப்பாலத்துவ சபை ஞாயிறு
### ஜனவரி 27ஆம் திகதி



இந்தவருடம் பொதுக்காலத்தின் 3ஆவது ஞாயிறுதினம் அதாவது ஜனவரி 27 ஆம் திகதி திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

➡ 15

## மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 38 ஆண்டுகள் நிறைவு விழா

மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 38 ஆண்டுகள் (1981) நிறைவுவிழா எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலய வளாகத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெறும்.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அடிகளார் மற்றும் தோட்டவெளிப்பங்குத்தந்தை அலெக்சாண்டர் சில்வா (பெனோ) அடிகளார் ஆகியோரின் வழிகாட்டுதலில் இவ்விழாவிற்கான ஆயத்தங்கள் இடம்பெறுகின்றன. மன்னார் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளைச் சார்ந்த இறைமக்களும், இம்மறைமாவட்ட விழாவில் பெருந்தொகையாக கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எம் மன்னார் மறைமாவட்ட வேதசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்காக மறைமாவட்ட இறைமக்கள் சமூகமாக இணைந்து செபிக்க அழைக்கப்படுகின்றனர்.•

கடவுளே! எமக்கு ஆசி வழங்குவீராக (தி.பா: 67:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## மாற்றம் தேவை

சமயப்பற்று போற்றுதற்குரியது. அது தமிழ் மக்களின் தனிப்பெரும் சொத்து. ஆனால் பற்று வெறித்தனமாக மாறி சமுதாய வீதிகளில் தலைவிரித்து கோரத்தாண்டவம் ஆடும்போது சமய நம்பிக்கையின் மீதுள்ள நம்பிக்கையையே மதிப்பிழக்கச் செய்கின்றது. சமய வெறியால் எம் சமுதாயம் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகின்றது என்பதை எம் பிரதேசங்களில் அண்மைக்காலங்களில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் பறைசாற்றுகின்றன.

வன்முறை ஒரு தொடர்கதை, அது வெட்ட வெட்ட வளரும் நெறிஞ்சிமுள் போன்றது. ஒரு இடத்தில் ஒரு சமயத்தின் சுருபம் விசமிகளால் உடைக்கப்பட்டால் மறுபக்கம் இன்னுமொரு இடத்தில் வேறு சமய இரு சுருபங்கள் உடைக்கப்படுகின்றது. இச்செயற்பாடு சமயத்தை மையமாகக் கொண்ட தீவிரவாதத்தன்மை எனலாம். இச்செயற்பாட்டை சமயப்பற்றோடு ஒப்பிடமுடியாது. சமயத்தை இழிவுபடுத்தும் அரசியல் தலைவர்களும் எம் தேசத்தில் உண்டு.

வன்முறை நிகழும்போது அதற்கான நிவாரணங்களை நாடுவது முட்டாள்தனம். இன்று எமக்கு தேவைப்படுவது தற்காலிகமான அமைதி அல்ல, மாறாக வேரோட்டமான மாற்றம். அமைதி என்பது கலவரமோ, வன்முறைச் சம்பவமோ இல்லாத நிலை என்று நாம் எண்ணுவது தவறு. மாறாக உண்மையான அமைதி என்பது சமுதாயத்தில் ஒருவரையொருவர் ஏற்று அன்புறவிலும், தோழமையிலும் வளர்ந்து ஒரே குடும்பமாக வாழ்வதில்தான் அடங்கியுள்ளது. அன்பு, நீதி, பகிர்வு, மன்னிப்பு இல்லாமல் நீடித்த அமைதியை எங்கும், எதிலும் எதிர்பார்க்க முடியாது.

எனவே சமயங்கள் அல்ல, அடிப்படையில் நாம் மாறவேண்டும். மத வெறித்தனம் மாறவேண்டும், குடும்ப வேறுபாடுகள் மாறவேண்டும், சாதி வெறி மாறவேண்டும், ஒருவருக்கொருவர் தங்களிடையே உறவையும், நல்லிணக்கத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். சமயம், குடும்பம், சமுதாயம், தனிமனிதன் சார்ந்த உள்ளார்ந்த விழுமியங்கள் வாழப்பட வேண்டும். இதுதான் இன்றையத் தேவையாகும்.

இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டுதான் மறைமாவட்டம் 2019ஆம் ஆண்டை புதுப்பித்தல் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. தனி மனிதன் புதுப்பித்தல், இளையோர் புதுப்பித்தல், குடும்பம் புதுப்பித்தல், அன்பியம் புதுப்பித்தல் ஆகிய விடயங்களில் இவ்வாண்டு அதிக கூடுதலான அக்கறை எடுத்து மறைமாவட்டத்தின் இலக்காகிய "அன்பிய வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி" பயணம் செல்ல தீர்மானம் எடுப்போம். எம் மன்னார் மறைசாட்சிகளின் பாதையில் பயணம் செல்வோம். இவர்கள் புனித அருள்நிலை அடைய மன்றாடுவோம். இவர்களது பரிந்துபேசுதலால் எம் மறைமாவட்டத்தின் விசுவாசம் மேலும் உயர்நிலை அடைய ஆசிப்போம். அதற்காக ஒன்றுபடுவோம். உழைப்போம்.

பிறந்திருக்கும் இப்புதிய ஆண்டு எம் மன்னா விநியோகஸ்தர்கள், மன்னா வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இறைவனின் ஆசீர் நிறைந்த நல்லதொரு ஆண்டாக அமையட்டும்.

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா பதிப்பாசிரியர்.*

❋❋❋

## புனித யோசவ்வாஸ் இறையியல் கற்றை நிலையத்தின் டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பம்

கடந்த 12.01.2019 சனிக்கிழமை அன்று புனித யோசேவ்வாஸ் இறையியல் கற்கைநிலையத்தின் டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளது. பொதுநிலையினர் சிறப்பாக இறையியல் கற்பதற்கான அரிய சந்தர்ப்பமாகும்.

எனவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி 3 ஆண்டுகளில் இறையியலுக்கான டிப்ளோமா சான்றிதழை நீங்கள் பெற்றுக்கொள்ளமுடியும். டிப்ளோமா வகுப்புக்கள் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மன்னாரில் இடம்பெறும். இவ் இறையியல் கற்கையின் டிப்ளோமா வகுப்புக்களில் பங்கெடுக்க விரும்புவோர் காலம் தாழ்த்தாமல் உடனடியாக புனித யோசேவ்வாஸ் இறையியல் கற்கை நிலையத்தின் இயக்குனரை தொடர்புகொள்ளுங்கள்.

தொலைபேசி இலக்கம்: 077-307713, 071-8612610

*அருட்பணி. டெஸ்மன் குலாஸ்,*
*இயக்குனர்,*
*புனித யோசேவ்வாஸ், இறையியல் கல்வியகம்,*
*தாழ்வுபாடு வீதி,*
*மன்னார்.* ●

## நித்திய அர்ப்பணம்

### வங்காலைப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரி. கிறிஸ்ரி பிறிஜிற்றா சோசையின்



அருட்சகோதரி கிறிஸ்ரி பிறிஜிற்றா சோசை அவர்கள் திரு. அகுஸ்தீன் சோசை, திருமதி. பவுலின் ஜசிந்தா மிராண்டா தம்பதிகளின் 5வது குழந்தையாக வங்க மண்ணில் பிறந்தார். இவர் கடந்த 30.12.2018 அன்று வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் மன்னார் ஆயர் முன்னிலையில் தனது இறுதி அர்ப்பணத்தை மேற்கொண்டார். ➡ 15

### புனித மரியாளின் பிறான்சிஸ்குவின் மறைபரப்புச்சபை அருட்சகோதரிகள்



அருட்சகோதரி. றோசபின் தொம்மை



அருட்சகோதரி. கொன்சலீற்றா மடுத்தீன்

நித்தியத்திற்கும், இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்த இவர்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துவதோடு இறையாசீரைக் கேட்டு நிற்கின்றது. ➡ 15

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2019

### ஜனவரி

01. புனித கன்னிமரியா இறைவனின் தாய் - கடன் திருநாள்
06. மேதகு பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆயர் - குருப்பட்டம் (1973)
12. புனித வனத்துச் சின்னப்பர் ஆலயம் - கணேசபுரம் (வேப்பங்குளம்)
16. புனித யோசேவ்வாஸ் திருவிழா - செட்டிகுளம், புதுக்காடு, மடுக்கரை, பூமலர்ந்தான், கள்ளிக்குளம் (பெரிய முறிப்பு), தரணிக்குளம்
20. புனித செபஸ்ரியார் திருவிழா - மன்னார் பேராலயம், முதலியார்கமம் (இலுப்பைக்கடவை), நீராவிபுரம், முத்தரிப்புத்துறை, கட்டைக்காடு, கண்டல், தவசிகுளம்
21. புனித செபஸ்ரியார் திருவிழா - கொண்டச்சிக்குடா, கொக்குப்புடையான், தெற்கிலுப்பைக்குளம், மறவன்குளம்
22. குழந்தை இயேசு திருவிழா - காந்திநகர்
24. மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 38 ஆண்டுகள் நிறைவு (1981)
25. புனித பவுல் - பூலார் குடியிருப்பு
26. மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 38 ஆண்டுகள் நிறைவு (1981) காலை 7.30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் கூட்டுத்திருப்பலி நடைபெறும்.
27. குழந்தை இயேசு ஆலயம் - தாஸ்கோட்டம், பறண்நட்டகல் (ஓமந்தை)
    புனித செபஸ்ரியார் ஆலயம் - மறவன்குளம்
    - திருப்பாலத்துவ மறைபரப்பு ஞாயிறு

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்

## பரிசுத்த பாப்பரசரின் திருப்பாலர்சபை

1983ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் நன்சி என்னும் ஊரில் ஆயர் சால்ஸ் டீ போபின் ஜான்சன் என்பவர் இச்சபையை ஆரம்பித்தார். இளம் பராயத்திலிருந்தே இயேசுவை ஆழமாக அறியவும், கிறிஸ்தவ நற்பண்புகளை வாழ்வில் கடைப்பிடிக்கவும் சிறுவர்களைக் கொண்டு சிறுவர்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் பகிர்ந்து வாழும் மனப்பான்மையை இவர்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்வதுமே இவரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. இதன்வழியாக சிறுவர்களை இயேசுவின் சிறிய மறைத்தூதர்களாக மாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தார். ●

## துயர் பகிர்கின்றோம்.

### அமரர் அருட்தந்தை அ.ஹிலேறியன் வேதநாயகம் (அமதி) அடிகளார்



கடந்த 29.11.2018 அன்று இறைபதமடைந்த அமலமரித் தியாகிகள் துறவற சபையைச் சார்ந்த அமரர். அருட்தந்தை அ. ஹிலேறியன் வேதநாயகம் (அமதி) அடிகளாரின் நல்லடக்க நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம். வாழ்வு என்ற கொடையைக் கொடுத்து அதிலும் ஓர் கத்தோலிக்க குருவாக இவரை அழைத்து கடந்த 94 வருடங்களாகக் காத்து வழிநடத்திய எல்லாம்வல்ல பரம்பொருளுக்கு நன்றி கூறுகின்றோம்.

அடிகளாரின் நல்லடக்க ஆராதனையில் கலந்து இறுதி ஆசீரை வழங்கிய யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் அனுதாபச் செய்திகளை அனுப்பிய மன்னார், திருகோணமலை ஆயர்களுக்கு நன்றிகள்.

➡ 14

### அமரர் அருட்பணி. செற்றிக் யூட் ஒக்கர்ஸ் அடிகளார்




மட்டக்களப்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. செற்றிக் யூட் ஒர்க்கர்ஸ் அடிகளார் கடந்த 19.12.2018 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அடிகளாரின் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற செபிப்பதோடு இவரது பிரிவால் துயருறும் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர், சக குருக்கள், குடும்பத்தினர் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், மறைமாவட்ட குருக்கள், சார்பாக மன்னா ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றது. ●

### அமரர். திரேசம்மா பிலிப்புப்பிள்ளை



மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களாகிய கிறிஸ்துநாயகம், யேசுராஜா ஆகியோரின் அன்புத் தாயாராகிய அமரர் பிலிப்புப்பிள்ளை திரேசம்மா அவர்கள் 09.12.2018 ஞாயிறு அன்று அமரத்துவம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் அருட்தந்தையர்கள், குடும்பத்தினர் உற்றார், உறவினர் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கின்றோம். ●

## உண்மை உறைக்கும் கமிலஸ்




### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

*-மன்னா நிர்வாகம்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# குருக்கள், துறவியர்களுக்கான வருட இறுதி ஒன்றுகூடல்






மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் எல்லா அருட்பணியாளர்கள், துறவியர்களுக்குமான வருடாந்த கிறிஸ்துபிறப்பு மகிழ்வு ஒன்றுகூடல் 20.12.2018 வியாழக்கிழமை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற்றது. முதலில் மன்னார் பேராலயத்தினுள் செபவழிபாடு துறவறசபைகளின பல்வேறு பிரதிநிதிகளால் ஒன்றிணைந்து நடாத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து புனித செபஸ்தியார் பேராலய ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆயர் பேரருட்கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பிரசன்னத்தில் கலைநிகழ்வுகளும், மகிழ்வுப்பகிர்தலும் இடம்பெற்றன. ●

# மன்னார் ஆயரின் முதலாம் ஆண்டு நினைவு




கடந்த 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் அருட்சகோதரி பிறிஜிற்றா சோசை அவர்களின் நித்திய அர்ப்பண நிகழ்வின்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி மேதகு பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி (மன்னார் மறைமாவட்ட ஆயராக) பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரும், மறைமாவட்ட மூத்தகுரு அருட்பணி சேவியர் குருஸ் அடிகளாரும் பொன்னாடை போர்த்துவதை படத்தில் காணலாம். ●

# வங்காலைப் பங்கில் விடுமுறை மறைக்கல்வி




வங்காலைப் பங்கில் மாணவர்களுக்கான விடுமுறை மறைக்கல்வி புனித ஆனாள் ஆலய முன்றலில் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி பங்குத்தந்தை அருட்பணி. S. மாக்கஸ் அடிகளாரின் தலைமையில் ஆரம்பமானது. அருட்பணி. மரிய கிளைன் அவர்கள், விடுமுறை மறைக்கல்வியினை பொறுப்பேற்று நடத்தினார். இந்த விடுமுறை மறைக்கல்வியின் நோக்கம் பாடசாலை மாணவர்கள் விடுமுறையினை மகிழ்ச்சியாக களித்தல்.

➡ 14

# பெயர் மாற்றமும், துறவற சபையாவற்குரிய முதல் படிநிலையும்




கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்னார் மறைமாவட்டத்தைத் தளமாகக்கொண்டு 'கடவுளின் பணியாளர் சபை' (Sisters of Servants of God) என அழைக்கப்பட்ட சபையானது தற்போது **'புனித யோசேவ்வாஸின் அருட்சகோதரிகள்' (The Sisters of St. Joseph Vaz** எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் இச்சபை மறைமாவட்டத்தின் துறவற சபையாக உயர்த்தப்படுவதற்கு முன்னர் உள்ள முதல் படிநிலையான **'பொது அமைப்பு' (Public Association)** என்ற நிலையையும் தற்போது பெற்றுள்ளது. இச்சபைக்குப் புதிய பெயரைச் சூட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வும், துறவற சபையாவதற்குரிய முதல் படிநிலையான 'பொது அமைப்பு' (Public Association) என்ற நிலையை வழங்கும் நிகழ்வும் கடந்த 27.12.2018 அன்று நற்செய்தியாளர் புனித யோவானின் திருவிழா அன்று மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் திருப்பலியில் இப்புதிய பெயரையும், புதிய படிநிலையையும் சம்பிரதாய பூர்வமாக இச் சபைக்கு வழங்கிவைத்தார்.

➡ 14

# பேசாலை
## புனித வெற்றி அன்னை திருவிழா





பேசாலைப் பங்கின் பாதுகாவலியான புனித வெற்றியன்னை ஆலயத் திருவிழா டிசம்பர் 08ஆம் திகதி அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழாத் திருப்பலியில் அருட்பணியாளர்களும், அருட்சகோதரிகளும் இணைந்து கொண்டனர். இவ்விழாவில் பெருந்தொகையான இறைமக்கள் கலந்து செபித்து அன்னையின் இறையாசீரைப் பெற்றனர். திருப்பலி முடிவில் புனித வெற்றி அன்னையின் திருச்சுருபப்பவனி இடம்பெற்றது. பேசாலைப் பங்குத்தந்தை அருட்பணி. தேவராஜா கொடுதோர், உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. பசில் கிளைன் ஆகியோர் பங்குமக்களின் ஒத்துழைப்போடு இத்திருவிழாவைச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்கள். ●

# முன்பள்ளி ஆசிரியர், மாணவர்களுக்கான ஆண்டிறுதி ஒன்றுகூடல்







மன்னார் மறைமாவட்டத்தின் மனிதநேயப்பணிகளை ஆற்றிவரும் வாழ்வுதயம் கரிற்றாஸ் மன்னார் நிறுவனத்தின் கல்விப்பிரிவிற்கான ஆண்டிறுதி ஒன்றுகூடல் கடந்த 05ஆம் திகதி சனிக்கிழமை அன்று வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வை மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார், வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. செபமாலை அன்ரன் அடிகளாரின் ஒருங்கிணைப்பில் நடாத்தியிருந்தார். இந்நிகழ்வின்போது ஆயர் அவர்கள் வரவேற்கப்பட்டார். ஆசிரியர், மாணவர்களுக்கான அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. நீண்டகாலம் முன்பள்ளி ஆசிரியர்களாக பணியாற்றிய இரண்டு ஆசிரியைகளுக்கு கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

➡ 15

# மதத்தலைவர்கள், அரச ஊழியர்களுக்கான நல்லிணக்கச் செயற்பாடுகள்




**கரிற்றாஸ் - வாழ்வுதயம் அனுசரணை**

இலங்கையில் வாழும் மக்களிடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் கரிற்றாஸ் வாழ்வுதய நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக 03,04.12.2018 ஆகிய இரு தினங்கள் மன்னார், இரத்தினபுரி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து மதத் தலைவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் திருகோணமலையில் ஒன்றுகூடினர். ஆரம்ப நாளில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் கருத்தரங்கு இடம்பெற்றது. பின் திருகோணமலையின் வில்கம் விகாரை, அல்ஹிலூர் ஜும்மா பள்ளிவாசல், திருகோணமலை மறைமாவட்ட புனித மரியாள் பேராலயம், திருக்கோணேஸ்வரம் ஆகிய மதத்தலங்களை தரிசித்து அங்குள்ள மதத்தலைவர்களுடன் நீண்ட நேர கலந்துரையாடல்கள் நடைபெற்றன. ●

# பள்ளிமுனை
## புனித லூசியா திருவிழா

பள்ளிமுனைப் பங்கின் பாதுகாவலியான புனித லூசியா ஆலயத்திருவிழா டிசம்பர் மாதம் 13ஆம் திகதி அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட இத்திருவிழாத் திருப்பலியில் பல அருட்பணியாளர்களும், அருட்சகோதரிகளும் இணைந்து கொண்டனர்.

இவ்விழாவில் பெருந்தொகையான இறைமக்கள் கலந்து இறையாசீர் பெற்றுக்கொண்டனர். திருப்பலி முடிவில் புனித லூசியா அன்னையின் திருச்சுருபப் பவனி இடம்பெற்றது. இவ்வாலயம் மறைமாவட்டத்தில் சிற்பங்கள் நிறைந்த ஆலயமாகவும், மறைமாவட்டத்தின் பழமையான ஆலயங்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. பள்ளிமுனைப் பங்குத்தந்தை அருட்பணி. சீமான் மரியதாசன் அடிகளார், அருட்சகோதரிகள், பங்கு மேய்ப்புப்பணிச்சபை, பக்திச்சபைகள் மற்றும் பங்குமக்களின் ஒத்துழைப்போடு இத்திருவிழாவைச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். ●

யாழ் மறைமாவட்ட செய்தி

# யாழ் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான குறுங்கால பயிற்சிப் பாசறை



2019ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மறையாசிரியர்களுக்கான மூன்று மாத வதிவிடப்பயிற்சிக்கு தோற்றவிருக்கும் மறையாசிரியர்களின் தகைமையை உயர்த்தும் நோக்குடன், 2018 கார்த்திகை 18ம் திகதியிலிருந்து 24ம் திகதிவரை ஒருவாரகால துரிதபயிற்சி (Foundation Course) யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.

➡ 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# 27வது உலக நோயாளர் நாளுக்கு

## - திருத்தந்தை செய்தி -

27வது உலக நோயாளர் நாள், வருகின்ற பெப்ரவரி 11ஆம் திகதி கொல்கத்தாவில் சிறப்பிக்கப்படுகின்றது. இலாபம் மற்றும் வீணாக்கும் கலாசாரத்தை அகற்றுவதற்கு இன்றியமையாததாகிய, தாராள மனம் மற்றும் கொடை எனும் கலாசாரத்தை ஊக்குவிக்குமாறு ஒவ்வொரு நிலையிலும் வாழ்கின்ற அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கத்தோலிக்க நலவாழ்வு நிறுவனங்கள், வெறும் வர்த்தக நோக்கில் சிக்கிக் கொள்ளாமலும், இலாபத்தைவிட தனிநபர்கள் மீது அக்கறை காட்டுமாறும் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நலவாழ்வு என்பது பிறரைச் சார்ந்து இருப்பது, பிறரோடு உறவு கொள்வது மற்றும் பிறரோடு உரையாடுவதாகும் எனவும், இதற்கு நம்பிக்கை, நட்பு மற்றும் தோழமையுணர்வு தேவைப்படுகின்றது எனவும் கூறியுள்ளார்.

வருகின்ற பெப்ரவரி 11 லூர்து அன்னை விழாவன்று கடைப்பிடிக்கப்படும் 27வது உலக நோயாளர் நாளுக்கென ஜனவரி 08ஆம் திகதி வெளியிடப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தியில் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### கொடை

"கொடையாகப் பெற்றீர்கள் கொடையாகவே வழங்குங்கள்" (மத்.10,8) என்ற நற்செய்தி திருச்சொற்களுடன் இச்செய்தியைத் தொடங்கியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொடை, மனத்தாராளம் ஆகியவை பற்றிய தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

மனித வாழ்வு கடவுளிடமிருந்து கொடையாகப் பெற்றதாகும், இக்காலத்தின் வீணாக்கும் மற்றும் புறக்கணிப்பு கலாசாரத்திற்கு மத்தியில் தனிமனிதப்போக்கு மற்றும் கூறுபட்டுள்ள சமுதாயத்திற்கு கொடை என்பது சவாலாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கொடை என்பது வெறுமனே பரிசுகளைக் கொடுப்பதல்ல மாறாக ஒருவர் தன்னையே இலவசமாக வழங்குவதுடன் உறவைக் கட்டியெழுப்புவதாகும் என்றுரைத்துள்ள திருத்தந்தை, கொடை கடவுளன்பின் பிரதிபலிப்பாகும் என்றும், நாம் ஒவ்வொருவருமே



ஏழைகள் தேவையில் இருப்பவர்கள் மற்றும் கைவிடப்பட்டவர்கள் என்றும் கூறியுள்ளார். இந்த ஓர் ஏற்பானது தனிப்பட்ட வாழ்விலும், சமுதாய வாழ்விலும் நன்மையை ஊக்குவிக்க, பொறுப்புடன் செயற்பட நம்மை இட்டுச் செல்கின்றது என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

### புனித அன்னை தெரேசா

இவ்வாண்டு உலக நோயாளர் நாள் கொல்கத்தாவில் சிறப்பிக்கப்படுவதைக் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, பிறரன்பின் எடுத்துக்காட்டான புனித அன்னை தெரேசா அவர்கள், ஏழைகள் மற்றும் நோயாளர் மீது கடவுளின் அன்பு வெளிப்படையாகத் தெரியுமாறு விளங்கினார் என்றார்.

இனம், மதம், கலாசாரம், மொழி போன்ற வேறுபாடுகளின்றி, ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னலமற்ற அன்பைக் காட்டுவதே நமது ஒரே செயலாக இருக்க வேண்டுமென்பதை அன்னை தெரேசா நமக்குப் புரியவைக்கின்றார் என்றுரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நோயாளர்களுக்கு மனத்தாராளத்துடன் பணியாற்றும் எல்லாரையும், தன்னார்வலர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகப்போக்கு நிறைந்துள்ள இவ்வுலகில், திருஅவையின் பிரசன்னத்தின் அடையாளங்களாகத் தொடர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டார். ●

# புறக்கணிப்பு, கடவுளின் அன்புக்கு எதிரானது



புறக்கணிப்பு கலாசாரத்திலிருந்து நம் இதயங்கள் குணமாக இறைவனிடம் மன்றாடுவோம் என்று திருத்தந்தை திருப்பலியில் கூறினார். அன்புகூர்வது எப்படி எனத் தெரியாத மனித சமுதாயத்தை அன்புகூர கடவுளே முதலடி எடுத்து வைத்தார், ஏனெனில் அவர் பரிவன்பும், இரக்கமும் உள்ளவர் என்று திருப்பலியில் மறையுரை வழங்கினார் திருத்தந்தை.

வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில், ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் பலுகியது பற்றிய நற்செய்தி வாசகம் (மாற்.6:34-44) மற்றும் கடவுள் முதலில் அன்புகூர்ந்தார் என்பது பற்றிப்பேசும் புனித யோவானின் முதல் மடல் (4:7-10) ஆகியவற்றை மையப்படுத்தி மறையுரை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### கடவுள் முதலில் அன்புகூர்ந்தார்

கடவுள் தம் மகன் இயேசுவை உலகிற்கு அனுப்பியதன் வழியாக அவர் முதலில் மனித சமுதாயத்தை அன்புகூர்ந்தார் நம் வாழ்விற்கு அர்த்தம் தந்தார் மற்றும் நம்மைப் புதுப்பித்து, புதுப்படைப்பாக்கினார் என்றும் திருத்தந்தை கூறினார்.

### மக்கள்திரள் மீது இயேசுவின் பரிவு

ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் பலுகியது பற்றிய சிந்தனைகளை வழங்கிய திருத்தந்தை, ஆயரில்லா ஆடுகள் போல் இருந்த மக்களைப் பார்த்து இயேசுவின் இதயம் இரங்கியது அவரால் பாராமுகமாய் இருக்க இயலவில்லை, அன்பு ஓய்வின்றி இருக்கும் அன்பு புறக்கணிப்பைச் சகித்துக் கொள்ளாது மாறாக அன்பு பரிவிரக்கமுள்ளது அன்பு என்பது ஒருவர் தன் இதயத்தில் இரக்கம் சுரக்க வைப்பது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் சீடர்கள் மக்கள் மீது ஆர்வம் காட்டவில்லை அன்புகூர்வதும், இரக்கம் காட்டுவதும் எப்படி என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது என்றுரைத்த திருத்தந்தை, உரோம் நகரில் வீடின்றி வாழ்கின்ற ஒரு பெண் பற்றியும் கூறினார்.

➡ 14

# இயேசுவின் வளர்ப்பில் புனித யோசேப்பு



புனித யோசேப்பு இயேசு வளருவதற்கு உதவினார். அவருக்கு தொழில் கற்றுக்கொடுத்தார், ஆனால் அவர் இயேசுவை ஒருபோதும் சொந்தம் கொண்டாடவில்லை. இயேசுவின் வளர்ப்புத் தந்தையான புனித யோசேப்பின் நற்பண்புகள் பற்றி மறையுரையாற்றிய எம் திருத்தந்தை பிரான்சிஸ், வத்திக்கானின் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் இவ்வாறு கூறினார். யோசேப்பு ஒரு நீதிமான். சட்டத்தைக் கடைப்பிடிப்பவர். தொழிலாளர். தாழ்மையுள்ளவர். மரியாவுக்கு மண ஒப்பந்தமானவர் என்று அவர் பற்றி திருவிவிலியம் வழியாக அறிகின்றோம் எனவும் அவரின் பணியை கடவுள் வெளிப்படுத்திய பின்னர் மறுபேச்சின்றி அமைதியாக இறைமகனின் வளர்ச்சியில் துணையிருந்தார் என்றும் திருத்தந்தை கூறினார்.

➡ 15

# எந்தச் செபமும் கேட்கப்படாமல் இருப்பதில்லை!

நாம் இடைவிடாது, மனஉறுதியுடன் தொடர்ந்து செபிக்க வேண்டும். ஏனெனில் எந்தவொரு செபமும் இறைத்தந்தையால் கேட்கப்படாமல் இருப்பதில்லை.

வானகத்தந்தையை நோக்கி நம் ஆண்டவர் செபிக்க கற்றுக்கொடுத்த செபம் பற்றிய தமது மறைக்கல்வியுரையில், மிகவும் உறுதியுடன் செபிக்க வேண்டியதன் அவசியம் குறித்து இயேசுவின் போதனை பற்றி எடுத்துரைத்தார். கிறிஸ்துவின் வாழ்வு முழுவதும் செபத்தில் ஆழ்ந்திருந்தது. இயேசுவின் இந்த செப வாழ்வு அவர் தம் இறைத்தந்தையோடும், அவரது ஒவ்வொரு செயலையும் வழிநடத்திய தூய ஆவியாரோடும் ஒன்றித்திருந்ததிலிருந்து பிறந்ததாக அமைந்திருந்தது. இயேசுவின் இடைவிடாத செபத்தை அனைத்திற்கும் மேலாக அவரது திருப்பாடுகள் நிகழ்வுகளில் காண முடிகின்றது. இறுதி இராவுணவின்போது பேதுரு விசுவாசத்தில் உறுதியாய் இருக்குமாறு இயேசு செபித்தார். அந்நேரத்தில் இயேசு பேதுருவிடம் "நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன் நீ மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து" என்றார். (லூக்.22:32). இயேசு சிலுவையில் உரைத்த இறுதி வார்த்தைகள் மன்னிப்புக்காகச் செபிப்பதாகவும் தம் தந்தையின் விருப்பத்தில் நம்பிக்கை வைப்பதை வெளிப்படுத்துவதாகவும் இருந்தன. செபிப்பது எப்படி என தங்களுக்குக் கற்றுக்கொடுக்குமாறு சீடர்கள் இயேசுவிடம் கேட்டபோது அவர் "எங்கள் வானகத்தந்தையே" என்ற சொற்களை அவர்களுக்கு அளித்தார். தந்தையே எனச் சொல்வது எத்துணை அழகானது. ஆயினும் மன உறுதியுடன் மனந்தளராமல் செபிக்க வேண்டும். நம் விண்ணப்பங்களுக்கு இறைத்தந்தைப் பதில் அளிப்பார் என்பதில் நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுப்பதற்காக இயேசு இரு உவமைகளைச் சொன்னார்.



கடவுள் நல்ல இறைத்தந்தையாக நம் ஒவ்வொரு செபத்திற்கும் அவருக்கு உகந்த நேரத்திலும், அவரின் மீட்பளிக்கும் திட்டத்திற்கு ஏற்ற வகையிலும் பதில் அளிக்கின்றார். இறைத்தந்தையின் அந்த திட்டம் புதிராக இருந்தாலும் நம்முடையவர் அன்புத்தந்தை என்பதிலும் இவர் ஒவ்வொரு மனித இதயத்திலும் நிறைந்திருக்கும் மகிழ்வுக்காக ஏங்கும் ஆவலை நிறைவேற்றுவதற்கு ஏக்கமாய் இருப்பவர் என்பதிலும் நாம் உறுதியாய் இருக்கலாம்.

"எங்கள் வானகத்தந்தையே" என்ற தலைப்பில் தனது மறைக்கல்வியுரையை இவ்வாறு நிறைவு செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ். அதன்பின்னர் இந்த நிகழ்வில் அமர்ந்திருந்த எல்லோரையும் குறிப்பாக இளையோர், வயது முதிர்ந்தோர், நோயாளர் மற்றும் புதுமணத் தம்பதியரை வாழ்த்தினார். இறுதியில் அனைவருக்கும் தனது அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ●

# கண்ணீர் துளிகள் வாழ்வை வளப்படுத்துகின்றன!

## – திருத்தந்தை –

"கடினமான சூழல்களைச் சந்திக்கும் வேளையில் கண்ணீர் வடிக்க அஞ்சவேண்டாம்: கண்ணீர் துளிகள் வாழ்வை வளப்படுத்துகின்றன. பரிவினால் உருவாகும் கண்ணீர் இதயங்களையும், உணர்வுகளையும் தூய்மையாக்குகின்றது."

மனவருத்தம் கொண்டு அல்லது மற்றவரின் துன்பம் கண்டு கண்ணீர் வடிப்பது நம் ஆன்மாவுக்கு நல்லது என்பதைத் தன் மறையுரைகளிலும், செய்திகளிலும் வெளியிட்டுவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மீண்டும் ஒருமுறை, கண்ணீர் வடிப்பதன் நன்மைகளை தன் டுவிட்டர் செய்தியில் வெளியிட்டுள்ளார்.

"கடினமானச் சூழல்களைச் சந்திக்கும் வேளையில் கண்ணீர் வடிக்க அஞ்சவேண்டாம்: கண்ணீர் துளிகள் வாழ்வை வளப்படுத்துகின்றன. பரிவினால் உருவாகும் கண்ணீர் இதயங்களையும், உணர்வுகளையும் தூய்மையாக்குகின்றது" என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியாக வெளியாயின.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையின் தலைமைப்பொறுப்பை ஏற்ற 2013ஆம் ஆண்டு, செப்ரெம்பர் 16ஆம்



திகதி திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாளன்று நிறைவேற்றிய திருப்பலியில் "சிலுவையின் மறைபொருளைப் புரிந்துகொள்ள முழந்தாள்படியிட்டு செபிப்பதோடு, கண்ணீர் சிந்துவதும் உதவியாக இருக்கும். நாம் சிந்தும் கண்ணீர், இந்த மறைப்பொருளுக்கு அருகே நம்மை அழைத்துச் செல்லும்" என்று கூறினார்.

➡ 15

# மரியா, புதிய ஆண்டில் நம்முடன் வழிநடப்பாராக!

வருடத்தின் முதல் நாள் அதாவது தை மாதம் முதலாம் திகதி கடவுளின் தாய், புனித கன்னிமரியா என்ற விழாவை திருஅவை கொண்டாடுகின்றது. 1974ஆம் ஆண்டில் புனித திருத்தந்தை 6ஆம் பவுல் அவர்கள், Marialis Cultus எனப்படும் திருத்தூது கொள்கை வழியாக, தை முதல் நாளில் இவ்விழா சிறப்பிக்கப்பட வேண்டுமென அழைப்பு விடுத்தார்.


அதற்கிணங்க வருடத்தின் முதலாம்நாள் இவ்விழா பெருவிழாவாக சிறப்பிக்கப்படுகின்றது. திருத்தந்தை "கடவுளின் தாயான மரியா, இப்புதிய ஆண்டில் நம்மைப் பாதுகாத்து நம்முடன் வழிநடப்பாராக நம் இதயங்களிலும், உலகிலும் தம் திருமகனின் அமைதியைக் கொணர்வாராக" என செபித்தார். மரியாவைப் பற்றிய 4 விசுவாசக் கோட்டுகளில் "மரியா கடவுளின் தாய்" என்ற கோட்பாடே முதன்மையானதும், பழமையானதுமாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரை

# தனிமனித புதுப்பித்தல்

அருட்பணி. நெவின்ஸ் யோகராச் பீரிஸ், மன்னார் மறை



**முன்னுரை**

வாழ்வு என்பது ஒரு தொடர் பயணம். இத்தொடர் பயணத்தில் நாம் பலவற்றை தேடி அலைகின்றோம். இத்தேடல் கருவறை தொடங்கி கல்லறை வரை நீடிக்கின்றது. நம்வாழ்க்கை முழுவதும் எதையெதையோ தேடுகின்றோம். பலவேளைகளில் எதை தேடுகின்றோம்? ஏன் தேடுகின்றோம்? யாரைத்தேடுகின்றோம்? என்று புரியாமலேயே தேடுகின்றோம். இருப்பினும் தொடர்ந்து தேடுகின்றோம்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று சொன்னார்களே. அதைப்போல் சொத்து, சுகங்களைத் தேடுகின்றோம். அறிவைத்தேடுகின்றோம். பல மைல்கள் கால் நடையாகச் சென்று இறையருளைத் தேடுகின்றோம். மனிதஉறவுகளைத்தேடி அலைகின்றோம். இவ்வளவு தேடியும் நம் உள்ளங்கள் நிறைவு காண்பதாக இல்லை. ஆகவே மீண்டும் மீண்டும் தொடர் தேடலில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறோம். உண்மையிலேயே நமது தேடல் எதை நோக்கி இருக்கின்ற தென்றால், நாம் நம்மையே தேடிக்கொண்டு இருக்கின்றோம். நமக்குள் உள்ள உறவின் இரகசியத்தை, நமக்கும் உலகிற்கும் உள்ள தொடர்பை, நமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவைத்தான் தேடிக்கொண்டிருக்கின்றோம். சுருங்கக்கூறின் நம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்க நினைக்கின்றோம். இந்த வகையில், கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய எமது ஆன்மீக பயணத்தில், நாம் இன்னும் இன்னும் முன்னேறிச் செல்ல, ஆழத்திற்கு சென்று வலைகளை போடுங்கள் என்று ஆண்டவர் அழைப்பதைப் போல (லூாக் 5:4), எனக்குள்ளே சென்று, என்னோடு எனக்குள்ள தொடர்பை ஆழப்படுத்த, எனக்கும், என் சக மனிதர்களிற்குமிடையேயான உறவைப்புதுப்பித்து கொள்ள, எனக்கும் இயற்கைக்கும், அதற்கு மேலாக உள்ள இறைவனுக்குமிடையிலான நெருக்கத்தை அதிகரித்துக் கொள்ள, 2019-புதுப்பித்தல் ஆண்டு எமக்கு அறைகூவல் விடுக்கின்றது.

**தனிமனித புதுப்பித்தல்**

பருவ மாற்றம் என்பது இயற்கையில் ஏற்படுகின்ற ஒன்று. இந்த பருவ மாற்றங்களால், இயற்கையில் உள்ள அனைத்தும் பழையதைக் களைந்துவிட்டு, புதியதை அணிந்து கொள்கின்றன. புதுப்பொலிவோடு தம் பயணத்தை தொடர்கின்றன. இந்த புதிய மாற்றங்கள் வளர்ச்சியின் அடையாளங்கள்.

இந்த மாற்றங்கள் இயற்கையில் மாத்திரமல்ல, திருச்சபையின் வரலாற்றிலும், வாழ்விலும், வழிபாட்டிலும் காலத்திற்கு காலம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. பழைய பாவ வாழ்வை வாழ்ந்த மனுக்குலத்தை தன் திருமகன் வழியாக புதுப்பித்த கடவுள், கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் எம் எல்லோரையும் புதுவாழ்வு வாழ அழைக்கின்றார் (உரோ.5). கிறிஸ்தவ வாழ்வு என்பதே ஒரு புதுப்பிக்கப்பட்ட வாழ்வாகும். எனவே திருமுழுக்கின் மூலமாக நாம் பாவத்திற்கு மரித்து, புதுவாழ்விற்கு உயிர்த்தெழுகின்றோம். அதைத்தான் பாவம் நீக்கப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட வாழ்வு என்று அழைக்கின்றோம்.

இந்தவகையில் தனிமனித புதுப்பித்தல் என்பது தொடக்க கால திருச்சபையிலே இரண்டு, மூன்று வருட கால கடும் தயாரிப்பிற்கு பிறகு, நம்பிக்கையை ஆழப்படுத்தலின் பின்பு, இறைமனித உறவின் புதுப்பித்தலிற்கு பிறகே திருமுழுக்கு என்ற திருவருட்சாதனத்தோடு தொடங்கி வைக்கப்பட்டது. கொன்ஸ்ரன்ரைன் அரசன் காலம் வரை (கி.பி 313) இந்த தனிமனித புதுப்பித்தலானது நடைமுறையிலே, ஆதிக்கிறிஸ்தவ வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்ந்த ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அன்றாட வாழ்க்கைப்பாடமாக அமைந்திருந்தது.

ஆனால் கிறிஸ்தவம் அரசமயமாக்கப்பட்ட காலத்திற்குபிறது, நம்பிக்கை வாழ்வு மங்கத்தொடங்கி திருமுழுக்கு என்பது வெறும் சடங்காசாரமாக மாறத்தொடங்கியது. கிறிஸ்தவ வாழ்வு சடங்கு சம்பிரதாயங்களுக்குள்ளே மூழ்கிப்போனது. இந்த நிலையில்தான் திருச்சபை வாழ்விலே புதுப்பித்தலை, புதிய மாற்றத்தைக் கொண்டுவர தனிப்பட்ட ரீதியில் பல புனிதர்கள், துறவிகள்கிறிஸ்தவ வாழ்வை வாழ காடுகளுக்கும், வனாந்தரங்களுக்கும் தனிமையை தேடிச் சென்றதையும், துறவற மடங்களை ஆரம்பித்து செப, தப, ஒறுத்தல் வாழ்க்கை நெறியை, மாற்றத்தை தனிமனிதனிலும், திருச்சபையிலும் கொண்டுவந்ததை காணலாம்.

திருச்சபை வரலாற்றிலே, காலத்திற்கு காலம் பல சங்கங்கள் திருச்சபை தந்தையர்களால் கூட்டப்பட்டு திருத்தத்திற்கான, மாற்றத்திற்கான, முன்னேற்றத்திற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவ்வாறு இதுவரை 21 சங்கங்கள் கூட்டப்பட்டிருந்தாலும், சென்ற நூற்றாண்டிலே கூட்டப்பட்ட இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்தான் திருச்சபையின் வாழ்விலும், வளர்ச்சியிலும் ஓர் புதுப்பித்தலை ஏற்படுத்துவதற்கான சங்கமாக அமைந்தது. 'திருச்சபையின் யன்னல்களைத் திறந்து விடுங்கள், சுத்தமான காற்று உள்ளே வரட்டும் (Open the windows of the Church, let the fresh air come in) என்று திருத்தந்தை 23ஆம் அருளப்பர், திருச்சபை முழுவதற்கும் புதிய இரத்தம் பாய்ச்சப்படவும், புதிய சிந்தனைகளும், மாற்றங்களும் திருச்சபைக்குள்ளேயும், வெளியேயும் ஏற்படவேண்டும் என்ற அழைப்பை விடுத்தார்.

இன்று 2ம் வத்திக்கான் திருச் சங்கம் நிறைவுற்று 50 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையிலே, திருச்சபையிலே பல மாற்றங்களும், மறுமலர்ச்சிகளும், புரட்சிகர சிந்தனைகளும், செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதற்கு அடிப்படைக்காரணம் திருச்சபையின் அங்கத்தினர்களாகிய தனிமனிதர்களில் ஏற்பட்ட மாற்றமும், புதுப்பித்தலுமே.

நமது வாழ்வின் நிறைவு எமக்குள் மாத்திரமல்ல, நம்மைக் கடந்து நமக்கு அப்பால் இருக்கிறது. எமது கிறிஸ்தவ, ஆன்மீக வாழ்வு என்பது இந்த மையத்தை நோக்கிய தேடலாகும். நாம் எமது வாழ்விலே ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்ள எமது தனிப்பட்ட ஆன்மீகம் வலுப்பெறுகிறது, உருப்பெறுகிறது, முதிர்ச்சி அடைகின்றது. இவ்வாறு இது மாபெரும் சக்தியாக உருவெடுத்து மனிதர்களை உண்மையான மனிதர்களாக வாழவைக்கிறது. மனித நிலையையும் கடந்து தெய்வீக நிலைக்கு அழைத்துச் செல்கிறது. தன்னலத்தை துறந்து பிறர்நலத்திற்கு அர்ப்பணிக்கத் தூண்டுகிறது. இவ்வாறான தனிமனித ஆன்மீக புதுப்பித்தலை நோக்கித்தான் நாம் இவ்வாண்டிலே பயணிக்கப்போகின்றோம். ●

(அடுத்த இதழில் தொடரும்)

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# குடும்ப வாழ்வைப் புதுப்பித்தல்

# குடும்பங்கள் தங்களைப் புதுப்பிக்க அழைப்பு

அருட்தந்தை அ. பிலிப்

**முன் சிந்தனை**

ஆண், பெண் இருபாலாரின் ஆளுமைகள் இயல்பாகவே ஒருவரோடு ஒருவர் ஈர்ப்புத் தன்மையில் இணைந்து போகக்கூடியவையாக வானகத் தந்தை படைத்துள்ளார். இது குடும்ப வாழ்வின் அன்புறவிற்கு அவரின் ஒரு மாபெரும் கொடை. குடும்ப வாழ்வில் இணையும் இவ்விருவரும் தங்கள் ஆளுமைகளின் ஒருமைப்பாடுகளை அழுத்தும் போது சேர்ந்து வாழ்வது இலகுவாக இருக்கின்றது. மாறாக வேறுபாடுகளை அழுத்தினால் தங்களிடையே விரிசலையே இவர்கள் உண்டாக்குகின்றார்கள். திருமணம் செய்த தொடக்கத்தில் இவ்விரிசலை இவர்கள் பெரிதாக எடுப்பதில்லை. காலப்போக்கிலே பிள்ளைகள் பிறந்த பின்னர் இது மேலும் பெரிதாகி விரிவடைகின்றது. அத்தோடு பிள்ளைகளும் வளர, வளர இவர்கள் சேர்ந்து வாழவும் இயலாது, பிரிந்து போகவும் முடியாது திணறுகிறார்கள். காலமெல்லாம் இவர்கள் மக்களின் பார்வைக்கு மட்டுமே ஒரு குடும்பம். தங்களின் பார்வைக்கு நரகம். இவ்வாறான குடும்பங்களே தங்களைப் புதுப்பித்துக்கொள்ள முடிவெடுக்க வேண்டும். கட்டாயத்தால் இவர்களை எவரும் புதுப்பிக்க முடியாது. ஒருவர் ஒரு பொருளையோ அல்லது ஒரு இடத்தையோ புதுப்பிக்கலாம். ஆனால் ஒரு ஆளைப் புதுப்பிக்க முடியாது. ஒருவர் தன்னைத் தானே புதுப்பிக்கா விட்டால் வேறு எவரும் இவரைப் புதுப்பிக்க முடியாது.

**அ. குடும்பத்தைப் புதுப்பித்தல்**

குடும்பத்தைப் புதுப்பித்தல் என்பது கணவன் மனைவி, பிள்ளைகள் அனைவரும் தங்களைத் தாங்களே புதுப்பித்துக் கொள்வதில் தங்கியுள்ளது. இவர்கள் தங்களைப் புதுப்பிக்க உதவி செய்வதே பங்குத்தந்தையின் பணி. ஒவ்வொரு குடும்பமும் தனித்தன்மை கொண்டதால் புதுப்பித்தலும் தனித்தனியே இடம்பெற வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பங்கில் உள்ள எல்லாக் குடும்பங்களையும் ஒன்றுசேர்த்து புதுப்பித்தல் உரைகள் வழங்குவதாலோ அல்லது மகா ஞான ஒடுக்கம் போன்ற தியானங்களை ஒழுங்கு செய்வதாலோ புதுப்பித்தல் ஒருபோதும் நிகழ்வதில்லை. இது கணவன் மனைவி இருவரையும் சேர்ந்த விடயம் என்பதால் இருவரும் தனித்திருந்து இம்மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்.



**ஆ. குடும்ப உறவை பலவீனப்படுத்தும் அல்லது முற்றாகப் பாதிக்கும் சில காரணிகள்**

1. சிந்திப்பதில் சேர்ந்து போகாமை
2. விருப்பு வெறுப்புக்களில் ஒத்துப்போகாமை
3. உடல் உறவில் புரிந்துகொள்ளாமை
4. மூன்றாம் தலையீட்டை விலக்காமை
5. தொடக்கத்தில் இருந்தே சேர்ந்து செபிக்காமை

**சிந்திப்பதில் சேர்ந்து போகாமை**

காதலர் இருவர் கருத்தொருமித்து வாழ்வதே இன்பம் என்பது வள்ளுவர் கூற்று. இது கணவர் சிந்திக்கும் ஒரு விடயத்தை மனைவி அவரோடு சேர்ந்து சிந்திப்பதையும், மனைவி சிந்திக்கும் ஒரு விடயத்தை கணவர் அவரோடு சேர்ந்து சிந்திப்பதையும் ஒத்திருப்பதைக் காட்டுகின்றது. இதனால் எண்ணத்தில் இவர்களுக்குள்ள இறுக்கமான பிடிப்பு சிறிது சிறிதாக வளர்ந்து வருவதால் இவர்கள் ஒருவர் இல்லாது மற்றவர் வாழ முடியாத நிலையை உருவாக்கிக் கொள்ளுகின்றார்கள். சிந்திப்பதில் சேர்ந்து போகாத நிலை திருமணத்தின் பின்னைய காலத்தில் தம்பதிகளிடையே ஏற்படுவதில்லை. இது திருமணத்தின் ஆரம்ப காலத்தில் இருந்தே வளர்ந்து வருகின்றது. சிந்திப்பதில் சேர்ந்து போகாத நிலையே இவர்களிடையே சந்தேகத்தையும், நியாயப்படுத்துதலையும் கொண்டுவருகின்றது. எண்ணத்தில் ஒருவர் இடம் பிடிக்காத போது அவர் வேறு எங்கோ இருக்கின்றார் என்று எண்ணுவதும் இயல்பே. எண்ணத்தில் நிரந்தரமாக இடம் பிடித்து விட்டால் அவர் எங்கேயும் இருக்க மாட்டார். என்னில் மட்டும் தான் இருப்பார் என்ற எண்ணம் உறுதியாகின்றது.

மூன்றாம் தலையீட்டை முற்றாக விலக்காவிடில் குடும்பம் குடும்பமாகப் பயணிக்க முடியாது.

**விருப்பு வெறுப்புகளில் ஒத்துப் போகாமை**

இது இதயத்தில் இடம்பெறும் நிகழ்வு. இங்கே பெற்றுக்கொள்வதை விட விட்டுக்கொடுப்பதே அதிகம். சுருங்கச் சொன்னால் ஒருவர் ஒருவருக்காகத் தியாகம் செய்ய முந்திக் கொள்ளுகிறார்கள். சிந்திப்பதில் சேர்ந்து போனால் இந்தநிலை இவர்களுக்கு இயல்பாகவே வந்துவிடும். சிந்திப்பதில் சேர்ந்து போக இவர்கள் தயங்கினால் தியாகத்திற்குப் பதிலாக தன்நலம்தான் தலைதூக்கும். ஒருவர் தனக்கு ஏற்றவாறு தான் மற்றவர் வாழவேண்டும் என்று எதிர்பார்ப்பாரே தவிர மற்றவரைத் திருப்திப்படுத்த தான் வாழமாட்டார்.

**உடல் உறவில் புரிந்து கொள்ளாமை**

எண்ணத்திலும், இதயத்திலும் ஒத்துப்போகும் தம்பதியருக்கு உடல் உறவில் புரிந்துணர்வோடு ஒத்துப்போவது இயல்பான விடயம். எண்ணத்தில் ஏற்படும் சிக்கல் இதயத்திற்கு இறங்கினால் அது உடலின் உறவில் பெரிய பூகம்பமாக வெடிக்கும். அநேக குடும்பங்களின் பிரச்சனைகளின் பின்னணியில் உடல் உறவில் ஏற்படும் விரிசல்களே காரணங்களாக இருப்பதை ஆராய்ந்தால் தெரியவரும். காமத்தைக் கடந்த தியாகம் உடல் உறவில் இடம்பெறும்போதே புரிந்துணர்வும் இவர்களிடையே உண்டாகும். ●

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருடம் - பொங்கல் சிறப்பிதழ்

# பிறந்திருக்கும் புத்தாண்டு




கடந்தகால கசப்பான அனுபவங்கள், துயரமான சம்பவங்கள், மறக்கமுடியாத வேதனைகள், தனிமையில் தவித்த தருணங்கள், கண்ணீரில் கரைந்த நேரங்கள், உறவுகளை, உடன்பிறப்புக்களை இழந்த சோகங்கள், அனைத்தும் முடிவுபெற்று புதிய வாழ்க்கையின் பாதையில் பயணிக்க பிறந்திருக்கின்றது இப்புத்தாண்டு.

இறைவனின் இரக்கம் என்றும் பெரியது. அவரது இரக்கத்தினால் நாம் இயற்கையின் அழிவுகள், விபத்துக்கள் போன்ற ஆபத்துக்களிலிருந்து இன்றுவரை காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றோம். இப்புதிய வருடத்தில் காலடி எடுத்துவைத்திருக்கும் நாம் இறைவனின் மாபெரும் இரக்கத்தினால் எந்தவித துன்ப நிகழ்வுகளும் உலகத்தில் நடக்காமலிருக்க பாதுகாப்பாய் பிறக்கட்டும் இப்புத்தாண்டு. கருணையும், அன்பின் ஊற்றும், படைப்பின் ஆண்டவருமான இறைமகன் இயேசுக்கிறிஸ்துவின் பாதையில் புண்ணிய பூக்கள் பூத்து குலுங்கிட, வறுமைகள் ஒழிந்து, வளமைகள் பெருகிட, துன்பங்கள் ஓய்ந்து இன்பங்கள் பொழிய, சண்டை சச்சரவுகள் நீங்கிட, சமாதானம் வளர்ந்திட அன்பின் வடிவமாய் பிறந்திருக்கும் புத்தாண்டு அமைவதாக. தரித்திரரும், ஆதரவற்றோரும், கைவிடப்பட்டோரும், நோயாளிகளும் புதுவாழ்வைக்காண இறைவன் தன் சிறகுகளை விரித்து அவர்களின் பலவீனங்களையும், பாவங்களையும் மன்னித்து புதுவாழ்வு பெற்று மகிழ்ச்சியாக புலர்ந்திருக்கும் இப்புத்தாண்டு உலகில் வாழும் அனைத்து மக்களும், தமது அன்பைப் பகிர்ந்து பிறரன்பில் மகிழ்ந்து, இறையன்பில் நிறைந்து சமத்துவத்திலும், சகோதரத்துவத்திலும் வளர்ந்து, உறவுப் பூக்களால் மலர்ந்து, ஒற்றுமையில் இணைந்து மணம்வீச புலர்ந்திருக்கும் இப் புத்தாண்டு எல்லோருக்கும் நலமாக அமைவதாக.

வருடத்தின் முதல்நாளை இறைவனின் அன்னையாம் தாய் மரியிடம் ஒப்படைத்து தொடங்கியுள்ளோம். இறைவன் நமக்குக் கொடுத்த மாபெரும் கொடை நம் தாய் அன்னை மரியாள், அவ்வன்னையைப் போன்று அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அவர் வழியில் நடக்க வேண்டியது நம்முடைய பணியாகும். தாய் மரியன்னையைப்போல் இறைவனின் திருவுளத்தை ஏற்று வாழ்ந்து, பிறந்திருக்கும் இப்புத்தாண்டு புதுப்பொலிவுமிக்க புதிய நம்பிக்கையையும், புதிய வழிமுறைகளையும் கொடுக்கின்ற ஆண்டாக அமையும். இதற்காக இறைவனிடம் மன்றாடுவோம். அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். ●

## புத்தொளி வீசிடும் புத்தாண்டு...!

**அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம்.**

புலர்ந்திருக்கும் புத்தாண்டே புதுவாழ்வு கொண்டுவா!
மலர்ந்திருக்கும் மறு ஆண்டில் மாற்றங்கள் காணவா!
குலைந்திருக்கும் உறவுகளை நிலை நிறுத்திடவா...!
அலைந்து திரிவோர்க்கு ஆறுதல் அளித்திடவா...!

உலகை ஆழ்வோர் மனநிலை மாற்றிடவா...!
கவலை கலக்கம் கொண்டவர் நிலை போக்கிடவா...!
பசி, பிணி ஆற்றிட பாரினில் உதித்து வா...!
காசு, பணம் இல்லாரின் கவலை போக்கிடவா...!

களவு, பொய், காமப்பசி தனை நீக்கிடவா...!
அளவுக் கதிகமாய் குடி போதையைப் போக்கிடவா...!
ஏழை, எளியவரின் ஏக்கங்கள் தீர்த்திடவா...!
கோழையாய் அலைவோரின் குறைகளை போக்கிடவா....!

ஆன்மீகம், பிறரன்பு அதிகமாய் வளர்ந்திடவா...!
அனுதினமும் ஆண்டவர் இல்லமதை அபிஷேகம் செய்திடவா.!
குடும்பமாய் வாழ்வோரின் குறைகளை போக்கிடவா...!
குழந்தை இன்றி தவிப்போரின் குழப்பத்தை நீக்கிடவா......!

இழந்து போன வாழ்விற்கு எதிர்காலம் கொண்டுவா...!
இளைத்து களைத்தோரின் இன்னலைத் தணிக்கவா...!
புத்தாண்டே புத்தாண்டே புது மணம் வீசிடவா...!
புத்தாண்டே புத்தாண்டே புது ஒளி கொண்டுவா...! ●

# தமிழ் மக்களுக்கு




**எனது, 2019 புத்தாண்டு வாழ்த்தும், ஒரு வேண்டுகோளும்.**

**அன்பான சகேதரங்களே!**

நானும் இறைவனின் கொடையால் உங்களில் ஒரு தமிழ் மனிதன். இறைவன் உங்களையும், உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த சகலரையும் பிறக்கும் புத்தாண்டில் சுகமாகவும், சந்தோசமாகவும், ஒற்றுமையாகவும் வாழ அருள் புரிவாராக.

மனிதனாகப் பிறந்து, தமிழனாக வளர்ந்து கிறீஸ்துவின் சீடனாய் மக்களுக்கு பணிபுரிய அழைத்த இறைவனுக்கும், என்னுடன் கூடி வாழ்ந்து பணிசெய்த அனைவருக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன். அத்துடன் முதிர்ந்த வயதில் ஒரு பணிவான வேண்டுகோளையும் வைக்கின்றேன். 1956ஆம் ஆண்டு கொழும்பு கலாசாலை மாணவனாக இருந்த காலத்திலிருந்து தமிழரின் உரிமைக்காக உங்களுடன் எல்லாக் கட்டங்களிலும் எனக்குரிய வழியில் போராடி வருகின்றேன்.

அத்துடன் சர்வதேசத்துடனும், இந்நாட்டு பல்வேறு தலைவர்களுடனும், எமது தமிழ் மக்களுடனும், வெளிநாடுகளிலும், இலங்கையிலும் பல அனுபவங்களையும், அனுபவ அறிவையும் பெற்றிருக்கின்றேன். இதன் அடிப்படையில் நான் ஓர் பணிவான வேண்டுகோளை உங்கள்முன் வைக்க விரும்புகின்றேன். இதை நான் எனது புனித கடமையாகக் கருதுகின்றேன். தமிழராகிய எமக்கு இறைவன் கொடுத்த பல கொடைகளும், திறைமைகளும் நிறைய உண்டு என்பதில் சந்தேகமில்லை. அவைகளை நமது நீண்டகால போராட்டத்தில் பயன்படுத்தியுள்ளோம். இருந்தும் எமது இலட்சியத்தை இன்னும் அடைய முடியவில்லை. போராட்டம் தொடருகின்றது. விடுதலைப் பயணத்தில் பல தோல்விகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையினால் அவைகளை துணிவுடன் ஆராய்ந்து, எதிர்காலத்தில் பெரிய தவறுகள் செய்யாதிருக்க எனது அனுபவ அறிவில் சிலவற்றை கூற துணிகின்றேன். எமது விடுதலைப் போராட்டத்தின் பின்னடைவுகளுக்கு ஒரு முக்கிய காரணம் நாங்களே! நம்மில் வேரூன்றியிருக்கும் அடிமைத்தனங்களே!

சர்வதேசத்தையோ, மாற்றுக் கருத்துள்ள அரசியல் வாதிகளையோ குற்றம்சாட்டிக் குறை கூறலாம். ஆனால் எம்மை நாமே திருத்திக்கொள்ளாவிடில் நாம் ஒரு போதும் விடுதலை அடையமாட்டோம்! எமது போராட்டத்தின் சக்தி உணர்ச்சி வசப்பட்ட பேச்சல்ல. எம்மையும் எம் உரிமைகளையும் மீட்பதை ஓர் புனித இலட்சியமாக மதித்து, அதற்கான பரித்தியாகத்தை துணிவுடன் கொடுத்து எம்மிலிருக்கும் அடிமைத்தன ஏற்றத் தாழ்வுகளை, ஒடுக்கு முறைகளைத் துணிவுடன் களைந்து வாழ்வதே சக்தியாகும்.

விடுதலை ஒவ்வொருவருடைய உள்ளத்தில்தான் ஆரம்பிக்கின்றது. உள்ளத்தில் மற்றைய தமிழ் மக்களைப்பற்றி அடிமைத்தனமான ஒடுக்கு முறைகளை வைத்துக்கொண்டு இன விடுதலைக்காக வெளி சக்திகளுடன் போராடுவது வேடிக்கை. ஆகையால் அன்புச் சகோதரங்களே! நாம் எம்மை வீரத்துடன் சுய விமர்சனத்திற்கு உட்படுத்தி, களைய வேண்டியவற்றை களைந்து, ஒழுக்கம், ஒழுங்கு, ஒற்றுமையை வளர்த்து சுதந்திர மக்களாக முன்னேறுவோமாக! இறைவனின் ஆசி உங்களுடன்.

*அருட்பணி. எஸ்.ஜே. இம்மானுவேல், யாழ் ஆயர் இல்லம்.* ●

# பொங்கல் விழா




பண்டையகாலத்தில் விழாக்கள் எல்லாம் மதம் சார்ந்தவையாக இருந்தன. ஆனால் தமிழர்கள் நீண்டகாலமாக மதம், கடவுள் சார்பின்றி உழவையும், உழவரையும், உழவுக்கு உறுதுணையாக இருந்த கால்நடைகளையும் மையமாக வைத்து பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். சூரியனையும்; மழையையும் மற்றும் பூமித்தாயையும் நினைத்துப் பார்த்து நன்றி தெரிவிக்கும் விழாவாக இருக்கின்றது.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடுகின்ற உயரிய பண்பாட்டை எடுத்தியம்பும் விழா இது. உணவு கொடுத்து, உயிர்காக்கும் உழவுத்தொழிலே முதன்மையான தொழில் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். தமிழர்கள், உழவர்கள், உழவுக்கு உறுதுணையாக இருந்த கால்நடைகள் மற்றும் பூமி இவற்றில் இறைத்தன்மையைக் காண்பவர். ஆனால் உழவுத் தொழிலைத் தீண்டாத தொழில் என நினைத்தவர்களும் இருக்கின்றார்கள். இன்றும் இந்த சிந்தனை பலரிடமும் இருக்கின்றது. உழவர்கள் எவ்வளவுதான் உழைத்தாலும் வறுமை அவர்களைக் கொல்லுகின்றது. கடன் தொல்லைகளாலும், போதிய விளைச்சல் கிடைக்காமலும், சொத்துக்களை இழக்கின்றார்கள். அடுத்தவரின் அன்றாடப்பசியை நீக்கிட, நலத்தையும், வளத்தையும் வாரி வழங்கிய விவசாயிகளின், வாழ்வு வறண்ட நிலமாக இருக்கின்றது. ஏன் இந்த நிலைமை? சிந்திப்போம், செபிப்போம்.

### விவிலியம் காட்டும் பொங்கல் விழா

விவிலியத்தில் காணும் ஒவ்வொரு அறுவடை விழாவும் இஸ்ரயேலர் விடுதலை உணர்வை வளர்த்ததுபோல நமது அறுவடை விழாவும் விசுவாசிகளின் விடுதலைக்கான விழாவாக மாறிட சிந்திப்போம் செபிப்போம். "ஏழாம் ஆண்டு அதை ஓய்வு கொள்ளவும், தரிசாகக் கிடக்கவும் விட்டுவிடுவாய். உன் மக்களில் வறியவர்கள், தானாக விளைவதை உண்ணட்டும்." (விப. 23:11) "நீங்கள் பயிரிட்டதை அறுவடை செய்யும்போது வரப்பு ஓரக் கதிரை அறுக்க வேண்டாம், சிந்திக்கிடக்கும் கதிரையும் பொறுக்க வேண்டாம். திராட்சைத் தோட்டத்தில் பின்னறுப்பு வேண்டாம், சிந்திக்கிடக்கும் பழங்களைப் பொறுக்க வேண்டாம். அவற்றை எளியோருக்கும் அந்நியருக்கும் விட்டுவிடவேண்டும்" (லேவி.19:9-10, 23:11) எளியோரும், அந்நியரும் வாழ்வு பெற்றிட சிந்திப்போம். "உன் வயலில் விளைச்சல் அறுவடை செய்யும்போது அரிக்கட்டினை மறந்து வயலிலே விட்டு வந்தால், அதை எடுக்க திரும்பிப் போகாதே, அதை அந்நியருக்கும், அனாதைக்கும், கைம்பெண்ணுக்கும் விட்டுவிடு. அப்போது நீ மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசி வழங்குவார்." (இ.ச. 24:19). அநாதைகளையும், கைம்பெண்களையும் அரவணைத்து காத்திட சிந்திப்போம்.

ஆகவே உழவையும் உழைப்பையும், வார்த்தைகளால் அன்றி வாழ்க்கையால், அர்த்தப்படுத்துகின்ற நாளாக பொங்கல் திருநாள் அமையட்டும். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள உழவர்களை நன்றியோடு நினைப்போம். உழவுக்குத் தேவையாக விளைநிலங்களையும், கால்நடைகளையும், இயந்திரங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம். உழவர்கள் வாழ்வு சிறக்க வாழ்த்துகின்றோம்.

## தைத்திருநாள் மகிழ்வினிலே...

**K. அன்ரனி (தங்கன்) பொன்தீவுகண்டல்.**

காளைமாடு முன்செல்ல, கலப்பையிலே கரம்பிடித்து,
அழகாக வயல் உழுது, மணிமணியாய் நெல் விதைத்து,
வரப்புயர நீர்ப்பாய்ச்சி, செழித்துவரும் வேளையில்
களையெடுத்து வளரவிட்டு, கதிர்முற்றித் தலை வணங்கி,
மண்ணினை முத்தமிடும் மகிழ்வான வேளை தனில்
மாறாத பெருமிதத்தில் மகிழ்ந்திருப்பான் நம் விவசாயி!

அரிவாள் தனை கையிலெடுத்து, கதிர்தனை கத்தரித்தும்,
அடுக்கிவைத்தும் போராட்டத்தின் மத்தியில் போராடி
தனது நெல்மணிகளை குவித்தும் வைப்பான்.
அதனை அரிசியாய் மாற்றி, வீட்டின் முற்றத்திலே
பல வர்ணக் கோலமிட்டு, புதிய அடுப்பினை வைத்து,
புதுப்பானை தனிலே பொங்குகையிலே விவசாயி
மனமானது பொங்கி நிற்கின்றது.
மாறாத பெருமிதத்திலே மகிழ்ந்திருப்பான் விவசாயி!

புத்தாடை புனைந்தவராய், புன்னகையில் காட்சி தர,
உறவுகள் வருகைதந்து, வாழ்த்துக்கள் கூறி நிற்க,
சக்கரையும் கற்கண்டும் கலந்து செய்த பொங்கல் தனை
பரிமாறி உண்கையிலே உள்ளம் எல்லாம் பொங்கி நிற்க
மாறாத பெருமிதத்தில் மகிழ்ந்திருப்பவன் நம் விவசாயி!

தை பிறந்தால் நமக்கு எல்லாம் புது வழிபிறக்கும்.
வாழ்வின் துன்பம் ஓடிவிடும்.
செய்யும் தொழில் எல்லாம் கை கூடிப் பலன் கொடுக்கும்.
பஞ்சம், பசி, பட்டினி இல்லாச் சமுதாயம் உருவாகும்.
விவசாய நிலங்களெல்லாம் நல்விளைச்சல் எமக்குத்தரவும்,
தைப்பொங்கல் நன்நாளில் நல்லவனாம் இறைவனிடம்
நயமாக வேண்டிடுவோம் நலமாக வாழ்ந்திடுவோம்! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் மன்னா



## [லூக்கா நற்செய்தி]
## விவிலிய வினாவிடைப்போட்டி - 06
## போட்டி விதிகள்

1. விடைத்தாளிலேயே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.03.2018 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
7. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்தி விவிலிய மாதாந்த அஞ்சல் வழி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களே 'நற்செய்தியாளர் விருது' பெறும் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு தகுதிபெறுவார்கள்.
9. "விவிலிய வினாவிடைப் போட்டி - 06", மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும். ●

## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 07
### லூக்கா நற்செய்தி: 11-20 வரை
## விவிலிய வினாக்கள்

01. இயேசு பெருமான், தீர்ப்பு நாளில் எந்த இடத்து மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களை கண்டனம் செய்வார்கள் என்றார்?
02. இயேசு, யாரை பழித்துரைப்பவர் மன்னிப்பு பெறமாட்டார் என்றார்?
03. இறையாட்சியின் போது எந்த எந்த திசைகளில் இருந்து வந்து பந்தியில் அமர்வார்கள் என்று இயேசு கூறினார்?
04. இயேசு, தமக்கு சீடராய் இருப்பவருக்கு எத்தகைய தகுதி இருக்க வேண்டுமென்றார்?
05. இயேசு, விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி யாரைக்குறித்து உண்டாகும் என்றார்?
06. இயேசு, இருதலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது என்றார். அவர் உருவகப்படுத்தும் இரு தலைவர்கள் யார்?
07. இயேசு, பத்து தொழுநோயாளர்களை குணமாக்கிய போது, இயேசுவிடம் வந்து குணமாகியவர் எப்படியான முறையில் நன்றி கூறினார்?
08. இயேசு, மானிடமகன் வரும்போது மண்ணுலகில் எதைக் காண்பாரோ என்று கூறினார்?
09. சக்கேயு என்பவர் எத்தகையோர்களுக்கு தலைவராய் இருந்தார்?
10. உயிர்த்தெழுதலை மறுக்கும் தரப்பினர் யார்?

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 05 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
S. தனுஸ்,
பெரியகமம்,
பேராலயப்பங்கு.

**இரண்டாம் பரிசு:**
அ. அனுசியா,
பள்ளக்கமம்,
முருங்கன்பங்கு.

**மூன்றாம் பரிசு:**
விக்டர் ஆன் சௌமியா,
5ம் வட்டாரம்,
விடத்தல்தீவுபங்கு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 70 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 53 பேர்.

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 05இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. செ. ஸ்ரெவினி மார்க், 8ம் வட்டாரம் வங்காலைப்பங்கு.
02. டிவைன்சன் ஆன் அன்ரனி குருஸ், வங்காலைப்பங்கு.
03. அ. லக்சாயினி, பெரியமுறிப்பு, பெரியகுஞ்சுக்குளப்பங்கு.
04. அ. டிசாந்தினி, பள்ளிமுனைப்பங்கு.
05. அ. டிலோஜினி, பள்ளிமுனைப்பங்கு
06. கு. ஆன் சினேகா, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
07. S. ஆன் நிலுஜிக்கா கூஞ்ஞ, 9 வட்டாரம் வங்காலைபங்கு.
08. நி. மேரி நிஷாலினி, பள்ளிமுனைப்பங்கு.
09. றொ. டில்சிக்கா, யோசவாஸ்நகர்பங்கு.
10. சோதிதாசன் யூடிற் லெற்றிஷியா, எழுத்தூர்பங்கு.
11. ஜெ.பிறின்ஸ்ரன், பேராலயப்பங்கு.
12. ம. ஆன்மியூவிக்கா குலாஸ், தலைமன்னார்பங்கு.
13. P. வினுஜா, தலைமன்னார் ஸ்டேசன், தலைமன்னார்பங்கு.
14. யோ. ஜெரோஷா, பண்டிவிரிச்சான் பங்கு.
15. றொசாண், எமில்நகர், பேராலயப்பங்கு.
16. ஜெ. ஆன் பிறித்திக்கா பீரிஸ், எமில்நகர், பேராலயப்பங்கு.
17. எ. அன்ரனற் ஜெபர்சனா, வஞ்சியன்குளப்பங்கு.
18. ச. மேரி டிஷா, வஞ்சியன்குளப்பங்கு.
19. சிவகுமார்யோன் டிலைக்சன், பெரியகமம் பேராலயப்பங்கு.
20. சை. யேசுதாசன், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
21. S. டெல்சினா, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
22. ச. மெர்லின் தயாழினி, பறப்பாங்கண்டல் பங்கு.
23. அ. அகஸ்ரீனா, பறப்பாங்கண்டல்பங்கு.
24. ஜெ. தனுசிக்கா, பறப்பாங்கண்டல்பங்கு.
25. எ. அன்ரனி ஜெபர்ஷன், புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
26. வி. ஆன் றக்ஷினா, புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
27. அ. அன்ரனிஸ் டிலான், பெரியபண்டிவிரிச்சான்பங்கு.
28. J. பென்சியன், மாதாகோவில் வீதி, தலைமன்னார்பங்கு.
29. மெ.மேரி றொசேன் குருஸ், வங்காலைப்பங்கு
30. ஜெ. சார்லஸ் சேமின், நொச்சிக்குளம்,உயிலங்குளம்பங்கு
31. A. அபி, புதுக்கமம், வஞ்சியங்குளப்பங்கு.
31. சி. பிரவின், 8ம் வட்டாரம் விடத்தல்தீவுபங்கு.
32. R. ஜக்ஷனா, ஜோசவாஸ்நகர்பங்கு.
33. அ. தீபிகா றக்சாயினி, புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
34. R. அபிநயா, பள்ளிமுனைப்பங்கு.
35. அ. அன்ரனி ஷெரோன், வஞ்சியன்குளப்பங்கு.
36. அ. ஆன் சோபிக்கா, வஞ்சியன்குளப்பங்கு.
37. P. பவுஸ்ரினா, தோமையார் வீதி, தோட்டவெளிப்பங்கு.
38. பி. நிதுஷா, தாராபுரம், தோட்டவெளிப்பங்கு.
39. பி. டனிஸ்ரா, தாராபுரம், தோட்டவெளிப்பங்கு.
40. சு. ஆன் அபிஷனா, தோட்டவெளிப்பங்கு.
41. ம. டெரினா, தாஸ்கோட்டம், வேப்பங்குளம் பங்கு.
42. ம. திருசாலினி, தாஸ்கோட்டம், வேப்பங்குளம் பங்கு.
43. J. அபிஷா, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம் பங்கு.
44. R. லெயூமி, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம் பங்கு.
45. வி. ஆன் துஷ்மிதா, முதலைகுத்தி, உயிலங்குளம் பங்கு
46. தி. தனுஜான், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
47. அ. மேரி அனோலின், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
48. தி. அஜந்தினி, காத்தான்குளம்பங்கு
49. சே.நெகோமியா, முதலைகுத்தி, உயிலங்குளம்பங்கு.
50. றொ. மனோஜ், தாஸ்கோட்டம், வேப்பங்குளப்பங்கு.

# காலத்தால் அழியாக் கல்வி

**- அருட்பணி. ம.மரிசுதன் செபமாலைதாசர் சபை -**

**"இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால், நம்மை விளக்குமால், தாமுளராக் கேடின்றால், கல்வி போல் மம்மர் அறுக்கும் மருந்து."**

முறையாக நாம் கற்றுத் தேறும் அறம் சார் கல்வி இவ்வுலகில் இன்பமும், புகழும் ஈட்டித்தரும். அது மற்றவருக்குக் கொடுக்கக் கொடுக்க குறையாத செல்வம். நாம் யார் என இனங்காட்ட வல்லது. ஆதலால் கல்வி போல் அறியாமை ஆசை அறுக்கும் மருந்து எந்த உலகிலும் கண்டதில்லை என நாலடியார் நூலிலே (14:132) தெளிவுறக் கூறப்படுகின்றது. இதே கருத்தையே தெய்வப் புலவர் வள்ளுவரும் **"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றையவை"** (திருக்குறள்.400) அதாவது ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும். செல்வமுடையவராயினும் உலகம் அவரை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. அதேசமயம் கற்றவர் இழிகுலத்தை சார்ந்திருந்தாலும் மேல் நிலையில் வைத்துப் போற்றப்படுவர். கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பவை நிருபணமான உண்மைகள். கல்விச் செல்வம், பிறப்பு முதல் இறப்பு வரை நமக்கு உதவக்கூடிய தன்மை கொண்டது. ஆடை ஆபரணங்களால், அலங்காரங்களால் உருவாக்கப்படும் அழகைவிட கல்வியால் உண்டாகும் அழகே உண்மையான அழகு. இத்தகைய கல்வியின் சிறப்பை நன்குணர்ந்த பேரறிஞர் பிளேட்டோ **"படிக்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பது மேல்"** என வலியுறுத்தியுள்ளார். எனவே கல்விச் செல்வத்தை ஆதாயம் ஆக்கிக்கொள்ள நாம் 'பிச்சை எடுத்தல்' என்னும் இழிநிலைக்கு சென்றாலும் கற்றலே முதன்மையானது எனக் கருதப்படுகின்றது. **"கற்கை நன்றே, கற்கை நன்றே. பிச்சை புகினும் கற்கை நன்றே"** என வெற்றி வேற்கை என்ற ஏட்டில் புலவனும், அரசனுமான அதிவீரராம பாண்டியன் எழுதிவைத்தார்.

இன்றைய சமுதாயத்தில் பெரும்பான்மையான பெற்றோர் பிள்ளைகளை கற்பிக்க, நெற்றிவியர்வை குருதி சிந்தி, உழைத்துக் கஷ்டப்பட்டு படிப்பிக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளிடம் எந்த உதவியும் கைமாறாக எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கல்வி கற்று எதிர்காலத்தில் சொந்தக் காலில் **கல்வி இல்லா வீட்டை இருண்ட வீடென்க! படிப்பிலார் நிறைந்த குடித்தனம் நரம்பின் துடிப்பிலார் நிறைந்த சுடுகாடு என்க"** என்ற பாடல் வரிகளை தம் இதயத்தில் பச்சை குத்திய பெற்றோர், புத்திஜீவிகள், பிள்ளைகள் குடும்பத்தில் ஒளியேற்றி, அணையா தீபமாக ஒளிர்ந்து பிரகாசிக்கவேண்டும் என்று எண்ணுவது தவறா? சில அறிவிலிப் பெற்றோர் வங்கியில் சேர்க்கும் பணத்தை, வாங்கிவிட்ட நிலத்தை, நகைகளைத்தான் நிலையான வைப்பாக, எதிர்கால முதலீடாக நினைத்துப் பெருமிதம் அடைகின்றார்கள். நாலடியாரில் **"எச்சம் என ஒருவர் மக்கட்குச் செய்வன விச்சை மற் நல்ல பிற"** 134 வது செய்யுள் இப்படிப்பட்ட பெற்றோருக்கு நல்ல சவுக்கடி தருகின்றது. ஏனென்றால் ஒருவன் கற்கும் கல்வி தனியொருவனுக்கு மாத்திரமல்ல. அவன் வீட்டின், தேசத்தின் முன்னேற்றத்திற்கு வழிகோலும் தன்மை கொண்டது.

இன்று கல்வி என்னும் பெரும் செல்வம் தனியார்க்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டு அது வியாபாரமாக மாற்றப்பட்டுவிட்டது. அதனால் ஏழைகள் தரமான கல்வியறிவு பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏற்றத்தாழ்வுகளை வேரறுக்கவேண்டிய கல்வி முறையே சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை விதைத்துப் பரவ வழிகோலுகின்றது. இந்நிலையில் ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி எல்லோருக்கும் தரமான இலவச கல்வி வழங்கப்படவேண்டும் என்பதுதான் நல்லுள்ளங்களின் ஏகோபித்த விருப்பது இது மகாகவி பாரதியின் சிம்மக் குரலிலும் **"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல்... அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"** என்று ஓங்கி ஒலித்தது. இந்நிலையில் பாடசாலையில் ஆசிரியர்கள் மற்றவர் கையில் இயங்கும் மரப்பாவைகளை அல்லது உயிர்த்துடிப்பற்ற சிற்பங்களை உருவாக்காது தங்களையும், தங்கள் எதிர்காலத்தையும் செதுக்கிக் கொள்கின்ற சிற்பிகளை உருவாக்கவேண்டும் காலங்காலமாக கொத்தடிமைகளாக இருக்கும் தொழிலாளர்களை அல்ல, முதலாளிகளை உருவாக்கவேண்டும். மாணவர்கள் மனங்களில் கலை, கலாசாரம், பண்பாடு, அறம், ஒழுக்கம் என்பவற்றை விதைத்து, தேடலைத் தூண்டவேண்டும். போட்டி நிறைந்த உலகில் மதிப்பெண் மோகத்தில் மூழ்கிக்கிடக்கும் மாணவர்களை மீட்டெடுத்து, மதிப்பீடுகளிலும் கவனம் செலுத்த நெறிப்படுத்த வேண்டும்.

மாணவர்களும் என்னை எவரும் முன்னேற்றவில்லை, தூக்கிவிடவில்லை என்றதன் சார்பு மனப்பான்மையைக் களைந்து தமது உள்வாங்கும் திறனைக் கொண்டு புதியவற்றைக் கற்றுத்தேறவேண்டும். நாளுக்குநாள் புதியவற்றை கற்றுக்கொள்ள நல் நூல்களை வாசிப்பது சிறந்த உத்தியாகும். தகவல்களை அறிந்து, அதை உடனே மறக்கின்ற மாணவர்கள் மத்தியில் இந்தப் பழக்கம் குறைந்து கொண்டுபோகின்றது.


நல்ல நூல்கள் மானிடரின் மனக்காயங்களை ஆற்ற ஒத்தடமாக, மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர, உயரப்பறக்க சிறகுகளாக, பயணத்தில் தனிமையில் பக்கத்துணையாக அமைகின்றன. சிறந்த புத்தகங்கள் மூலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சென்று, அந்தக் காலத்தில் உலாச் சென்று, இலயித்து வாழலாம். மகான்கள், சித்தர்கள், பெரியார்கள், பேரறிஞர்கள், பேரரசர்களோடு உரையாடலாம். அவர்கள் திறமைகள், இராஜதந்திரங்கள், சாணக்கிய சிந்தனைகளை இரசித்துப் பெருமிதம் கொள்ளலாம். புத்தகம் வாசிக்கும் பழக்கம் நமது கற்பனா சக்தியை விருத்தி செய்து, பரந்துபட்ட எதிர்நோக்குச் சிந்தனையை உருவாக்குகின்றது. ஆகையினால்தான் எகிப்தியர்கள் நூல்களை 'ஆன்மாவுக்கு மருந்தாக' மதிப்பிட்டார்கள். நல்ல நூல்கள் உயரிய நோக்கு, பரந்த அறிவோடு, குருதியில் வீரம் கலந்து ஓடச் செய்து, வாழ்வுப் போராட்டத்தில் வாகை சூடச் செய்கின்றது. தீய நூல்கள் தீமையை வேரில் விதைத்து, குறுகிய நோக்கு, கெட்ட எண்ணம், தவறான வழிகளைக் காட்டி தீய, சுயநலம், அகந்தை கொண்டவர்களை உருவாக்குகின்றது: எடுத்துக்காட்டாக ஹிட்லரைக் கூறலாம். மெக்கிய வல்லியின் 'இளவரசன்' என்ற நூலும் அதன் கோட்பாடுகளும் அவர் தீயவழியில் நடக்க முக்கிய காரணங்களுள் ஒன்றாக இருந்தது. இனியவை நாற்பதில் பூதஞ்சேந்தனார் புலவர்

**பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய கற்றலிற் காழினியது இல் (இனி 40:3-4)** அதாவது பற்பல நாளும் பழுதுபடாத பாங்குடைய நன்மை பயக்கக்கூடிய நூல்களை கற்பதைப்போல மிக இனிய செயல் வேறு இல்லை என்று கூறியுள்ளார். ஆகவே பாலை மட்டும் பிரித்துப் பருகும் அன்னப் பறவையைப் போல ஆரோக்கியமாய் வாழும் காலத்திலேயே நன்நூல்களை பழுதறப் பயின்று, தெளிந்த நல்லறிவு பெற்று எதிர்காலத்தில் ஏற்றமுற வாழ்வோம். ●

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!


## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?



**ஒரு வருடத்திற்கான**
உள்நாட்டுச் சந்தா ரூபா 1000.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 4,000.00
எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 4471522, 023 - 2250789, 023 - 3233276


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடம்பனில் வடமாகாண கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம்





வடமாகாண கிறிஸ்து பிறப்புவிழாக் கொண்டாட்டம் கடந்த 27.12.2018 வியாழக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு அடம்பன் பிரதேசசபை விளையாட்டு மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலகம், மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து மன்னார் மறைமாவட்டத்தின் பங்குகளின் ஒத்துழைப்போடு இவ் ஒளிவிழா நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர். மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் கௌரவ றெஜினோல்ட் குரே, வடமாகாண பிரதம செயலாளர் திரு. அ. பத்திநாதன், மன்னார் மாவட்ட செயலாளர் திரு. சி.வே. மோகன்றாஜ், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. ச. சத்தியசீலன் மற்றும் மாந்தை மேற்கு,



மடு, மன்னார், முசலி ஆகிய பிரதேச செயலாளர்களும், குருக்கள், அருட்சகோதர சகோதரிகள், பங்குமக்கள் ஆகியோரும் அழைப்புப் பெற்று வருகை தந்திருந்தார்கள்.

இந்நிகழ்வை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. இ. நித்தியானந்தன், அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி. நவரட்ணம் மற்றும் அயல் பங்குத்தந்தையர்களோடு இணைந்து சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தனர்.•

## புதிய படைப்புக்கள்

### பள்ளிமுனையில் "இதய கண்ணைத் திறக்க" இறுவட்டு வெளியீடு



பள்ளிமுனைப் பங்குத்தந்தை அருட்பணி. ச. மரியதாசன் சீமான் அவர்களின் குருத்துவ வெள்ளி விழா ஞாபகார்த்தமாகவும், பள்ளிமுனைபங்கு உதயத்தின் நூற்றாண்டை வரவேற்கும் முகமாகவும், அவர்களின் முன்னோரால் பாடப்பட்டு வந்த புனித லூசியா ஆலய பாரம்பரிய பாடல்கள் தொகுப்பாக திரு. J.அன்ரனி அவர்களின் உதவியோடு 'இதயக் கண்ணைத் திறக்க' இறுவட்டாக வெளியிடப்பட்டது.

கடந்த 02.12.2018 திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு அன்று காலை இவ் இறுவட்டு வெளியீடு கலையருவி, சமூக தொடர்பு அருட்பணி மையத்தினால் பள்ளிமுனை புனித லூசியா ஆலய முன்றலில் நடாத்தப்பட்டது.•

### பேசாலையில் "அருள் ஒன்றே போதும்" இறுவட்டு வெளியீடு



பேசாலை மன். புனித பத்திமா மத்திய மகா வித்தியாலய நிர்வாகம் கடந்த 29.11.2018 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் ஒளிவிழா நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது. இந்நிகழ்வின் போது 'அருள் ஒன்றே போதும்" கிறிஸ்தவ கீதங்கள் என்ற இறுவட்டு வெளியிடப்பட்டது.

திருமதி. சின்னராணி பச்சேக், திரு. றொனிற்ரன் பச்சேக் ஆகியோரின் இசை உருவாக்கத்தில் வெளிவந்திருக்கும் இவ் இறுவட்டானது இப்பாடசாலையில் கல்வி பயிலும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இவர்களால் இப் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வை பாடசாலையின் பிரதி அதிபர் திரு. G.C. மெரில் குரூஸ் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். பிரதம விருந்தினராக பேசாலை புனித பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர். J. ஸ்ரனிஸ்லஸ், சிறப்பு விருந்தினராக பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி. S. தேவராஜா கொடுதோர், கௌரவ விருந்தினர்களாக திரு. S. பிறிமுஸ் சிறாய்வா (முன்னை நாள் வடமாகாண உறுப்பினர்), திரு. S.A. ராதா பெர்னாண்டோ (மன்னார் பிரதேச செயலகம்), வைத்திய கலாநிதி. திரு. மருசலீன் வசந்தன் குரூஸ் (மாவட்ட வைத்தியசாலை, தலைமன்னார்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.•

## தேவன்பிட்டியில் சிறப்பாக நடைபெற்ற கரோல் குழுப்பாடல் போட்டி










மீட்பராம் கிறீஸ்து பிறப்புத் திருவிழாவை சிறப்பிக்கும் வகையில் தேவன்பிட்டி அன்பியங்களுக்கிடையிலான பங்குமட்ட கரோல் பாடல் போட்டிகள் பங்குத்தந்தை அருட்பணி. டெனி கலிஸ்ரஸ் தலைமையில் கடந்த மாதம் புனித சவேரியார் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இப்போட்டி வழமையான போட்டிவிதிகளுக்கு அமைவாக போட்டியாளர்களின் சிறப்பான வெளிப்படுத்தல்களுடன் மிகச்சிறப்பாக அமைந்திருந்தது.•

## அன்பிய ஆணைக்குழுவின் கிறிஸ்து பிறப்பு ஒன்றுகூடல்




2018 ஆம் ஆண்டிற்கான அன்பிய ஆணைக்குழு வின் வருடாந்த கிறிஸ்து பிறப்புவிழா ஒன்றுகூடல் கடந்த 19.12.2018 அன்று அன்பிய ஆணைக்குழு மையத்தின் அன்பிய ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. சவுல்நாதன் அடிகளார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் முதன்மை அதிதியாக கலந்து கொண்டு வருகைதந்த பங்கு அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கு ஆணைக்குழு சார்பாக அன்பளிப்புக்களை வழங்கிவைத்தார். ஒவ்வொரு பங்கிலிருந்தும் இரண்டு அன்பிய ஊக்குவிப்பாளர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்கள்.•

## மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் ஆண்டிறுதி ஒன்றுகூடல்




கடந்த 19.12.2018 அன்று மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் ஆண்டிறுதி ஒன்றுகூடலும் கிறிஸ்து பிறப்புவிழா நிகழ்வும் மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், மறைமாவட்ட குடும்பப்பணி ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை, மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்பணி. நேசரெட்ணம் ஆகியோரும் வருகைதந்து சிறப்பித்தார்கள். நடைபெற்ற இந்நிழ்வில் பங்குகளிலிருந்து சிறப்பான நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. இந்நிகழ்வை ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம் அடிகளார் தலைமைதாங்கி சிறப்பாக நடத்தியிருந்தார்.•

## மன்னார் மறைமாவட்டத்தில் அருட்பணி. அ.கி. வேதநாயகம் அடிகளாரின் பணிகள்










அமரர் அருட்பணி அமிர்தநாதர் கில்லறியர் வேதநாயகம் மன்னார் மறைமாவட்டத்தில் பல பிரசித்தி பெற்ற ஆன்மீகத்தளங்களை அழகுற அமைத்து மன்னார் திருஅவையில் நன்மதிப்பை பெற்றவர். மேலே படம்போட்டு காட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் அவரது கை வண்ணங்களாகும். மன்னார் மறைமாவட்டம் சார்பாக அன்னாரை நன்றியோடு நினைத்து இறைவனில் அவரது ஆன்மா இளைப்பாற செபிக்கின்றோம்.•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 ஆண்டுகள் நிறைவுகாணும் பேசாலை இறைவார்த்தைக் குழு



நற்செய்தியை மேலும் அறிந்து அனுபவமாக்க பல முயற்சிகளை மேற்கொண்டு பணி வாழ்வில் 18 ஆண்டு நிறைவுகாணும் பேசாலை இறைவார்த்தைக் குழுவினரை நாம் அன்போடு பாராட்டி தொடர்ந்து உங்கள் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.•

## இளையோர் கலை விழா – 2019

அன்புடையீர்,

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் கலைவிழா நிகழ்வானது கட்டைக்காடு பங்கின் அனுசரணையுடன் 27.01.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணிக்கு மன்/கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருப்பதால் இந்நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு இளைஞர்களை உற்சாகப்படுத்தி மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதம விருந்தினர்
அருட்பணி. அ. விக்ரர் சோசை அடிகளார்
மறைமாவட்ட குருமுதல்வர்
மன்னார் மறைமாவட்டம்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான

metro Travels
தற்போது மன்னாரில்

எமது சேவைகள்

- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்
- சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
- உள்ளூர் / வெளியூர் பிரயாணிகளுக்குமான சுற்றுலா வசதிகள்
- சகல நாடுகளுக்குமான பயண காப்புறுதிகள்
- குழுப்பிரயாண வசதிகள்

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.



**Metro Travels & Tours (pvt) Ltd.,**
**#45 1/1, Main street Mannar, Sri Lanka.**
**Tel: 023 2251822, 2251823**
IATA Accredited Agent

**Head Office:** #345, Galle Road, Colombo- 04, Sri Lanka.
Tel: 011 2553440, 2553441
**Jaffna Branch:** #272/1, Stanley Road, Jaffna, Sri Lanka.
Tel : 021 2224647, 2219424
**Vavuniya Branch:** #45 B/1, 2nd Cross Street, Vavuniya, Sri Lanka.
Tel: 024 2226800, 2226801
**Trincomalee Branch:** #334, Court Road, Trincomalee, Sri Lanka.
Tel: 026 2227242, 2227244

# நீங்காத நினைவுகள்

## 11ஆம் ஆண்டு, 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சவிரி அந்தோனிப்பிள்ளை



திருமதி. அந்தோனிப்பிள்ளை செபமாலை

(பாலைக்குளி, அடம்பன்)

மலர்வு 23-02-1922
உதிர்வு 12-09-2008

மலர்வு 01-10-1927
உதிர்வு 19-03-2016

கடின உழைப்பின் கடமையுணர்வோடு கண்ணியமாய் வளர்த்தீர்கள் வாழ்வு வளம்பெற மெழுகாய் ஒளி தந்தீர்கள்.

நீதி, நியாயம், உண்மை, நேர்மைப் பண்பினை வளர்த்தீர்கள். வாழ்வுப் பாதையைக் காட்டி வழிநடத்தினீர்கள் அன்பு மழை பொழிந்து அரவணைத்தீர்கள் ஆனந்தமாய் நாம் வாழ வழி செய்தீர்கள் ஆறுதலின் ஊற்றாய் அமைந்தீர்கள் காலம் செய்த கோலத்தில் சடுதியாய் சாய்ந்தீர்களே. தாங்கமுடியவில்லை பிரிவுத்துயரை உங்கள் அன்பைத் தேடி அலைகின்றோம். ஆறுதல் தர வருவீர்களா?

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. அந்தோனி யேசுதாசன் (ஏசு)

(கொன்னையன் குடியிருப்பு, ஓலைத்தொடுவாய்)

மலர்வு : 15 - 02 - 1950
உதிர்வு : 01 - 10 - 2018

அன்போடு எம்மை அரவணைத்து,
குடும்பத்தின் கஷ்ட துன்பங்களைச் சுமந்து,
எங்களை வாழவைத்தீர்களே அப்பா!
கலங்கரை விளக்காய், காவல் தெய்வமாய்
எங்களைப் பாதுகாத்தீர்களே - உங்கள்
பிரிவால் ஏங்குகின்றோம். எமக்கு ஆறுதல் கூற,
அன்பு காட்ட எவருமில்லையே!
இறை இயேசுவுடன் நித்தியமாய் நீங்கள் வாழ
இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

பிரிவை நினைந்துருகும், பிள்ளைகள்,

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி. பிரான்சீஸ் மரிய செலின்

(ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி)

மலர்வு : 13 - 01 - 1955
உதிர்வு : 21 - 12 - 2018

இன்பத்திலும், துன்பத்திலும்,
உடல் நலத்திலும், நோயிலும்
பிரமாணிக்கமாய் இருப்பேன் என்று
எனக்கு வாக்களித்த படியே
என்னுடன் நடந்து கொண்டாள்.

எனக்கு நல்ல மனைவியாகவும்,
என்னைப் பெற்றெடுக்கா
தாயாகவும்
என்னை கவனித்து வந்தாள்.

எனக்கு ஒரு சின்னத் துன்பம்
நேர்ந்தாலும்
என்னருகில் இருந்து
ஒரு தாயைப் போலவே
கவனிப்பாள்.
நாங்கள் திருமணமாகி 42
வருடங்கள்
என்றும் பிரிந்திருந்ததில்லை.

நான் நேரம் கழித்து வீட்டிற்கு
வந்தாலும்,
தான் சுகவீனமாக இருந்தாலும்,
எனக்கு அவளே உணவளிப்பாள்.

அவள் என்னுடனும்
பிரச்சினைப்பட்டதில்லை.
ஊரில் யாருடனும்
பிரச்சினைப்பட்டதில்லை.

அது மட்டுமல்ல என் தாய், தந்தையர்.
சகோதரர்கள் யாருடனும்
பிரச்சினைப்பட்டதில்லை. என்
தாய் தந்தையரை அப்பையா, அப்பம்மா
என்றே அழைப்பாள்.

பிள்ளைகளை நல்ல
பாசத்தோடு வளர்த்தாள்.
என் கஷ்ட நேரங்களில் எல்லாம்
மனம் நோகாமல் என்னோடு
துணையாக வாழ்ந்தாள்.

கவிஞன் பாடியது போல்
உறவில் மனைவி, பரிவில் அன்னை
என்றபடி என்னோடு வாழ்ந்தாள்.

மொத்தத்தில் என்னை அவள்
தன்னுடைய மூத்த பிள்ளையாகவே
நினைத்திருந்தாள்.

பிரிவால் நினைந்துருகும்,
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மற்றும் உற்றார் உறவினர்கள், மச்சான்
மார்கள், மச்சாள்மார்கள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29 05 1955
உதிர்வு 13 01 2017

### திரு. பிலிப்பு யேசுராசா

(மாவிலங்கேணி, முருங்கன்)

"இறைவா என்னைக்காத்தருளும். உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்". தி.பா.16:1

உங்களைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள்
உருண்டோடி விட்டாலும், உங்கள்
பாச நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை!
எங்கள் நினைவுகளில் நீங்கள் நிலைத்து வாழ்வீர்கள்.
நீங்கள் செய்த நற்செயல்கள் யாவும் ஆண்டவன் அடியில்
உங்களை சேர்க்கட்டும். அமைதியில் நீங்கள் இளைப்பாற
நன்றி நிறைந்த எங்கள் செபங்கள்.

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள் மற்றும் அன்புக்குரியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளையோர் மன்னா



# "இளமையும் இளைஞர் ஒன்றியமும்"

## – திருமதி. பிரதாப் அனுஷா, வேப்பங்குளம் –

**இளைஞனே!**


உன்னைப் படைத்தவரை உன் இளைமைப் பருவத்தில் மறவாதே! இளமை என்பது இறைவனால் வழங்கப்பட்ட ஒரு கொடையாகும். மனிதனை மகிழ்விக்கின்ற பருவம் இளமைப்பருவமாகும். குழந்தைப்பருவத்திலிருந்து சிறுவர்களாகி, சிறுவர்களிலிருந்து இளமைப் பருவத்திற்குள் நுளைகின்றோம். இளமைப் பருவம் மிக முக்கியம் வாய்ந்ததும், தனித்துவம் மிக்கதுமாகும். இளமைப் பருவத்தில் பலவற்றைச் சாதிக்கவும் முடியும். சம்பாதிக்கவும் முடியும். அதிலும் கத்தோலிக்க இளைஞர், யுவதிகளாக வாழும் ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் கிறிஸ்துவால் பெயர் சொல்லி அழைக்கப்படுகின்றார்கள். இவ் அழைப்பிற்கு விசேட சக்தி உண்டு. ஆற்றல் உண்டு, வல்லமையும் உண்டு.

அந்த வகையில் பல கத்தோலிக்க இளைஞர், யுவதிகளை ஒன்று சேர்த்து பங்குத்தளங்களில் உருவாக்கப்பட்டதே இளைஞர் ஒன்றியம். இளைஞர் ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் சிறப்பு வாய்ந்தவர்கள். "இன்றைய இளைஞர்கள் எதிர்காலத்தலைவர்கள்" என்பதை அடிப்படையாகக் கொண்டு நல்ல விழுமியங்களையும், பண்புகளையும் கற்றுக் கொடுப்பது தான் இளைஞர் ஒன்றியம். கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்திற்கு தனிச்சிறப்பு உண்டு.

இளைஞர் ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் இளைஞர், யுவதிகள் ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழியில் பயணிப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் என்றும் எப்போதும் இறை விசுவாசத்தில் நிலைத்திருக்கின்றார்கள். இறை ஒன்றிப்பில் வாழ்பவர்களாக காணப்படுகின்றார்கள். விஞ்ஞான விந்தைகள் வேகமாக வளர்ச்சியுறும் இன்றைய சூழலில் இளைஞர், யுவதிகளில் பெரும்பான்மையினர் நவீன மயமாதலின் வழியே பயணிப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இணையத்தளம், முகநூல் போன்றவற்றிற்கு அடிமைகள் ஆக்கப்பட்டு அறிவியல் பாதையில் மட்டும் தங்களது வாழ்க்கையை நகர்த்திச் செல்கின்றார்கள். தற்காலச் சூழலில் ஆன்மீக வாழ்வு குறைந்து கொண்டே செல்கின்றது. அறிவியலோடு ஆன்மீக வாழ்வும் இருத்தல் வேண்டும். ஆன்மீக வாழ்வு சிறப்பாக இருந்தால் அறிவியல் தேடல் சிறப்பாக இருக்குமெனக் கூறலாம். பங்குத் தளங்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் இளைஞர் ஒன்றியக் கூட்டம் நடைபெறும் என அறிவித்தலில் பங்குத்தந்தை அறிவித்தால் ஒன்றியத்திற்கென அர்ப்பணித்து நிற்கும் இளைஞர், யுவதிகள் மிக மிக குறைவு காரணம் ஆங்கிலவகுப்பு, கணனி வகுப்பு, வேலை போன்ற நொண்டிச்சாட்டு. அத்தோடு இளைஞர், யுவதிகள் ஒன்றாக இருந்து ஒரு அணியாகச் செயற்படுவதை தவறாகப்புரிந்து கொள்ளும் சமூகம் இளைஞர் யுவதிகள் ஒன்றாக இருந்து ஓர் அணியாகச் செயற்படுவதால்தான் தவறான பாதையில் செல்கின்றார்கள் என்பது அல்ல மூல காரணம். சமூக வலைத்தளங்களும், செல்போன்களும், நீலப்படங்களும் தான் இளைஞர் வாழ்வைச் சீரழிக்கின்றது. இன்று ஒவ்வொருவரினதும் கையில் ஒன்று அல்லது இரண்டு தொலைபேசி நிச்சயம் இருக்கும். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட முகநூல் வேறு வேறு பெயர்களில் பாவிப்பார்கள். ஆனால் எத்தனை இளைஞர்களுடைய கையில் செபமாலை இருக்கின்றது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. நித்திரைக்குச் செல்லும் போது தலைமாட்டில் தொலைபேசி வைத்துக் கொண்டிருக்கும் இளையோர்கள் ஏன் கத்தோலிக்கர்களுடைய பாதுகாப்பின் கருவியாகிய செபமாலையை கைவிட்டு விடுகின்றனர்.

➡ 15

# இளையோருக்காகச் செபிக்க திருத்தந்தை அழைப்பு



இளையோர் அனைவரும், தங்கள், தங்களின் மொழிகளில், உலகின் அமைதிக்காகச் செபமாலை செபிக்குமாறும் திருத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார். மத்திய அமெரிக்க நாடான பனாமாவில், ஜனவரி 22ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை, உலக இளையோர் நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளவேளை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலக இளையோருக்காக, குறிப்பாக, இலத்தீன் அமெரிக்க இளையோருக்காகச் செபிக்க அழைப்பு விடுத்துள்ளார். 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதச் செபக்கருத்தில் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை, இளையோர், குறிப்பாக, இலத்தீன் அமெரிக்க இளையோர், அன்னை மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி, இறைவனின் அழைப்பை ஏற்று, உலகிற்கு நற்செய்தியின் மகிழ்வை அறிவிக்கும்படி நாம் எல்லோரும் செபிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

ஜனவரிமாதச் செபக்கருத்துப் பற்றி, காணொளியில் பேசியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைத்துவிதமான கலாசார, பொருளாதார மற்றும் சமூக வேறுபாடுகளைக் களைந்து, உலகின் பல பகுதிகளிலிருந்தும் பனாமா நாட்டிற்கு வரவிருக்கும் இளையோர், தங்களின் மகிழ்வின் காரணத்தையும், தூண்டுதலின் ஊற்றையும் அன்னை மரியாவில் கண்டுகொள்ளுமாறு கூறியுள்ளார்.

அத்துடன், அன்னை மரியாவோடு சேர்ந்து, கிறிஸ்து பற்றி தியானிக்குமாறும் இளையோரை வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, இளையோர் அனைவரும், தங்கள் தங்களின் மொழிகளில், உலகின் அமைதிக்காகச் செபமாலை செபிக்குமாறும், கனவு காண்பதற்கு அன்னை மரியிடம் சக்தியைக் கேட்குமாறும் கூறியுள்ளார்.

# கிறிஸ்தவ நாகரிகம் புதியபாடத்திட்டம்

## இறையாட்சியின் தன்மைகளை விளக்குவதற்கு இயேசு பயன்படுத்திய உவமைகளும் ஆற்றிய புதுமைகளும்

### அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி

இயேசுவின் பார்வையில் இறையாட்சி என்பது ஒரு மாற்றுச் சமூகமாகும். இறைவனின் பண்புகளாகிய அன்பு, உண்மை, நீதி ஆகிய விழுமியங்களைக் கொண்டு வாழும் ஒரு சமூகமாகும். எனவே இறைவனையே அரசராகக் கொண்ட ஒரு சமத்துவ, சகோதரத்துவ, வாழ்க்கை முறையை உருவாக்க இயேசு முயன்றார். இயேசு தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டவராய் (லூக் 4:18), இறையாட்சியை வாழ மக்களை மலைப்பொழிவு வழியாக அழைத்து, அதன் தன்மைகளை உவமைகள் வழியாக கற்பித்து, இறையாட்சி அவர்கள் மத்தியில் இருப்பதை புதுமைகள் மூலம் வெளிப்படுத்தினார்.

**இயேசுவின் உவமைகள்**

ஒத்தமை நற்செய்திகளின் அடிப்படையில் இயேசு இறையாட்சியின் இயல்புத்தன்மைகளை கதைகள், உருவகங்கள், உவமைகள், வழியாக கற்பித்தார் என்பதைக் காண்கின்றோம். உவமைகள் மத்தியதரை நாடுகளில் வழக்கிலிருந்த செமித்திய இலக்கிய நடையாகும். இதனை கிரேக்க தத்துவ ஞானிகளும், இஸ்ராயேலின் இறைவாக்கினர்களும், இயேசுவின் காலத்து யூதராபிகளும் பயன்படுத்தியுள்ளனர். மக்களுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், கற்பனை நிகழ்வுகள், இயற்கைக்காட்சிகளை உருவகம் செய்து கேட்போருக்கு விடயத்தை புரியவைக்கும் ஒரு இலக்கிய நடையே உவமையாகும். இது கேட்போரை சுயமாகச் சிந்திக்கத் தூண்டும். எனவே ஆழமான கருத்துக்களை இலகுவில் புரியவைக்கும் ஓர் வழிமுறையாகும். இயேசு கடுகுவிதை, புளிப்புமாவு, புதையல், முத்து, வலைபோன்ற உவமைகள் மூலமாக இறையாட்சி பற்றிய ஆழமான உண்மைகளை எடுத்துரைக்கின்றார்.

**கடுகுவிதை உவமை:** மிகச் சிறிய விதையாகிய கடுகுவிதை 12 அடி உயரமுள்ள ஒரு பெரிய செடியாகி வானத்துப்பறவைகள் தங்குமளவிற்கு பெரிய மரமாக வளரும். இந்நிகழ்வை உவமானமாக்கி இயேசு இறையாட்சியின் தன்மையை விளக்குகின்றார். இயேசுவின் செயல்களால் பெருமளவான மக்கள் அவரைப் பின்பற்றுவார்கள் என எண்ணிய சீடர்கள் அது நிறைவேறாததால் காலப்போக்கில் அவரில் நம்பிக்கை இழந்தார்கள். அத்தருணத்தில் இயேசு கடுகுச் செடியைப் போன்று இறையாட்சி மெல்ல வளரும். அதில் பலரும் பங்குகொண்டு பலன்பெறுவார்கள் என நம்பிக்கை ஊட்டுகின்றார்.

**புளிப்புமாவு:** இயேசுவின் செயல்களையும், மக்கள் மத்தியில் அவருக்கிருந்த நன்மதிப்பையும் கொண்டு அவர்கள் எதிர்பார்த்திருந்த ஆட்சியை அமைப்பார் என நம்பினர். இயேசு இறையாட்சியின் தன்மையை புளிப்புமாவுக்கு ஒப்பிடுகின்றார். இறையாட்சியின் அடையாளங்களான கருணை, நீதி செயல்கள் சமுதாயத்தில் ஊடுருவி அனைத்தையும் இறையாட்சியாக மாற்றும் வல்லமை கொண்டுள்ளதை விளக்குகின்றார்.

**புதையல் உவமை:** புதையல் தேடுவது யூத சமூகத்தில் சாதாரண ஒரு நிகழ்வாகும். இடப்பெயர்வின் போதுதங்கள் மூதாதையர்கள் புதைத்த செல்வங்களை நாடு திரும்பியபின் எதிர்பாராத விதமாகக் கண்டெடுத்தார்கள். இதனை உவமையாகப் பயன்படுத்தி இறையாட்சியும் புதைக்கப்பட்ட விலைமதிப்பற்ற செல்வம் போல அவர்கள் நடுவில் இருக்கின்றது என்பதை இயேசு எடுத்துக்காட்டுகின்றார்.

**முத்து உவமை:** வணிகர் விலையுயர்ந்த முத்துக்களை அடைவதற்கு தம்மிடம் உள்ள பெறுமதி குறைந்த அனைத்தையும் இழக்கத்தாயராக இருப்பார்கள். யூத இயல்புநிலையை உவமானமாக்கிய இயேசு இறையாட்சியை அடைவதற்கு தியாகங்களும், இழப்புக்களும், அர்ப்பணிப்பும் வேண்டும் என்கின்றார்.

**வலை உவமை:** வலை பலவகையான மீன்களை இழுத்துவருகின்றது. ஆனால் அவற்றில் கெட்டதை விலக்கி நல்லதையே சேர்த்துவைப்பர். அதேபோல் இறையாட்சிக்குள் இஸ்ராயேல் மக்கள் மட்டுமல்ல உலகில் வாழும் அனைவரும் உள்ளார்கள். பாரபட்சமற்ற அன்பும், நன்மைத்தனமும் அனைவருக்கும் உரியது. அதனை அருள்பவர் இறைவனே என்று கூறும் இயேசு இறையாட்சியை வலைக்கு ஒப்பிடுகின்றார்.

**இயேசுவின் புதுமைகள்**

நோயாளர்களை குணமாக்குவதும், பேயோட்டுவதும் இயேசுவின் முக்கிய பணியாக இருந்தது. அதேவேளை பாவமே நோய்களுக்குக் காரணம், நோயாளர்கள் தீட்டுப்பட்டவர்கள் எனும் எண்ணத்தை மாற்றும் வகையில் அவர்கள் மீதுகொண்ட பரிவினால் இயேசு புதுமைகள் செய்தார். இறையாட்சி நெருங்கிவிட்டது என்பதன் அடையாளமாகவும், இறைவனின் ஆற்றலை வெளிப்படுத்தவும், இறைவனைப் புகழவுமே இயேசு புதுமைகள் செய்தார். இயேசு இறைவனின் பரிவன்பை வெளிப்படுத்தவும், மக்கள் மத்தியில் இறை நம்பிக்கையை ஆழப்படுத்தவும் புதுமைகள் செய்தார். மனிதரின் உடல், உள முழு நலம் இறையாட்சியின் முக்கிய பரிமாணமாகும். எனவே இயேசு நோயாளர்கள், தீயாவியால் பீடிக்கப்பட்டவர்களை குணமாக்கி இறைத்திட்டத்தை அவர்களுக்கு உணரவைத்தார். நீண்ட போதனைகளை விட இயேசுவின் வியத்தகு செயல்களே ஏழை எளிய மக்களை அதிகம் ஈர்த்தது. இம்மக்கள் நற்செய்தியை இலகுவாக ஏற்றுக்கொள்வதற்காக இயேசு புதுமைகள் செய்தார். இயேசுவின் காலத்தில் மதத்தலைவர்களால் புதுமைகள் செய்யப்பட்டன. ஆனால் இயேசு புதுமைகள் செய்தபோது பெயல்செபூலைக் கொண்டே அவர் இவற்றை செய்வதாக குற்றம் சுமத்தப்பட்டார்.

**தீய ஆவிகளை விரட்டுதல் (மாற் 5: 1-20):** இறுதிநாளில் பேய்களின் வல்லமை வீழ்ச்சியடையும் என்பது யூதர்களின் நம்பிக்கை. கெரசேனர்பகுதியில் பேய்பிடித்த ஒருவரின் உள, உடல் பிணிகளை இயேசு குணப்படுத்தி மக்களை சிந்திக்கவைக்கின்றார். இயேசுகொண்டுவந்த இறையாட்சியில் தீய ஆவிகளுக்கு இடமில்லை என்பது அவை இயேசுவுக்கு பணிவதில் உறுதிப்படுத்தப்படுகின்றது. குணம்பெற்றவர் மூலம் இறையாட்சி அவர் குடும்பத்தாருக்கும், ஊரவருக்கும் அறிவிக்கப்படுகின்றது. குணம்பெற்றவர் இறையாட்சியை அறிவிக்கும் இயேசுவின் சீடத்துவக் குடும்பத்தில் ஒருவராகின்றார்.

**இயற்கைதொடர்பான புதுமைகள் (மாற் 6: 30 - 44):** இறந்தோரை உயிர்பெறச் செய்தல், காற்றையும் கடலையும் அடக்குதல், தண்ணீரை இரசமாக்குதல், உணவுபலுகச்செய்தல் போன்றவை இயற்கை தொடர்பான புதுமைகள் ஆகும். இயேசுவின் இறைத்தன்மையில் விசுவாசம் கொண்ட தொடக்கக் கிறிஸ்தவர்கள், இயற்கையும் அவரது ஆணைக்கு கீழ்ப்படிவதை அறிக்கையிட்டார்கள். இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவு அளிதத்தன் மூலம், இறையாட்சி அனைத்து மக்களையும் வரவேற்று பராமரிக்கும் தன்மை கொண்டமை வெளிப்படுத்தப்படுகின்றது. மெசியா தலைமையில் இறைவன் அளிக்கும் ஒருவிருந்தை ஒத்ததே இறையாட்சி வாழ்வுஎன்ற யூதர்களின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்படுகின்றது.

**குணமளித்தல் (லூக் 7: 1-10):** இயேசு நோயுற்றிருந்த அனைவரையும் (யூதர்கள், யூதரல்லாதவர்கள்) குணமாக்கினார். புறவினத்தவர்கள் என யூதர்களால் கருதப்பட்ட சமாரியர், கானானேயர், உரோமையர் தாங்கள் இயேசுவிடம் கொண்டிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தி குணம்பெற்றார்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. இஸ்ராயேலரிடம் காணப்படாத, இயேசுவையே வியக்கவைக்கும் அளவுக்கு நூற்றுவர்த்தலைவனின் விசுவாசம் வெளிப்பட்டது.

➡ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரை

# மேய்ப்புப்பணி புதுப்பித்தல் ஆவியின் செயல்

திருச்சபைக்கும், உலகிற்கும் இடையே உள்ள உறவுகளை விளக்கி உரைக்கும் ஏடு "இன்றைய உலகில் திருச்சபை" என்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்க ஏடு. இவ்வேட்டின் மையமே திருச்சபை, உலக உரையாடல். உலகைச் சார்ந்த பல்வேறு துறைகளில் எழுகின்ற பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்தி, அவைகளுக்கு நற்செய்தியின் ஒளியில் விளக்கமும், தெளிவும், தீர்வும் வழங்க முனைகின்றது இவ்வேடு.

இப்பணியில் திருச்சபைக் காலத்தின் அறிகுறிகளை அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலகட்டங்களிலும் விளக்கி உரைப்பது தலையாய கடமை (இன்றைய உலகில் திருச்சபை, எண் 4) என உரைக்கின்றது. எனவே, திருச்சபை தன்னைத் தொடர்ந்து ஆய்வுக்கு உட்படுத்திப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இதற்குத் திருச்சபை வாழ்வில் ஏழ்மை உணர்வு துலங்க வேண்டும், அன்புணர்வு மேலோங்க வேண்டும். மேலும் தான் வாழ்கின்ற உலகோடு திருச்சபை உரையாட வேண்டும். திருச்சபையே சொல்லாகவும், செய்தியாகவும், உரையாடலாகவும் மாறிட வேண்டும் (06ஆம் சின்னப்பர், கிறிஸ்துவின் திருச்சபை ஒகஸ்டு 6,1964) திருச்சபையின் இத்தகைய மனநிலை அதை உலக மயமாக்கிவரும் அளவிற்கு எளிதில் இணங்கிப்போகின்ற தன்மையையும், விசுவாசிகளின் சமூகமான திருச்சபை அசைவு எதுவுமின்றித் தனக்குள்ளேயே அடைபட்டுக்கிடக்கின்ற தன்மையையும் விலக்கி, உலகின் முழுமையான மீட்புக்காக அனுப்பப்படக்கூடிய தன்மை கொண்ட திறந்த மனப்பான்மைக்கு அழுத்தம் கொடுக்கின்றது. எனவே திருச்சபையின் மேய்ப்புப்பணிப் புதுப்பித்தல் கீழ்கண்டவைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

1. மேய்ப்புப்பணிச் செயல் நம்பிக்கை வாழ்வைத் தூண்டுவதை, மலரச் செய்வதை, முதிர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்வதைத் தனது நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். மேய்ப்புப்பணிச் செயல் கிறிஸ்தவ சமூகத்தின், கிறிஸ்தவ வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் அதாவது நம்பிக்கை வாழ்வின் ஆரம்பம் முதல் அதன் முதிர்நிலை வரை கட்டி எழுப்பக் கூடியதாக இருக்க வேண்டும். இவ் வாழ்வை ஒவ்வொருவரும் கிறிஸ்தவ சமூகத்தில் வாழவேண்டும். இதன் வழிதான் திருச்சபை தான் ஒரு நம்பிக்கையின் சமூகம் என்பதை உணர்கின்றது, வெளிப்படுத்துகின்றது. இதன் வாழ்வு கிறிஸ்தவ சமூகத்திற்குள்ளே மட்டும் முடங்கிவிடும் வாழ்வல்ல, மாறாக திருச்சபைக்குப் புறம்பே உள்ளவர்களையும் தன்பால் ஈர்த்துக்கொள்ளும் சான்றாகவும் விளங்க வேண்டும்.



2. ஆன்மீகப் புதுப்பித்தலின் ஆழமான கூறு மனமாற்றம். இம் மனமாற்றத்தை அடைய மேய்ப்புப்பணிப் புதுப்பித்தல் முயற்சிக்க வேண்டும். மேய்ப்புப்பணிச் செயல் முழக்கமிடும் நற்செய்தி மனிதர்களை உள்ளிருந்து புதுப்பித்துக் கொள்ள விடுக்கும் அழைப்பே இதன் வழி. மனிதன் தன்னை மையப்படுத்துவதைத் தவிர்த்து கடவுளை முன்னிலைப்படுத்தி வாழ அழைக்கப்படுகின்றான். இம் மனமாற்றம் தொடர் மனமாற்றமாக இருக்க வேண்டும். இல்லையெனில் மேய்ப்புப்பணிச் செயல் மிகுந்த பலனளிக்க முடியாது.

3. நம்பிக்கையும், இதய மாற்றமும் கடவுளின் அன்பின் மிகுதியால் நமக்கு அருளப்படும் கொடைகள். இவைகள் தூய ஆவியின் செயல்கள். எனவே தூய ஆவிதான் மேய்ப்புப்பணி புதுப்பித்தலில் முதன்மையான முகவர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

மேய்ப்புப்பணிச் செயலில் கடவுளின் தொடர்ந்த, உயிரோட்டமுள்ள பிரசன்னம் உணரப்பட வேண்டும். அவரது ஆறுதல் அளிக்கும், புதுப்பிக்கும், வழிநடத்தும் பிரசன்னத்தால் நாம் நமது வரையறைகளின் மத்தியிலும் நமது பணியை ஆரம்பிக்கின்றோம். அதைத் தொடர்ந்து நிறைவேற்றுகின்றோம். பலனளிக்கும் நிறைவுக்குக் கொண்டு வருகின்றோம்.

4. முழுமையான புதுப்பித்தல் ஆழ்ந்த மாற்றத்தைக் கோருகின்றது. இந்த ஆழ்ந்த மாற்றம் விவேகமான உய்த்துணர்தலை எதிர்நோக்கியுள்ளது. தூய ஆவியே மேய்ப்புப்பணிப் புதுப்பித்தலின் முதன்மையான முகவராக இருப்பதால், ஆவியானவர் திருச்சபை சமூகத்திலிருந்து எதிர்பார்ப்பவைகளை திருச்சபை தாழ்ச்சியோடும், தன்னலமற்ற செபத்தோடும் தேடவேண்டும். தன்னல மனநிலை ஆவியின் தூண்டுதலுக்கு எதிரானது. ஆனால் உண்மைச் சுய ஆய்வு ஆவிக்குத் திறந்த மனநிலையைக் கொண்டது.

5. மேய்ப்புப்பணிப் புதுப்பித்தல் முழுக்கிறிஸ்துவ வாழ்வின் புதுப்பித்தலை நோக்கமாகக் கொண்டது. இந்நோக்கம் தனிமனிதனின் திருச்சபையின் உலகு சார்ந்த அர்ப்பணத்தை, அதன் தாக்கங்களோடு ஒருங்கிணைந்த கூற்றாகக் கொண்டிருக்கின்றது. இது நீதிக்கான செயல்களையும் உள்ளடக்கியது.

எனவே மேய்ப்புப்பணிச் செயல்கள் உலக அமைப்புகளை ஊடுருவிப்பாய்ந்து, அவைகளைக் கிறிஸ்து மையமாக்க வேண்டும். இப்பணியில் உலகில் நிலவும் அநீத அமைப்புக்களை எதிர்த்துத் தம்குரலை எழுப்புவது திருச்சபையின் எல்லா நிலையில் இருப்போருடைய கடமையாகும்.

6. மேய்ப்புப்பணி புதுப்பித்தல் திறந்த முடிவைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

ஆவியின் வழிகாட்டுதலை ஏற்றுள்ள திருச்சபையை அவர் தொடர்ந்து இதய மாற்றத்திற்கு இட்டுச்சென்று கொண்டிருக்கின்றார். இது உலகம் முடியும்வரை தொடரும் ஒன்று. இந்நிலையில் ஒரு காலத்தில் பயனளித்த மேய்ப்புப்பணித் திட்டங்களும், முறைகளும் எல்லா இடங்களுக்கும், எல்லா மனிதர்களுக்கும், எக்காலத்திற்கும் உகந்தது என்று சொல்லிவிட முடியாது. எனவே எந்த ஒரு மேய்ப்புப்பணித் திட்டமும், முறையும் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். ஆவியின் தூண்டுதல் காலத்தின் அறிகுறிகள், சூழ்நிலைகளுக்கு ஏற்ப மேய்ப்புப்பணித் திட்டங்களையும், முறைகளையும் மாற்றியமைத்து கிறிஸ்துவில் அனைத்தையும் நிறைவுக்குக் கொண்டு வரவேண்டும்.

எனவே உலகோடு உறவு கொண்டுள்ள திருச்சபை, உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும், புளிக்காரமாகவும் விளங்குகின்ற திருச்சபை, கிறிஸ்துவின் மீட்புப்பணியை மாறிவரும் காலச் சூழலுக்கேற்ப நிறைவேற்றுவதையே தன் உயிர்மூச்சாகக் கொண்டுள்ள திருச்சபை, ஆவியினால் தொடர்ந்து தன்னைப் புதுப்பித்துக் கொள்வதோடு, உலகையும் புதுப்பிக்க அழைப்புப் பெற்றிருக்கின்றது. திருச்சபையில் உள்ளுறையும் ஆவியே இப்புதுப்பித்தலின் முதன்மையான முகவராக இருக்கின்றார். ●

# குடும்பம், பெற்றோர், பிள்ளை உறவு

- பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா, உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம் -

## தொடர் - 5

### உடலுறவும் புனிதத் தன்மையும்

உடலுறவு என்பது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட புனிதமான ஒன்று. கிறிஸ்தவ திருமணத்தினூடாக, அன்பின் வெளிப்பாடாக நடைபெறும் உடலுறவு உண்மையில் இறை விருப்பத்தை நிறைவேற்றுவதேயாகும். அதனால் அது நன்மையானது மட்டுமல்ல புனிதமானதுமாகும். அதன் மூலம் சந்ததி பெருகுவது இறைவிருப்பமாகும். உடலுறவில் சக்தி, நன்மை இருப்பது போன்று பெலவீனமும் உண்டு. ஒருவர் உடலுறவின் மூலம் பிழைவிடும் போது இறைவனுக்கு எதிராகவே செயற்படுகின்றார் எனலாம். 'பரத்தமையை விட்டு விலகுங்கள்" (1கொரி 6:18-20)

நாம் உடலுறவைப் பற்றி கதைப்பதற்கு வெட்கப்படுகின்றோம். உடலுறவு என்பது மனிதனது வாழ்வுக்கு புறம்பான தொன்றல்ல. இது கீழ்த்தரமான செயல் எனப் பலர் நினைக்கின்றனர். கணவன், மனைவி இருவரும் உடலுறவில் ஈடுபடுவது பாவம் என நினைக்கின்றனர். பால் வேறுபாட்டையும், பாலுறவையும் இறைவனே உருவாக்கினார். சந்ததியை பெருக்கவும், இறைவனது சாயலையும் சுபாவத்தையும் இவ்வுலகிற்கு வெளிப்படுத்தவும் இறைவனால் ஏற்படுத்தப்பட்டதே. ஆனால் ஒருவர் மட்டும் தனது சுயநலம், திருப்தி சந்தோசத்துக்காக மட்டும் உடலுறவைப் பயன்படுத்துவது சுயநலமாகின்றது. திருமணம் என்பது பாலுறவின் சரீரத்தன்மை மட்டுமல்ல, ஆன்மீக உறவுமாகும். வெறும் புனிதத்தன்மை சரீர உறவில் மட்டும் அடங்கவில்லை. ஒருவர் மற்றவருக்கு காட்டும் அன்பு, பரித்தியாகம், அக்கறை, கவனிப்பு, மன்னிப்புக் கொடுப்பதில்தான் புனிதத்தன்மை அடங்கியுள்ளது. ஒருவர் உடலுறவால் ஏற்படும் திருப்தியை மட்டும் எதிர்பார்த்தால் என்றோ ஒரு நாள் மனச்சோர்வு ஏற்பட்டு, மணமுறிவுக்கு அடிகோலிடும். ஒருவர் மற்றவருடைய தேவைக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பதன் மூலமும், தமது சரியான கட்டுப்பாட்டின் மூலமும், திருமணத்தின் நன்மையை வளர்க்கலாம்.

திருமணத் தம்பதியினர் இருவருக்கும் உடலுறவுத் திருப்தியை அனுபவிக்கும் உரிமையுண்டு. நியாயமான காரணமின்றி ஒருவர் மற்றவருக்கு உடலுறவை மறுப்பது பாவமாகும். உடலுறவு கொள்ளாமல் கணவன், மனைவி இருப்பது புனிதமானது என்ற பிழையான அபிப்பிராயத்தோடு மற்றவருக்கு அந்த உரிமையை மறுப்பது, மற்றவரது உரிமையை களவெடுப்பதாகும். அதுமட்டுமல்ல மற்றவர் வேறு தொடர்புகளை வைத்திருப்பதற்கு ஏதுவாக அமைந்துவிடும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து ஒழுக்கமான காரணத்திற்காக அல்லது வேறு முக்கியமான ஏதாவது காரணத்திற்காக சிறிது காலம் உடலுறவு



கொள்ளாது இருப்பதாகத் தீர்மானம் எடுப்பது சில நேரம் நடக்கக்கூடும். அப்படித் தீர்மானம் எடுப்பது இருவரும் சேர்ந்தே. தனித்தீர்மானம் எடுப்பது தவறாகும். அதேபோன்று மற்றவர் அப்படித் தீர்மானமெடுத்த காலத்தில் பாவத்தில் விழக்கூடியதாகக் காலத்தை நீடிப்பது தவறாகும்.

புனித சின்னப்பர் இதை அழகாகக் கூறுகின்றார்."கணவன் தன் மனைவிக்கு மணவாழ்க்கைக்குரிய உரிமைகளைக் கொடுக்க வேண்டும். அதுபோல் மனைவியும் தம் கணவருக்கு கொடுக்க வேண்டும். மனைவிக்கு தம் உடலின்மேல் அதிகாரமில்லை. கணவனுக்கே அதிகாரம் உண்டு. அப்படியே கணவருக்கு தன் உடலின் மேல் அதிகாரம் இல்லை. மனைவிக்கே அந்த அதிகாரம் உண்டு. மணவாழ்க்கைக்குரிய உரிமைகளை ஒருவருக்கொருவர் மறுக்காதீர்கள். இருவரும் ஒத்துக்கொண்டால் இறைவேண்டலில் ஈடுபடுவதற்காகச் சிறிது காலம் பிரிந்து வாழலாம். ஆனால் உணர்ச்சிகளை அடக்க முடியாத நிலையில் சாத்தான் உங்களைச் சோதிக்காதபடி பிரிந்த நீங்கள் மீண்டும் கூடி வாழுங்கள்." (1கொரி 7:3-5) கணவன், மனைவி இருவரும் வெறும் உடல் இன்பத்துக்காக மட்டுமல்லாது, ஆன்மீகப் பெறுமதியான திருவருட்சாதனத்தைப் பெறும் வகையில் இருவரும் முழுமை பெற வேண்டும். இருவரும் பொறுமை, கனிவு, பரிவு அக்கறையின் மூலம் செயற்பட வேண்டும். அப்போது இறைபிரசன்னத்தை எம் மத்தியில் அனுபவிக்க முடியும். இது குணப்படுத்துகின்றது. விடுதலையாக்குகின்றது. உற்சாகத்தைத் தருகின்றது. இதை மனதிலே கொண்டு ஒரு செபமாக இதை அனுபவிக்கவேண்டும் இதற்கு சரீர, மன, ஆன்மீக ஆயத்தம் தேவை. ●

# எழில்மிகு இயற்கை

அருட்பணி.
ம.மரிசுதன் செபமாலைதாசர் சபை

**"உம் படைப்புக்கள் அனைத்தின் மீதும் அவனுக்கு (மனிதனுக்கு) அதிகாரம் தந்தீர்: அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர்"** என்று திருப்பாடல் (8:6) ஆசிரியர் கூறுகின்றார். மனிதனை உருவாக்கிய கடவுள் அவனுக்கு பலுகிப் பெருகவும், ஆண்டு நடத்தவும் அதிகாரம் கொடுத்தார். (தொடக் 1:28). இன்று நாம் வாழும் பூமி மாசு நிறைந்ததாக, அழிவை நோக்கி நகர்வதாக இருக்கின்றது. நீர் நிலைகள் எண்ணை தொழிற்சாலை கழிவுகள், அணு ஆயுத கலவைகளால் அசுத்தப்படுகின்றது. இதனால் நாளுக்கு நாள் நீரில் வாழும் உயிரினங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. நாம் சுவாசிக்கும் காற்றில் கூடக் கலப்படம். நச்சுப்புகை. வளியில் வெப்பம் அதிகரிக்கின்றது. இது ஓசோன் படலத்தில் துளை ஏற்படும் வரை பாதிப்பு நீள்கின்றது. மனிதன் தன் கையால் செயற்கை எரிமலையை உருவாக்குகின்றான். போர்களை தனது சுயநலத்திற்காக தோற்றுவிக்கின்றான்.

வனப்பு மிக்க காடுகள், காட்டில் வாழும் விலங்குகள் ஏராளமாக அழிக்கப்படுகின்றன. இதன் காரணமாக மழைவீழ்ச்சியின் அளவு குறைந்து, எங்கும் வறட்சி, பஞ்சம் பரவுகின்றது. நம் கண்ணுக்கு முன்னாலேயே கனிய வளங்கள் சூறையாடப்பட்டு விற்கப்படுகின்றன. மாசடைந்த சூழல் காலநிலை மாற்றத்தை உருவாக்கின்றது. நாம் பார்த்த பூக்கள், மரங்கள், மிருகங்கள், பறவைகள் இன்று அருகிப்போகின்றன. இந்த நிலையில் அடுத்த சந்ததிக்கு எதைக் கொடுக்கப்போகின்றோம். கற்காலத்துக்குப் பின் வேட்டையாடி, நாடோடியாகத் திரிந்த மனிதன் நதிக் கரையோரங்களில் குடியேறி கூட்டாக வாழத்தொடங்கினான். மனித இனமே முரட்டுத்தனத்திலிருந்து, பண்பாட்டுக்கு முன்னேறி மனித ஆன்மாவை செம்மைப்படுத்தியது. இதையே நாம் நாகரீகம் என்று சொல்லுகின்றோம். இப்படித்தோன்றிய நாகரீகங்கள் சுமேரியன் (யூப்பிரதீஸ், தைக்கிரீஸ்) சிந்துவெளி, எகிப்திய, சீன நாகரீகம் என்று இன்னும் பல உண்டு. இவ்வாறு பசுமையான சமவெளிகளும், நதிக்கரை ஓரங்களும் மனிதனின் பண்பாடு, கலை, காலாசாரம், வாணிபம் என்பவற்றை வளர்க்க ஏதுவாக இருந்தன. **"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழுந்தும் உழவே தலை"** (1031) என்று கூறுகின்றது உலகப் பொதுமறையாம் திருக்குறள். அதாவது பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம் ஏர் தொழிலின் பின்னே தான் சுற்ற வேண்டியிருக்கின்றது.

➡ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைசாட்சிகள் மட்டில் இறைமக்கள் கொண்டுள்ள பற்றும் வணக்க வரலாறும்

## – அருட்பணி ம. க. அருள்பிரகாசம் –

### மன்னார் வேதசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான குழு அங்கத்தவர்

### முன்னுரை

1544 ஆம் ஆண்டில் மன்னார்த்தீவில் வாழ்ந்த தொடக்ககால குடியிருப்பாளர்கள் கத்தோலிக்க மறைக்கு மதம் மாறி கிறிஸ்துவுக்காக மறைசாட்சிகளாக மரித்தனர். (மங்களராசா-2014:21) புனித பிரான்சிஸ் சவேரியார் இவர்களின் இறப்பைப் பற்றி குறிப்பிடும் போது "எங்களுடைய காலத்திலும் மறைசாட்சிகளுக்கு குறைவில்லை" என வர்ணித்துள்ளார். இவர்களை ஆசியாக்கண்டத்தின் முதல் மறைசாட்சிகளாக கணிக்க வேண்டுமென்று பல வரலாற்று ஆய்வாளர்களும், இறையியலாளர்களும் கருத்து முன்வைத்துள்ளனர். ஆசியாக்கண்டத்திலுள்ள நாடுகளான இந்தியா, இலங்கை, சீனா, பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளின் திருஅவை வரலாற்றை நோக்கும் போது "மன்னார் மறைசாட்சிகள்" பற்றி இந்நாடுகளின் திருஅவையின் வரலாற்றை எழுதிய அனைத்து வரலாற்றாசிரியர்களும் குறிப்பிட்டிருப்பது அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும். இதன் பின்னணியில் பிரான்சீஸ் சவேரியாரை புனித நிலைக்கு உயர்த்தும் காலகட்டத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் எழுதப்பட்ட பல நூல்களில் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய குறிப்புக்கள் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

### மன்னார் மறைசாட்சிகள் வணக்க வரலாறு

"மன்னார் மறைசாட்சிகள்" கிறிஸ்துவுக்காக உயிர்நீத்து 16 வருடங்களின் பின்னர் தான் மன்னார்த்தீவுக்கு ஒரு குழுமமாக கத்தோலிக்கர்கள் வந்து குடியேறத்தொடங்கினர். குறிப்பாக 1560ஆம் ஆண்டு அருட்பணி கென்றி கென்றிக்கஸ் அடிகளார் மன்னார்த்தீவின் முதல் பங்குத்தந்தையாக நியமனம் பெற்று, இந்தியக் கத்தோலிக்கர்களை தம்முடன் அழைத்துவந்து மறைசாட்சிய மரணத்தால் மக்கள் குடியிருப்பற்றுக் கிடந்த (தற்போது எருக்கலம்பிட்டி என அழைக்கப்படும்) இடத்தில் குடியேற்றினார்.

இவ்வாறு குடியேறிய மக்கள் மத்தியில்தான் முதல் முதல் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய விழிப்புணர்வை கென்றி கென்றிக்கஸ் அடிகளார் ஊட்டி வளர்த்தார். இதனால் இம்மக்கள் மன்னார் மறைசாட்சிகளில் அதிக பற்றுடையவர்களாக விளங்கி வருகின்றனர். இம்மக்கள் இவ்வாறு கத்தோலிக்க நம்பிக்கையில் வேரூன்றி பேதுரு பட்டணம், பாவிலு பட்டணம் என்று கூறுமளவிற்கு வளர்ச்சி கண்டனர். இவ்வாறு இம்மக்கள் மன்னார்த்தீவில் குடியேறிய காலம் தொடக்கம் இன்று வரை மன்னார் மறைசாட்சிகளில் பற்றுக்கொண்டு வணங்கி வருகின்றனர். தமிழில் பாண்டித்தியம் அடைந்தவர் என பல அறிஞர்களால் முன்னுரைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கென்றி கென்றிக்கஸ் அடிகளார் மன்னார்த்தீவில் இருந்தபோதே பல ஆன்மீக நூல்களை தமிழில் எழுதினார் என புகழாரம் சூட்டப்பட்டு அனைத்து தமிழ் அறிஞர்களாலும் வெகுவாக பாராட்டப்பட்டவர். இவர் தமது சபைத் தலைவர்களுக்கு எழுதிய கடிதங்களில் மன்னார் மறைசாட்சிகள் பற்றி பல விடையங்களை எழுதியுள்ளார். மறைசாட்சிய மரணவேளையில் தப்பிச்சென்ற மன்னார் மறைசாட்சிகளின் உறவினர் மாதோட்டமாகிய பெருநிலப்பரப்பிலிருந்து மீண்டும் தமது சொந்த இடமாகிய பட்டித்தோட்டத்திற்கு தனது காலத்தில் திரும்பி வந்து குடியேறினர் என்றும் தானே அவர்களுக்கு ஆன்மீக குருவாக இருந்ததையும் குறிப்பிட்டிருப்பது வரலாற்று உண்மையாகும். இவர்கள் கொள்ளை நோய் காரணமாக மீண்டும் மாதோட்டம் திரும்பிவிட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவர் 4 அல்லது 5 வருடங்கள்தான் மன்னார்த்தீவில் பங்குத்தந்தையாக இருந்து மக்களை வழிநடத்தினார் என அறியக்கூடியதாக உள்ளது. இவருடைய காலத்திற்குப்பின் பங்குத்தளம் என்பது இல்லாமல் போய் இந்தியாவில் தமிழ் நாட்டிலிருந்து குருக்கள் வந்து ஞாயிறு திருப்பலி நிறைவேற்றி வந்தனர்.

### பேதுரு, பாவிலு பட்டண அழிவு

இந்தியாவிலிருந்து குருக்கள் மன்னார்த்தீவுக்கு வந்து ஞாயிறு திருப்பலி நிறைவேற்றிவரும் காலத்தில் ஒரு குருவானவர் ஞாயிறு திருப்பலி நிறைவேற்றிவர பிந்தியபடியால் இப்பேதுரு பாவிலுப்பட்டண மக்கள் கோபங்கொண்டு அக்குருவைக் கட்டி கடலில் எறிந்துள்ளனர். அவ்வேளையில் அக்குரு உங்களது பட்டணம் எரிந்து சாம்பலாகும் என சாபமிட்டதாகவும் உடனே அவ்விரு பட்டணங்களும் எரிந்து சாம்பலானதாகவும் அம்மக்கள் இன்றும் வாய்மொழியாக பேசிவருவதை அவதானிக்கலாம். தற்போது முஸ்லிம்களின் குடியிருப்பாக விளங்கும் எருக்கலம்பிட்டியில் அழிந்த நிலையிலிருக்கும் பேதுருவானவர் கோவிலை நானும் அருட்தந்தை பாவிலு கிறிஸ்து நெசரெட்ணம் (தமிழ்நேசன்) அடிகளாரும் சென்று பார்வையிட்டோம்.

### புதிய குடியேற்றம்

இவ்வாறு இந்த இரு பட்டணங்களும் அழிந்தபடியால் இவ்வழிவிலிருந்து தப்பிய மக்களில் சிலர் இந்தியாவிற்கு சென்றுவிட்டனர். சிலர் தோட்டவெளி தொடக்கம் கீழியன்குடியிருப்பு வரையுள்ள இடங்களில் போய் குடியேறி 12 திருத்தூதர்களுக்கு ஆலயங்கள் கட்டி எழுப்பி வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் "மன்னார் மறைசாட்சிகள்" தமது உற்றார் உறவினர் என்று கொள்ளுமளவிற்கு பற்றுக் கொண்டுள்ளனர்.

### மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயம்

இம்மக்கள் மத்தியில் காணப்பட்ட "மன்னார் மறைசாட்சிகள்" மேல் கொண்ட பற்றை அவதானித்த திருஅவை தோட்டவெளியில் அமைந்திருந்த புனித அன்று ஆலயத்தை அன்னை மரியாவிற்கு அர்ப்பணித்து மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயமாக அவ்வாலயத்தை அபிஷேகித்து மன்னார் மறைசாட்சிகளை புனித நிலைக்கு உயர்த்த முயற்சிகளை ஆரம்பித்தது. வருடாவருடம் மன்னார் மறைசாட்சிகளை முன்னிலைப்படுத்தி மறைசாட்சிகளின் இராக்கினி விழா கொண்டாடப்பட்டு வந்தது. மன்னார் மறைமாவட்ட மக்கள் மாத்திரமல்லாது இன, மத வேறுபாடற்று பலரும் இவ்விழாவில் கலந்து மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துரை கேட்பது வழக்கம்.

### மன்னார் மறைசாட்சிகளின் 400வது ஆண்டு விழா

1944ஆம் ஆண்டு மன்னார் மறைசாட்சிகளின் 400வது ஆண்டு விழா தோட்டவெளி மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு சில நூல்களும் வெளியிடப்பட்டன. 1941 ஆண்டு அருட்தந்தை எஸ்.ஜி. பெறெறா என்னும் அமல மரி தியாகிகள் சயைச்சேர்ந்த குரு "இலங்கையில் இயேசு சபையினர்" என்னும் நூலில் மன்னார் வேதசாட்சிகள் "சுதேசிகள்" என்ற கருத்தை தெளிவாக முன்வைத்துள்ளார். யாழ் அமலமரி தியாகிகள் சபையைச்சேர்ந்த அருட்தந்தை அன்ரனைனஸ் அடிகளார் மூல நூல்களை (புனித பிரான்சீஸ் சவேரியாருடையதும், கென்றி கென்றிக்கஸ் அடிகளாருடைய கடிதங்கள்) ஆதாரமாகக் கொண்டும் சில அகழ்வாராட்சியை மேற்கொண்டும் "மன்னார் வேதசாட்சிகள்" என்னும் ஆய்வு நூலை வெளியிட்டார்.

தனது பெயர் குறிப்பிட விரும்பாத யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு அருட்சகோதரரால் எழுதப்பட்டதாக கருதப்படும்: "மன்னார் மறைசாட்சிகள்" பற்றிய நூல் ஒன்றும் இதே காலகட்டத்தில் வெளி வந்துள்ளது. பேணியோலா என்னும் மேலைத்தேசத்தவர் புனித சவேரியார் மற்றும் கென்றி கென்றிக்கஸ் அடிகளாரின் கடிதங்களை ஆங்கிலமொழி பெயர்ப்புச் செய்து "போர்த்துக்கேயர்காலம் - I "என்னும் நூலில் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். இவ்வாறு பல ஆய்வுகளும், அகழ்வாராய்ச்சிகளும் மன்னார் மறைசாட்சிகளின் 400வது ஆண்டை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டன. மன்னார் மறைசாட்சிகளோடுதான் இந்தியா, இலங்கை, யாழ்ப்பாணம் மன்னார் திருஅவையின் வரலாறுகள் ஆரம்பமாகின்றன. பொதுவான வரலாற்று நூல்களாக இருந்தாலும் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய குறிப்பு இருப்பதைக் காணலாம்.

### மன்னார் மறைமாவட்டத்தின் உதயம்

1981ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் ஒரு புதிய மறைமாவட்டமாக யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து உதயமாகியது. இவ்வாறு மன்னார் மறைமாவட்டம் உதயமாகிய பின்னர் மறைசாட்சிகளின் இராக்கினி விழா மறைமாவட்ட விழாவாக அன்றைய மன்னார் மறைமாவட்ட முதல் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் மாற்றினார். இம்மறைமாவட்ட விழாவிற்கு ஒவ்வொரு பங்கிலிருந்தும் இறைமக்கள் வருகைதந்து மன்னார் மறைசாட்சிகள் பீடநிலைக்கு உயர்த்த வேண்டுமென எல்லா இறைமக்களும் செபிக்க வேண்டுமென்று மன்னார் மறைமாவட்டம் ஊக்குவித்து வருகின்றது. 1994ஆம் ஆண்டு மன்னார் மறைசாட்சிகளின் 450வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அதை முன்னிட்டு "மன்னார் மறைசாட்சிகள்" என்னும் சஞ்சிகை நூல் பலரின் ஆக்கங்களை உள்ளடக்கி அருட்பணி அன்ரனிதாஸ் டலிமா பதிப்பாசிரியராக இருந்து வெளியிட்டார்.

2006ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 25வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக கெண்டாடப்பட்டு மன்னார் மறைசாட்சிகள் புனித நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும் என்னும் நோக்கில் பல ஆய்வுகளும், வழிபாடுகளும் நடத்தலாம் என மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப்பு கேட்டுக் கொண்டார். இதற்கென விசேடவிதமாக அருட்பணியாளர்கள் மங்களராசா பிலேந்திரன், தேவராசா கொடுதோர், அருள்பிரகாசம் ஆகியோரை நியமித்தார். அன்றில் இருந்து பல ஆய்வுகளும், வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

2012ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு யோசேப்பினால் மன்னார் மறைசாட்சிகளின் சமூகநல அமைப்பு என ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு பல ஆய்வுகள், தேடல்கள், வழிபாடுகள், மேற்கொள்ளப்பட்டன. இவ்வமைப்பின் அழைப்பில் சில இந்திய குருக்கள் மன்னார் தோட்டவெளி மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயத்திற்கு வருகைதந்து மன்னார் மறைசாட்சிகள் புனித நிலைக்கு உயர்த்தப்பட தம்மாலான முயற்சிகளைச் செய்ய முன்வந்துள்ளனர். அருட்தந்தையர்களான தேவராஜா கொடுதோர், அருள்பிரகாசம் ஆகியோர் கீளியன்குடியிருப்பு, துள்ளுகுடியிருப்பு போன்ற இடங்களில் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தமர்வு வழிபாடுகள் நடாத்தி அருட்தந்தை மங்களராசா மன்னார் மறைசாட்சிகள் பற்றிய மேலதிக ஆய்வை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திலும், மன்னார் மறைமாவட்டத்தில் தோட்டவெளி மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயத்திலும் கருத்தாய்வொன்றை மேற்கொண்டு நூல் வெளியிட்டுள்ளார். யக்கோபுசேரம் என்பவரும் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய தேடல்களில் ஈடுபட்டு சில உண்மைத் தகவல்களை தனது கட்டுரைகளில் கொண்டு வந்துள்ளார். அந்தோனி பிச்சை என்பவரும் பல ஆய்வுகளிலும், தேடல்களிலும் ஈடுபட்டு கட்டுரைகளிலும் புத்தக வடிவிலும் சில தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். அருட்பணியாளர்கள் தமிழ்நேசன், அலெக்சாந்தர் சில்வா (பெனோ) ஆகியோரும் மன்னார் மறைசாட்சிகளை புனித நிலைக்கு உயர்த்த தம்மாலான பணிகளை ஆற்றி வருகின்றனர். அருட்தந்தை இ. செபமாலை அடிகளாரும் இப்பணியில் ஊக்கத்துடன் ஈடுபட்டு றோமாபுரி வரை சென்று செயற்பட்டு வருகின்றார். எமது தற்போதைய மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும் மிகவும் ஊக்கமெடுத்து றோமாபுரி சென்று அங்கு மன்னார் மறைசாட்சிகளின் புனித நிலைக்கு பொறுப்பாக உள்ள பேராயத்தை சந்தித்து விரைவில் இறையடியார் நிலைக்கு உயர்த்த ஆவன செய்து வருகின்றார்.

### மக்களின் நம்பிக்கையும் புதுமைகளும்

இறைமக்கள் மாத்திரமல்லாது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து மக்கள் இன, மத பேதமின்றி புனித மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயத்திற்கு வந்து மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துரை கேட்டு பல ஆசீர்வாதங்களையும், புதுமைகளையும் பெற்று வருகின்றனர். இவ்வாலயத்திற்கு வருபவர்கள் நம்பிக்கையோடு இங்குள்ள மண் மற்றும் எலும்புகளை எடுத்துச் சென்று நோய்கள் துன்பங்கள் வரும்போது நீரில் மண்ணைக் கரைத்து, எலும்பை உரசி தண்ணீரில் கரைத்து நோயுள்ள இடத்தில் பூசியும், அருந்தியும் நலம் பெற்று வருகின்றனர். தமிழீழ போராட்டம் தொடங்குவதற்கு முன்னர் கத்தோலிக்கரும் ஏனைய மதத்தவர்களும் வெள்ளிக்கிழமைகளில் பாதயாத்திரையாக வந்து மன்னார் வேதசாட்சிகளின் பரிந்துரை கேட்டு இறைவனை வணங்கி வந்தனர். நானும் எனது பெற்றோருடன் பலமுறை பாதயாத்திரையாக ஓலைத்தொடுவாய் கத்தர் கோவிலுக்குச் சென்று இரவு கோயில்காத்து, காலையில் அங்குள்ள கிணற்றில் குளித்துவிட்டு பின்னர் மறைசாட்சிகள் இராக்கினி ஆலயத்திற்கு வந்து மன்றாடிச் சென்றது இன்றும் ஞாபகமாய் என மனக்கண்முன் நிற்கின்றது.

மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துரையால் பல அற்புதங்கள் நடைபெற்று வருகின்றன. குழந்தைப் பேறில்லாதவர்கள், கேன்சர் வியாதிக்காரர் இன்னும் பல நீண்ட நாட்பட்ட நோய்களினால் பீடிக்கப்பட்டவர்கள் பல அற்புதங்களைப் பெற்றுள்ளனர். பிற சமயத்தவர்களான முஸ்லீம்களும், இந்துக்களும் இதற்கு சாட்சியாக விளங்குகின்றனர்.


### இன்றைய நிலை

தற்போது ஒரு சில ஆண்டுளாக டிவைன் தியான முறைகள் ஆரம்பிக்கப்பட்டு தியான மண்டபம் கட்டப்பட்டு தியானங்கள், வழிபாடுகள், திருப்பலிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு வியாழக்கிழமையும் மறைசாட்சிகளின் பரிந்துரை கேட்கவும், அவர்களைப் புனித நிலைக்கு உயர்த்தவும் வேண்டி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. மறைசாட்சிகளின் எலும்புகள் எனக்கருதப்பட்டு எடுக்கப்பட்ட எலும்புகள் ஓர் இடத்தில் புனிதமாக வைக்கப்பட்டு, கல்லறை எழுப்பி மறைசாட்சிகளின் கல்லறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மறைமாவட்ட விழாவின்போதும் அவ்விடத்தில் விளக்கேற்றி வணங்கி வருகின்றனர். இங்கு வருபவர் எல்லோரும் மறைசாட்சிகள் கல்லறையை தரிசித்து பரிந்துரை கேட்டுச் செல்வதைக் காணலாம்.

### முடிவுரை

475 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்த உண்மை மறைசாட்சிய மரணத்தை உறுதிப்படுத்தும் முகமாக பல இடையூறுகள் மத்தியிலும் தொடர்ச்சியாக அவர்களை புனித நிலைக்கு உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மன்னார் மறைசாட்சியர்களின் பரிந்துரையின் சாட்சியமாக எமது மன்னார் மறைமாவட்டம் அழைத்தலின் விளைநிலம் என யாவராலும் அழைக்கப்படும் அளவிற்கு பல தேவ அழைத்தல்கள் உலக திருஅவைக்கு கிடைக்கப் பெற்று வருகின்றன. இந்த உண்மை சாட்சியத்தின் வெளிப்பாடாக மன்னார் மறைமாவட்ட குருக்கள் பலர் உருவாகியுள்ளனர். அகில உலகத்திலுள்ள ஆண், பெண் துறவற சபைகளில் மன்னாரைச் சேர்ந்த பலர் குருக்களாக, துறவிகளாக பணியாற்றி வருகின்றனர். எமது மன்னார் மறைசாட்சிய மண்ணிலிருந்து கிடைக்கப் பெற்ற குருக்கள், துறவிகள் உலகளாவிய ரீதியிலே கிறிஸ்துவுக்காக சேவையாற்றி வருகின்றனர். இது மன்னார் மறைசாட்சிகளின்தொடர் பரிந்துபேசுதலின் உண்மை சாட்சியம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கிட்டத்தட்ட 700இற்கு மேற்பட்ட குருக்கள், துறவிகள் மன்னார் மறைசாட்சிகளின் வாரிசுகளாக உலகளாவிய ரீதியில் பணியாற்றி வருகின்றனர். ●

**புதிய அலுவலக விலாசம்:**
மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202,
தலைமன்னார் வீதி, மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## மன்னார் மாதோட்டப் பெருமைகள்

அருட்பணி. ம.க. அருள்பிரகாசம்

இலங்கையின் முதல் நகராம் மாந்தை
இதுவே சர்வதேச துறைமுகமாம் அன்று.
கட்டுக்கரைக்குளத்தைக் கொண்டு – நல்ல
களனி வயல்கள் உண்டு நம் மாதோட்ட மண்ணில்.

மன்னார் மறைசாட்சிகள் உதித்த நிலமாம்.
மருதமடு அன்னை அருள் பொழியும் தளமாம்.
தூய யோசேவ்வாஸ் வாழ்ந்த பதியாம்.
தூய பரலோக மாதா பறப்பாங்கண்டல் திருத்தலமாம்.

உள்ளது மாந்தையில் திருக்கேதீச்சரக் கோயிலாம்.
உடன் அழகான லூர்து அன்னை ஆலயமாம்.
கண்டு மகிழ்ந்து நீரும்
களிப்புடன் வாழ்வீர் அருள் பெற்று என்றும்.

இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ, முஸ்லீம்களும்
இணைந்து வாழும் நல்ல வாழ்விடமாம்.
வீரமும், விளையாட்டும் வளர்ந்து – பல
வெற்றிகள் கண்ட மன்னார் மாதோட்டமாம்.



ஈழத்துப் பூதந்தேவனார் பிறந்த இடமாம்.
இயல், இசை, நாடகக் கலைகளின் வளமாம்.
நாட்டு வைத்தியர்கள் வாழும் தளமாம்.
நல்ல சுக வாழ்வு பெற்றிடும் களமாம்.

தமிழ் அரசர்கள் அரசோச்சிய அரசாம்.
நம்ம அல்லிராணி ஆண்ட அரசும் இதுவாம்.
முத்துக்கள் விளையும் கடலாம் - நமது
மூதாதையர் வாழ்ந்த நற்பதியும் இதுவாம்

கடலில் நிறைய மீன்கள் உண்டு.
காட்டில் போதிய தேன் உண்டு.
தாவிப் பாயும் மான்கள் உண்டு.
தாகம் தீர்க்கும் நீரோடைகளும் உண்டு

அறிவீர் மாதோட்டத்துப் பெருமைதனை.
தெரிவீர் மறைசாட்சிய வாழ்வுதனை. – என்றும்
நேர் கொண்டு வாழ்ந்திடுவீர் நிமிர்ந்து ●

## பொங்குவோம் பொங்கல்

J. வதனா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல்

புத்தம் புது பானை எடுத்து.
புத்தம் புது கோலம் போட்டு.
புதிய வருடத்தில் மங்களகரமான
மாவிலை தோரணங்கள் கட்டி.
மங்கள கரமான நாளில் கொண்டாடுவோம் - பொங்கல்!
புதிய வயல் செய்து.
புதிய நெல்மணிகள் செய்து.
புதிய பானை எடுத்து.
மங்கள கரமான பொங்கல் செய்வோம்!
புதிய வருடத்தில், புதிய தைத்திங்களில்
புதிய நண்பர்களுடன் பொங்கலை
நாம் கொண்டாடுவோம்.! ●




## ஆகட்டும் என்ற மரியே

செபமாலைக் கன்னியர்சபை, பட்டித்தோட்டம்.

ஆகட்டும் என்ற மரியே! நீ பேறு பெற்றவள்!
இறைவனுக்குப் பணிவுடன் பதிலுரைத்த மரியே பேறுபெற்றவள்
மனிதரின் மணி மகுடமாக விளங்கும் மரியே பேறுபெற்றவள்
மனுக்குலத்தின் உரைக்கல்லான மரியே பேறுபெற்றவள்
மாண்பிற்கு இலக்கணமாண மரியே பேறுபெற்றவள்
துன்பங்களை மௌனமாகத்தாங்கிய மரியே பேறுபெற்றவள்
சிலுவையடியில் துன்பங்களை சுமந்தவளே பேறுபெற்றவள்
அம்மா! நீர் சொன்ன சம்மதம் சக்தி வாய்ந்தது.
அது உண்மையானது. அது உறுதியானது.
ஆகட்டும் என்ற சொல்லில் தடம் மாறாதவளாய் நின்ற மரியே!
உன் அழகு எங்கே உள்ளது?
அது அநீதியான முறையில் துன்புற்றபோது உன் அழகு தெரிந்தது.
இதில் எனது அழகு எங்கே?
உம்மைப்போல் துன்புற்று
அது ஆன்ம மீட்பாக மாறும் போதுதான். ●



# இஞ்சியின் மருத்துவக் குறிப்புக்கள்



- காலையில் எழுந்ததும், ஒரு சிறிய துண்டு இஞ்சி அல்லது இஞ்சி சாற்றை குடித்து வந்தால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். பசி உணர்வுகள் அதிகம் இல்லாதவர்கள் காலையில் சிறிது இஞ்சியை வாயில் போட்டு மென்று வந்தால் பசியுணர்வு அதிகரிக்கும்.
- இஞ்சி சாறு, எலுமிச்சை சாறு, வெங்காய சாறு மூன்றையும் கலந்து ஒருவேளை அரை அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர ஆரம்ப கால ஆஸ்துமா, இரைப்பு, இருமல் குணமாகும்.
- இஞ்சி சாறை பாலில் கலந்து பருகுவதன் மூலம் வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் குணமடைவதோடு உடம்பும் இளைக்கும். மலச்சிக்கல், களைப்பு, மார்பு வலி என்பன நீங்க இஞ்சியை துவையல், பச்சடி செய்து சாப்பிட வேண்டும்
- ஒற்றைத் தலைவலி பிரச்சனை உள்ளவர்கள் சிறிது இஞ்சியை அரைத்து பேஸ்ட் செய்து, நீரில் கலந்து நெற்றியில் தடவ நல்ல பலன் கிடைக்கும்.
- சிறிது இஞ்சியை நீரில் தட்டிப் போட்டு கொதிக்க வைத்து இறக்கி, அதில் எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து குடித்து வந்தால் நெஞ்சுப் பகுதியில் தேங்கியுள்ள சளி பிரச்சனைக்கு நல்ல நிவாரணம் கிடைக்கும்.
- பல்வலி ஏற்படும் போது, இஞ்சி துண்டை ஈறுகளில் மசாஜ் செய்யலாம் அல்லது இஞ்சியை நீரில் தட்டிப் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரினால் வாயைக் கொப்பளிக்க வேண்டும்.
- இஞ்சியை அரைத்து நீரில் கலந்து தெளிந்த பின், நீரை எடுத்து துளசி இலை சாற்றைச் சேர்த்து ஒரு கரண்டி வீதம் ஒரு வாரம் சாப்பிட வாய்வுத் தொல்லை நீங்கும்.
- குமட்டல், வாந்தி மற்றும் காலையில் ஏற்படும் சோர்வைப் போக்க இஞ்சியை வெறும் வயிற்றில் ஒரு துண்டு சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும்.
- இஞ்சி சாறில், தேன் கலந்து தினசரி காலை ஒரு கரண்டி சாப்பிட்டு வர நோய் தடுப்பு திறன் கூடும். உற்சாகம் ஏற்படும். இளமை பெருகும். தேன் கலந்த இஞ்சி சாறு புற்றுநோய் தாக்கத்தில் இருந்து நல்ல பாதுகாப்பு வழங்கும். எப்படியெனில் இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுத்துவிடும். ●

# கொஞ்சம் சிரிங்க

ராமர் : வாழ்க்கையின் மிகப் பெரிய சந்தர்ப்பம் எது?
**பீமன்:** மனைவியின் கன்னத்தில் கொசு உட்காருவது...
**ராமன்:** ???

............................


**விமல்:** மச்சி லேப்டொப் வாங்கிட்டு அடுத்து துணிக்கடைக்கு போகணும், ஞாபகப்படுத்து...
**கமல்:** ஏண்டா நேத்துதானே ட்ரெஸ் எடுத்த மறுபடியுமா?
**விமல்:** இல்லடா, லேப்டொப்லவிண்டோஸ்லாம் இருக்குமாமே, அதுக்கு கையோட நல்லதா ஒரு ஸ்கிரீன் வாங்கி தெச்சி வெச்சிடலாம்னுதான்:
**கமல்:** ???

............................

**பார்வையாளன்:** நேத்து நடந்த ஓவியக் கண்காட்சியில் உங்க ஓவியம் தான் பாக்குற மாதிரி இருந்துச்சு.
**ஓவியர்:** ரொம்ப நன்றிங்க.
**பார்வையாளர்:** ஆமா.. மத்த ஓவியங்களைச் சுத்தி ஒரே கூட்டம் பாக்கவே முடியல...

............................

**மாலா:** சுவரில் எழுதாதேன்னு இருந்தது!
**அஞ்சு:** அப்புறம் என்ன செய்தே?
**மாலா:** சரி எழுதலைன்னு எழுதிட்டு வந்திட்டேன்!



**ஒருவர்:** எனக்கு காதலிக்கவே பயமாக இருக்கு?
**மற்றொருவர்:** ஏன்?
**ஒருவர்:** கீதையில் சொல்லியிருக்கே எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது.

............................

**அம்மா:** ஆராரோ! ஆரிராரோ! ஆசை மகளே கண்ணுறங்கு!
**குழந்தை:** அம்மா நான் தூங்கணும் கத்தாதே!
**அம்மா:** ???

............................

**கணவன்:** எப்போதும் காரிலேயே வெளியே போக வேண்டும் என்கிறாயே? கடவுள் எதற்காக இரண்டு கால்கள் கொடுத்திருக்கிறார் தெரியுமா?
**மனைவி:** தெரியுமே, ஒன்று பிரேக்குக்கு, மற்றொன்று ஆக்ஸிலேட்டருக்கு!

............................

**ஆசிரியர்:** ஏண்டா 20 நாளா ஸ்கூலுக்கு வரல..?
**மாணவன்:** எங்கப்பாதான் சொன்னாரு ஒரே எடத்துக்கு அடிக்கடி போனா மரியாத கெடைக்காதுண்ணு...)

# அழகுக் குறிப்புக்கள்



- பழங்களில் வாழைப்பழம், பப்பாளி, அவகேடோ போன்றவை சருமத்திற்கு பொலிவைத் தரக்கூடியவை. எனவே இத்தகைய பழங்களை சாப்பிடுவதோடு சருமத்திற்கு தடவி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.
- எண்ணெய்முகம் எப்போதும் உள்ளவர்கள் தக்காளி ஜூசை தொடர்ந்து தடவி வரலாம். இதிலுள்ள வைட்டமின் ஏ,பி,சி மூன்றும் சருமத்தை இளமையாக வைத்திருக்கும்.
- எல்லா காய்கறிகளையும் சேர்த்து சூப் செய்யும்போது, அதிலிருந்து வெளியேறும் ஆவியில் முகத்தை காட்டினால், சருமத்துவாரங்கள் திறந்து அழுக்கு வெளியேறும். தேவையான சத்துக்களும் சேரும்.
- சருமத்தை சுத்தமாக்குவதில் பால் சார்ந்த பொருட்கள் மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றன. தயிர், வெண்ணெய் போன்றவற்றையும், சாதம்வடித்த கஞ்சியுடன், பாலையும் சேர்த்து முகத்தில் தடவினால் தளர்ந்த சருமம் இறுக்கமாகும்.
- பப்பாளி பழத்துடன் பால் கலந்து முகத்தில் பூசிவந்தால் நிறம், கூடுதலாகும். சாதாரணமாக சீதோஷ்ண நிலையிலேயே இதைச் செய்ய வேண்டும்.
- முகத்தில் தூசிகள் படிந்திருப்பதால் முகம் பொலிவின்றி காணப்படும். எனவே அவ்வப்போது முகத்தை சுத்தமான நீரினால் கழுவினால் முகம் நன்கு சுத்தமாக, பருக்களின்றி இருக்கும்.
- முகத்தில் உள்ள கருமையைப் போக்குவதற்கு நிறைய ஃபேஸ் மாஸ்க்குகள் உள்ளன. அத்தகைய மாஸ்க்குகள், ஸ்கரப்கள் போன்றவற்றை மேற்கொண்டால் சருமத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகள் நீங்கி, சருமத்தின் நிறம் இயற்கையாகவே அதிகரிக்கும்.
- எலுமிச்சை ஒரு சூப்பரான ப்ளீச்சிங்பொருள். இத்தகைய எலுமிச்சையின் துண்டுகள் அல்லது சாற்றைக் கொண்டு தினமும் முகத்தை சிறிதுநேரம் தேய்த்து கழுவினால் சருமத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி சருமம் பொலிவோடு மின்னும். ●

# மன்னா விளம்பரப் பலகை

மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால் அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

................................

நீங்கள் செய்யும் தவறை உடனே திருத்திக்கொள்ளுங்கள் இல்லாவிட்டால் இன்னொரு தவறைச் செய்தவராகி விடுவீர்கள்.

................................

குறை சொல்பவர்களுக்கு நன்றி சொல்லுங்கள் ஏனென்றால், உங்களை நீங்களே செதுக்கி கொள்வதற்கு அவர்கள் தான் உளி கொடுக்கின்றனர்..!

துன்பம் இல்லாத இன்பமும், முயற்சி இல்லாத வெற்றியும் அதிக நாள் நிலைப்பதில்லை..

பிறக்கும் போது உன்னோடு இல்லாத பெயர், நீ இறக்கும்பொழுது உன்னோடு தான் இருக்கும். அதை உன் சாவிற்கு கொடுக்காமல் சரித்திரத்திற்கு கொடு.

................................

அடுத்தவனின் புகழில் வாழ விரும்புபவன், தன் புகழில்கூட வாழ அருகதை இல்லாதவன்..

................................

அழகைப் பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையை பாழாக்கி விடும். கடமையை பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

நேரத்தை, வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார்! ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.198

2 குறிப்பேடு (அதிகாரம் 25 முதல் 36 முடிய)

உங்கள் விடைகளை பெப்ரவரி மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | ✱ | | | | | 02 |
| | | | 03 | | | | 04 | | ✱ | |
| | 05 | | | | | | | | 06 | |
| | | | 07 | | | | | | | |
| | ✱ | ✱ | | | 08 | | | | | |
| | | 09 | | 10 | | | ✱ | 11 | | |
| | | | | | | 12 | | 13 | | |
| | 14 | | | | | | 15 | | | |
| | ✱ | 16 | | | | | | | | |
| | 17 | | | | | | | | | 18 |
| 19 | | | | | | | | ✱ | 20 | ✱ |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார், மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(– என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அத்துடன் நிலத்தின் எல்லா விளைச்சலிலும் பத்திலொரு பங்கைத் ......................க் கொடுத்தனர்.
5. அவரது இரண்டாம் ............ ஏற்றி எருசலேமுக்குக் கொண்டு வந்தனர்.
10. இம்மதில் ..................ச் சுற்றிலும் உயர்ந்திருக்கச் செய்தான்.
12. செதுக்கப்பட்ட ................த் தூள் தூளாக்கினர்.
14. உடனே, அவர்கள் அவனை அங்கிருந்து ......... முனைந்தனர்.
16. இல்லையெனில் ஆண்டவருக்கு எதிரான ........ நம்மேல் இருக்கும்.
17. ஏனெனில் நம் தந்தையர் துரோகம் செய்து நம் கடவுளாம் ஆண்டவரின் ........... தீயன செய்தனர்.
19. நீயும் மன.............. உன் கல்லறைக்குச் செல்வாய்.

### மேலிருந்து கீழ்

1. பசியாலும் ...................... நீங்கள் மடியுமாறு எசேக்கியா உங்களை வழிதவறி நடத்துகிறான் அன்றோ?
2. ஒரே பலிப்பீடத்தில் வழிபடவும் .................. வேண்டும் என்று கட்டளையிட்டது இந்த எசேக்கியா அன்றோ?
4. ஆண்டவரின் இல்லப்பணியில் அவர்களை ....................த்தார்.
6. ஏனெனில் அவன் பலியிடுவதில் ............... கொண்டிருந்தான்.
7. ஏனெனில் உதவிபுரியவும், வீழ்ச்சியுறச் செய்யவும் கடவுளுக்கு ................... உண்டு. (இறுதி எழுத்து 1வது எழுத்துக்கு மேலே நிற்கிறது)
12. நீங்களோ அவர்களை வெஞ்.......... கொன்றீர்கள்.
13. ஆகாசு கடவுளின் இல்லத்திலிருந்த ..................களை ஒன்றுதிரட்டி நொறுக்கினான்.
15. அவன் யூதாவின் .................. நகர்களையும், காடுகளில் கோட்டைகளையும் கட்டினான். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு மேலே நிற்கிறது.

### வலமிருந்து இடம்

2. ஏனெனில் அவர்கள் தங்களையே .............. வைத்துக்கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தனர்.
3. குருக்கள், அவற்றின் குருதியைத் தங்கள் கைகளில் பிடித்துத் ........................... லேவியர் தோலுரித்தனர்.
4. அரசர் எசேக்கியாவின் வார்த்தைகளைக் கேட்ட மக்கள் மிகுந்த ...................... அடைந்தனர்.
7. அரண்மனையின் கருவூலங்களில் இருந்தவை ...........வற்றை கொள்ளையடித்தான்.
9. அவர்கள் தப்பமுடியாத அளவுக்கு ஆண்டவரது .................... அவர்கள்மேல் கனன்றெழுந்தது.
12. தங்கள் கைவினையான அனைத்துச் ............. எனக்குச் சினமூட்டினர்.
18. அவனது செயல் அவனுக்கும் இஸ்ரயேலர் எல்லாருக்கும் .........................யே தேடித்தந்தது.

### கீழிருந்து மேல்

8. உங்கள் தோள்களில் அது ஒரு ............ இருத்தலாகாது.
10. மக்களில் பலர் ஒன்றுதிரண்டு நாட்டின் எல்லா நீரூற்றுக்களையும் ...................... அடைத்துவிட்டனர். (3வது எழுத்து இறுதியாக நிற்கிறது)
11. உசியாவுக்குப் போர்த்.................. படை ஒன்று இருந்தது.
12. தன் தந்தையால் வார்க்கப்பட்ட .................. ஆமோன் பலிநிறைவேற்றி வழிபாடு செய்து வந்தான். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
18. உசியா வலிமை மிக்கவன் ஆனபோது தான் .................. அளவுக்கு ஆணவம் கொண்டான்.
19. லேவியர் சிலர் எழுத்தரும் ............ வாயிற் காப்பாளருமாகவும் இருந்தனர்.
20. அவன் பிறசெயல்கள், ........................கள், தொடக்க முதல் இறுதிவரை யூதா, இஸ்ரயேல் அரசர்களின் குறிப்பேட்டில் எழுதப்பட்டுள்ளன.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 196

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
R. ஜெகநாதன்,
இல: 161,
மடுக்கரை.

**இரண்டாம் பரிசு:**
S. அல்பிறெட் சில்வா,
தலைமன்னார், கிராமம்,
தலைமன்னார்.

**மூன்றாம் பரிசு:**
செல்வி. வயலட் யோண்,
இல: 843, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 68 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 196ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. K. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
02. எ. ஜெய்மென் ராஜா, புத்திரர்கண்டான், முருங்கன்.
03. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி தாழ்வுபாடு.
04. எ. ஜெனோலின் புத்திரர்கண்டான், முருங்கன்.
05. ராணி அரசரத்தினம், தபாலக வீதி, மன்னார்.
06. பெ. விறைன் குரூஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
07. K.R. கலிஸ்ரஸ், சிதம்பரபுரம், வவுனியா.
08. ச. அபிஷேக், எழுத்தூர், மன்னார்.
09. ச. சகாயமலர் (மெயா) எழுத்தூர், மன்னார்.
10. புளோறன்ஸ் அந்தோனிப்பிள்ளை, நானாட்டான்.
11. G. ரொஷிபா லெம்பேட், 6ம் வட்டாரம், வங்காலை.
12. S. செபமாலைமார்க், 7ம் வட்டாரம், வங்காலை.
13. M. பிளண்ரீனா, சின்னக்கடை, மன்னார்.
14. D.P. சாறா, மாவிலங்கேணி, முருங்கன்.
15. அ. மேரி பற்றிமா, யாழ்ப்பாணம்
16. S. செனாறின் குரூஸ், முத்தரிப்புத்துறை.
17. S. மெ. றோஷன் குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
18. அ. ஆன் ஆன்றியா, காத்தான்குளம், நானாட்டான்.
19. நி. நியோவின் பறுனாந்து, முத்தரிப்புத்துறை.
20. அ. அலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
21. ஜேம்ஸ் இலக்கியன் தோட்டவெளி.
22. ச. மரிய கொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை.
23. அ. டிலோஜன் சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
24. ஜோ. சுவேதா, சவேரியார்புரம், சிலாவத்துறை.
25. நிக்லஸ் ஜெராட், பெற்றா, மன்னார்.
26. யே.டி. செரோமி, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
27. ச. சுனித்தா, காத்தான்குளம், நானாட்டான்.
28. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
29. ஆ. ரகுநாதன், தேவன்பிட்டி
30. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
31. அ. விபுஷிகன் சோசை, சுகந்தபுரி, வங்காலை.
32. பி. றூபா, அச்சங்குளம், நானாட்டான்.
33. ர. நவீன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
34. பி. லக்சனா, அச்சங்குளம், நானாட்டான்.
35. சி. கிரியோன் சோசை, சுகந்தபுரி, வங்காலை.
36. பே. சுகீசனா, புனிதசவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
37. அகுஸ்தீன் இசக்கியேல், தோட்டவெளி.
38. அ. டெல்சியா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
39. அ. மெர்லின், பொன்தீவுகண்டல், முருங்கன்.
40. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
41. ப. பவுஸ்றினா, தோட்டவெளி.
42. ஜெனிங்ஸ் அபிஷானி, குழந்தையேசுபுரம், மன்னார்.
43. வி. மேரி கலிஸ்ரா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
44. ஜீன்போள் லக்மினி குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
45. ரா. ஜொனா கிறிஷ் குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
46. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
47. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
48. இருதயநாதன், மெகன்சி, மடுக்கரை.
49. பி. பிறின்சி லியோன், முத்தரிப்புத்துறை.
50. அ. பிறாங், எழுவைதீவு, யாழ்ப்பாணம்.

## பெயர் மாற்றமும்....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

அருட்சகோதரி எல். மேரி டாலர் அவர்களை நிறுவுனராகக்கொண்ட எமது சபையின் அருட்சகோதரிகள் மன்னார் மறைமாவட்டத்தில் சிறுக்கண்டல் (களிமோட்டை), சிறுத்தோப்பு, பேசாலை ஆகிய பங்குகளிலிலும், இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள பாண்டிச்சேரி, மதுரை, திண்டுக்கல், புளித்தலை ஆகிய மறைமாவட்டங்களிலும் பணியாற்றிவருகின்றனர். தற்போது 37 அருட்சகோதரிகளைக் கொண்ட இச்சபையானது திருச்சபையின் சட்ட ஒழுங்கிற்கு அமைவாக முழுமையான துறவற சபையாவதற்குரிய ஆரம்பப் படிநிலையில் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை நாட்டின் புனிதர் புனித யோசேவ்வாஸ் அவர்களின் பண்பு, பணி, ஆன்மீகம் இவற்றில் எமது சபை இணைந்திருக்க உங்களின் மேலான செபங்களை எதிர்பார்க்கின்றோம். ●

## வங்காலைப் பங்கில்....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

மேலும் விசுவாச வாழ்வை தெளிவுபடுத்துதல். மாணவர்களின் வேதாகம அறிவினை ஆழப்படுத்துதல். மாணவர்களின் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களை தலைமைத்துவத்திலும், கூட்டுபரஸ்பர உறவிலும் வளர்க்கவும் பயனுள்ளதாக அமைகின்றது. அத்துடன் மனித வாழ்வில் அன்பு, ஒற்றுமை, மன்னிப்பு, உதவி செய்யும் மனப்பாங்கை கட்டியெழுப்புதல். சமூக விழிப்புணர்வை விடுமுறை மறைக்கல்வி ஊடாக ஏற்படுத்துவதும் ஆகும். விடுமுறை மறைக்கல்வியின் செயற்பாடுகளாக சித்திரப்போட்டி, கட்டுரைப்போட்டி, குழுப்பாடல் போட்டி, குழுநடனம், குழுநாடகப்போட்டி விவிலியப் பாசறை, பாலன் குடில் அமைத்தல் போட்டி ஆகியன சிறப்பாக நடைபெற்றன. இந்நிகழ்வுகள் அனைத்திற்கும் இளைஞர் யுவதிகளும், மறையாசிரியர்களும், அருட்சகோதரிகளும் வழிகாட்டிகளாக இருந்தனர். இந்நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தி வழிகாட்டலும், ஆலோசனைகளையும் அருட்பணி மரியகிளைன் (உதவிப்பங்குத்தந்தை) செயற்படுத்தி வந்தார். போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு டிசம்பர் 30ஆம் திகதி நடைபெற்ற பங்கு ஒளிவிழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டது. ●

தகவல்: திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்

## புறக்கணிப்பு....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

பொதுவாக, கடவுளின் அன்புக்கு எதிரானது புறக்கணிப்பு மற்றும் வெறுப்பு என்றுரைத்த திருத்தந்தை, புறக்கணிப்பு கலாசாரத்திலிருந்து நம் இதயங்கள் குணமாக, இறைவனிடம் மன்றாடுவோம் என்றார்.

மேலும், சாந்தா மார்த்தா இல்லத்தில் தங்கியிருந்த ஒஸ்ரியாவிற்கான முன்னாள் திருப்பீட தூதர் பேராயர் Giorgio Zur அவர்கள் காலமானதைக் குறிப்பிட்டு அவரின் ஆன்மா நிறை சாந்தியடைய இத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ஜனவரி 9ஆம் திகதி தனது எண்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடும், Neocatechumenal Way என்ற அமைப்பின் இறை நிறுவனர் Kiko Arguello அவர்களுக்கும் இத்திருப்பலியின் இறுதியில் தனது இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார். திருஅவைக்காக உழைக்கும் Kiko Arguello அவர்களின் திருத்தூது ஆர்வத்திற்கு திருத்தந்தை நன்றியும் தெரிவித்தார். ●

## யாழ் மறைமாவட்ட.....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

இப்பயிற்சியில் யாழ்ப்பாணம், தீவகம், இளவாலை, பருத்தித்துறை மறைக்கோட்டங்களைச் சேர்ந்த 28 மறையாசிரியர்கள் பங்குபற்றினார்கள். இவர்களுக்கு திருவிவிலியம், திருவழிபாடு, திருஅவை, திருவருட்சாதனங்கள், கத்தோலிக்க திருமறையின் அடிப்படை கொள்கைகள் பற்றிய பகுதிகளில் துரித ஆயத்த வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் மறையாசிரியர்களுக்கான தலைமைத்துவம், தியானம், வழிபாடு, கலைவழி மறைக்கல்வி, குழும வாழ்வு பற்றிய பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

பயிற்சியின் இறுதியில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுடனான சந்திப்பு நடைபெற்றது. அன்றையநாள் சிறப்பு நிகழ்வாக துரித பயிற்சியில் பங்குபற்றிய மறையாசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் கலந்து சிறப்பித்ததுடன் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்பணி பெனற் அவர்களின் நெறிப்படுத்தலில் மிகவும் சிறப்பானமுறையில் நடைபெற்றது. ●

## அமரர் அருட்தந்தை.....

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் மற்றும் ஆலோசகர்கள், தொடர்பகம், அமல உற்பவம், வசந்தகம், அமலமரித்தியாகிகள் சிறிய குருமடம், பெரிய குருமடம் ஆகிய இல்லங்களின் முதல்வர்கள், அதிபர்கள், குருக்கள், அருட்சகோதரர்கள், குருமட மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

மேலும் சுகயீனமுற்றபோது வைத்தியசாலையிலும், இறைபதமடைந்தபின் இல்லத்திலும், ஆலயங்களிலும், வந்து செபித்த குருக்கள், துறவியர், அருட்சகோதர, சகோதரிகள் இறைமக்கள், புனித மரியன்னை பேராலயப் பங்குத்தந்தை மற்றும் பணியாளர்கள், வெவ்வேறு பங்குகளில் இருந்து வருகைதந்த அமலமரித் தியாகிகள் சபையின் பொதுநிலையினர், பராமரித்த வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள், வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள், பல்வேறு வகையில் உதவிபுரிந்தவர்கள் மேலும் 31ஆம் நாள் நினைவுத் திருப்பலியில் கலந்துகொண்ட குருக்கள், துறவியர், பொதுநிலையினர் மற்றும் திருப்பலியை ஏற்பாடு செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் அடிகளாரின் குடும்பத்தினர் சார்பாக எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். ●

*குடும்பத்தினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளமையும்...........

10 ஆம் பக்கத் தொடர்ச்சி.

செபமாலை, திருவிவிலியம் மகிமையின் சின்னம், பாதுகாப்பின் கருவி, எம் வாழ்க்கையின் வழிகாட்டி. தற்காலத்தில் கையடக்கத்தொலைபேசி சிலவேளைகளில் அழிவின் சின்னமாக மாறுகின்றது. உயிர்களைச் சூறையாடும் கருவியாகவும் செயற்படுகின்றது. இவை நிஜமாக இன்றைய இளைஞர்கள் வாழ்வில் நடந்தேறுகின்றது.

இறை இயேசுவுக்குள் பிரியமான என் அருமைத் தம்பிமாரே! தங்கைமாரே! இளைஞர் ஒன்றியத்தில் இருந்து நான் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும், வழிகாட்டல்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். இளைஞர் ஒன்றியம் நாம் மகிழ்வோடு கிறிஸ்துவுக்குள் இணைந்து வாழ்வதற்கு, கிறிஸ்துவால் தேர்ந்து கொள்ளப்பட்ட கொடையாகும். கிறிஸ்துவோடு மிக ஆழமாக ஒன்றித்திருக்கவும், கிறிஸ்துவோடு இணைந்து பணி செய்யவும் அழைப்பு விடுக்கும் ஒரு ஒன்றியமாகத் திகழ்கின்றது. இளையோராக நாம் இருந்து பெற்றுக்கொள்ளும் மகிழ்ச்சி வேறு எவற்றுக்கும் ஈடு செய்ய முடியாது. இளைஞர் ஒன்றியத்தின் ஊடாக இளைஞர், யுவதிகள் ஒவ்வொருவரினதும் ஆளுமைத் தன்மைகள் வெளிக்கொணரப்படுகின்றன. திறமைகள் வெளிக்காட்டப்படுகின்றன. கூட்டு முயற்சிகள் உருவாக்கப்படுகின்றன. செயற்றிறன் விருத்தியாக்கப்படுகின்றது. புதிய பல நல் உறவுகள் வளர்க்கப்படுகின்றன. என்னைப் பொறுத்த மட்டில் இளைஞர் ஒன்றியத்தில் நான் பயணித்த காலம் அதிகம். பயணித்த காலம் முழுவதும் பசுமையான காலம். பங்குத்தள ஒன்றியத்தில் பலவற்றைக் கற்று, தலைமைத்துவப் பண்போடு பணி புரிந்து, நண்பர்களோடு அறிமுகமாகி இதன் வளர்ச்சியினூடாக மறைமாவட்ட ஒன்றியத்தில் கால்தடம் பதித்து, புதிய பல சிந்தனைகள் கிடைக்கப்பெற்று, புதிய உறவுகளோடு உறவாடி, மகிழ்ந்து பல வாழ்க்கைப்பண்புகளைக் கற்று, பல ஆசான்கள், அருட்பணியாளர்களின் அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள், ஆலோசனைகளைப் பெற்று வாழ்வாக்கி, மறைமாவட்ட செயலாளராக பொறுப்பேற்று, இன்னும் இளமையின் பொலிவில் முன்னேற்றமடைந்து, தேசிய இளைஞர் ஒன்றியத்திற்கும் சென்று மறைமாவட்டங்கள், பல இடங்கள், பல நிகழ்வுகள் என்றெல்லாம் பார்வையிட்டு பலரோடு அறிமுகமாகிப் பலவற்றைக் கற்றும் வாழ்வில் முன்னேற்றமடைந்திருக்கின்றேன். நான் மட்டுமல்ல, என்னைப்போன்ற பலர், இளையோராக இருந்து, ஒன்றியத்தில் அங்கத்துவம் வகித்து இளைஞர் ஒன்றியம் மூலமாக வெளிநாடு சென்று, உலக இளைஞர் தினத்திலும் கலந்து சிறப்பித்து வந்திருக்கின்றார்கள். இவ் வாய்ப்புக்கள் எல்லாம் கிடைக்கப் பெற்றது இளைஞர் ஒன்றியத்தின் மூலமாகும். அன்று இளையோர் ஒன்றியத்தில் இருந்து பணிகள் செய்தவர்கள் இன்று எழுத்தாளர்களாகவும், கல்விமான்களாகவும், ஆசான்களாகவும், அறிவிப்பாளர்களாகவும் வெவ்வேறு உத்தியோகஸ்தர்களாகவும் தொழில்புரிகின்றார்கள் என்றால் அதற்கு வழிகாட்டி, வளப்படுத்தியது இளைஞர் ஒன்றியமும், ஒன்றியத்தின் வழிகாட்டிகளும்.

இளமைப்பருவம் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கே! அதிலும் சிறப்பாக கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் இறை ஒன்றிப்போடு இணைந்த இறைமகிழ்ச்சியையும், வழிகாட்டலையும், நம்பிக்கையையும், விசுவாசத்தையும், தன்னகத்தே கொண்டுள்ளது. இளையோரே! விழிப்பாயிருங்கள். இன்றே புறப்படுங்கள் புது விடியலை நோக்கி. உங்கள் வாழ்வு ஒளிமயமாக மாறும். இறையாசீர் உங்களோடு நிலைத்திருக்கும். ●

## வங்காலை.....

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

தனது ஆரம்பக் கல்வியை புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தில் பயின்று 2000ஆம் ஆண்டில் க.பொ.த. (சா/த) பரீட்சையை நிறைவுசெய்து 2003 இல் க.பொ.த. (உ/த)ப் பரீட்சையை நிறைவு செய்தார். 2003 – 2009 வரை 6 வருட காலமாக பாலர் பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய இவர் 2010இல் திரு இருதயத்தின் சின்னஞ்சிறிய அருட்சகோதரிகள் கன்னியர் மடத்தில் சேர்ந்து நான்கு வருட பயிற்சிக் காலத்தின் பின்னர் 2013இல் முதல் வாக்குத்தத்தத்தை கொடுத்தார். அதன் பின்னர் ஒருவருட காலம் Loyala College இன் சிங்களப் பாடசாலையில் தமிழ் ஆசிரியராக கடமை புரிந்தார்.

2013 – 2017 வரை கொழும்பிலுள்ள புனித அக்குவைனஸ் பல்கலைக்கழகத்தில் இறையியல் கல்விநெறியை (Diploma) நிறைவு செய்து, 05.12.2017இல் எட்டு மாதகாலம் இத்தாலியிலுள்ள தலைமையகத்தில் இறுதி வாக்குத்தத்தத்தின் முன்னாயத்தங்களை நிறைவு செய்து, தற்போது அனுராதபுரத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். அருட்சகோதரிக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பில் வாழ்த்துக்களையும், செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது. ●

## அரச கிறிஸ்து பிறப்பு.....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

மேலும் இவ்விழாவில் வடமாகாண ஆளுனர் உயர்திரு றெஜினோல்ட்கூறே, வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், வடமாகாண பிரதம செயலர் திரு. பத்திநாதன் மற்றும் அரசபணித்தளங்களின் உயர்நிலைத்தலைவர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள் எனப்பலர் வருகைதந்திருந்தனர். சுமார் 3500 இற்கும் மேற்பட்ட மக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

கிறிஸ்துபிறப்பு விழாவினை மையப்படுத்திய சிறப்பான பல்கலை நிகழ்வுகளை மன்னார் மறைமாவட்ட சமூக அருட்பணிமையம் கலையருவி மன்னார் மறைமாவட்டப் பங்குகளின் அனுசரணையோடு ஒழுங்குபடுத்தி வழங்கியது. அனைத்துப் பணிகளையும் கிறிஸ்தவமத அலுவல்கள் திணைக்களத்தின் இயக்குனர் திருமதி. சத்துரிபிந்து அவர்கள் இணைத்து நெறிப்படுத்தினார். ●

## கிறிஸ்தவ......

10ஆம் பக்கத் தொடர்ச்சி.

அந்த விசவாசத்தினாலே அவன் பணியாளன் குணம்பெற்றான். இறைவனின் பரிவன்பு இஸ்ராயேலர்க்கு மட்டுமல்ல, அத்தோடு இயேசுவின் குணமளித்தல் ஓர் மனித நேயச் செயற்பாடாகும். அது அனைவருக்கும் உரியதாகும் என்பதுவெளிப்படுகின்றது.

**இறந்தவர்களை உயிர்ப்பித்தல் (லூக் 7: 1–17):** யூத சமூகத்தில் பெண்கள் பலவாறு ஒடுக்கப்பட்டார்கள். எனவே இறையாட்சிச் சமூகத்தில் பெண் ஆணுக்குச் சமம் என்பதை இயேசு உறுதி செய்கின்றார். பெண்களுக்கு பல வழிகளிலும் நன்மைகள் செய்து, தன் சீடர்களாக பணிசெய்யவும் வாய்ப்பளித்தார். (உதாரணம்: விபச்சாரத்தில் பிடிபட்ட பெண், இரத்தப்போக்குடையபெண், ஏழைக் கைம்பெண், தைலம் பூசியபெண்) தன் ஒரே மகனை இழந்த நயீன்ஊர்க் கைம்பெண்ணின் மகனை உயிர்ப்பித்தார். இயேசுவின் இப்புதுமையால் இறையாட்சியும் அதன் மாட்சியும் வெளிப்படுத்தப்படுகின்றது.

நாசரேத்தூர் செபக்கூடத்தில் நிகழ்த்திய முதற் போதனை வழியாக தம் செயற்பாடுகள் எவ்வாறு இறையாட்சிக்கு ஏற்றவையாக அமையும் என்பதை வெளிப்படுத்தினார். யூதப்பண்பாடு தூய்மையானது. ஆனால் இயேசுவின் காலத்தில் தூய்மை என்பது உடல் சார்ந்த, இனம் சார்ந்த, சட்டம் சார்ந்த குறுகிய மனநிலையில் காணப்பட்டது. இதனால் பெண்களும், பாவிகளும், வரிதண்டுவோரும், நோயாளிகளும், உடல் தூய்மை அற்றவர்களாகக் கருதப்பட்டனர். சமாரியர்கள் இனத்தூய்மை இல்லாதவர்களாக எண்ணப்பட்டார்கள். சட்டத்தை முறையாகக் கடைப்பிடிக்காத ஏழைகள் பாவிகளாக ஒதுக்கப்பட்டார்கள். இத்தகைய ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிறைவாழ்வு கொடுப்பதே இயேசுவின் முதன்மை நோக்கமாக இருந்தது. சமாரியர்கள், வரிதண்டுவோர், பாவிகளோடு இயேசு அதிகமாக நட்புக் கொண்டு அவர்களோடு விருந்துண்டார். இவர்களோடு தம்மை ஒன்றுபடுத்தி அவர்களோடு ஒருவரானார். இயேசுவின் இத்தகைய செயற்பாடுகள் பரிவிரக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். ●

## கண்ணீர்.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டு சிறப்பிக்கப்பட்ட வேளையில் போரினாலும், வன்முறைகளாலும் தங்கள் குழந்தைகளை இழந்து வாடும் பெற்றோருக்காக கண்ணீர் சிந்தி செபிக்குமாறு, 2016ஆம் ஆண்டு, மே மாதம் 5ஆம் திகதி, "கண்ணீரைத் துடைக்க" என்ற மையக்கருத்துடன் நடைபெற்ற ஒரு செப வழிபாட்டை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2015ஆம் ஆண்டு, பிலிப்பீன்ஸ் நாட்டில் மேற்கொண்ட திருத்தூதுப் பயணத்தில் பல்வேறு கொடுமைகளிலிருந்து காப்பாற்றப்பட்ட குழந்தைகளைச் சந்தித்தபோது, "கண்ணீரால் கழுவப்பட்ட கண்களைக் கொண்டு மட்டுமே, வாழ்வின் ஒரு சில கடினமான யதார்த்தங்களைக் காணமுடியும்" என்று, கூறினார். ●

## வாழ்த்துகின்றோம்.

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஆயர் தந்தை அவர்கள் 1973ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 06ஆம் நாள், மறைந்த திருத்தந்தை 06ஆம் பவுல் அவர்களால் உரோமை வத்திக்கான் நகரில் அருட்பணியாளராக திருப்பொழிவு செய்யப்பட்டார். இவர் கடந்த 45 குருத்துவ ஆண்டுகளை கொழும்பு உயர் மறைமாவட்டத்திலும், இறுதியாக துணை ஆயராக நியமனம் பெற்று, தற்பொழுது மன்னார் மறைமாவட்ட ஆயராக ஒருவருடத்தை நிறைவு செய்கின்ற தருணத்தில் இறைவன் அவருக்கு உடல், உள, ஆன்மீக பலத்தை தொடர்ந்து வழங்கவேண்டுமென்று இறைமக்களிடம் பிரார்த்திக்கும் படியாக இறைமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம். ●

## முன்பள்ளி.....

03ஆம் பக்கத் தொடர்ச்சி

**வாழ்வுதய கல்விப்பிரிவின்கீழ் இயங்கிவரும் முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் திட்டம் அதன் ஆரம்பச் செயற்பாடுகள்**

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னைநாள் ஆயர் அதி வந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, அவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக இப்பணியை 1990ஆம் ஆண்டு முதல் ஓய்வு பெறும் வரை கரிற்றாஸ் வாழ்வுதய நிறுவனத்தினூடாக, மத வேறுபாடின்றி அனைத்து ஆசிரியர்களையும், மாணவர்களையும் சமமாக மதித்து அவர்களின் கல்விப் பணியிலும், வளர்ச்சியிலும் பெரும் பணியாற்றி வந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், தற்போதைய எம் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும் எம் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரின் வழிகாட்டுதலில் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்கள்.

**முன்னெடுக்கப்பட்டுவரும் பணிகள்:**

• முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு. • அவர்களுக்கான பயிற்சிகள். • முன்பள்ளி சிறார்களுக்கான சத்துணவு. • முன்பள்ளி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், வறிய மாணவர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு. • முன்பள்ளி கட்டிடங்கள். • சிறுவர் பூங்கா. • மலசலகூடம். • கற்றல் கற்பித்தல் உபகரணங்கள். • விளையாட்டு உபகரணங்கள். • ஆசிரியர்களின் வருமானத்தை உயர்த்துவதற்காக வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரங்கள். • ஆசிரியர்களுக்கான சீருடை. • ஆசிரியர்களுக்கான சுற்றுலாப் பயணங்கள். • ஆசிரியர் தின நிகழ்வுகள். • ஆசிரியர் கௌரவிப்பு. • ஒளிவிழா அன்பளிப்புப் பொருட்கள். போன்ற திட்டங்கள் தொடர்ந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ●

## எழில்மிகு.....

11 ஆம் பக்கத் தொடர்ச்சி.

எனவே எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது. உழவுத்தொழில் நம் எல்லோருக்கும் உணவு தரும் தொழில். உழவன் நம் தமிழர் பண்பாட்டில் எல்லோருக்கும் சோறுபோடும் தெய்வமாக மதிக்கப்படுகின்றான். மக்கள் கவிஞர் கல்யாண சுந்தரம் **"ஓதுவோர் தொழுவாரெல்லாம் உழவர் தலைக்கடையிலே. உலகம் செழிப்பதெல்லாம் ஏர் நடக்கும் நடையிலே"** என்று நயம்பட கூறினார். இன்று விவசாய நிலங்களை பிரமாண்டமான கட்டிடங்கள், தொழிற்சாலைகள் ஆக்கிரமிக்கின்றன. பல விவசாயிகள் கடன்பட்டு, விவசாயம் செய்து மீளமுடியாது கடனில் மாண்டு போகின்றனர். இன்னும் பலர் பசிபட்டினி நிமித்தம், பிள்ளைகள் படிப்பிற்காக, வெளிநாட்டு வாழ்க்கைக்காக விவசாய நிலங்களை பறிகொடுத்து எந்த நம்பிக்கையும் இல்லாமல் கையற்று நிற்கின்றனர். இந்நிலை கண்டு அன்றே பாவேந்தர் பாரதிதாசன்

**"மாடாய் உழைப்போர்க்கு வீடில்லை சோறில்லை**
**நாடோறும் அங்கம் வளையல் - ஆண்டை மனைவி**
**போட மட்டும் தங்கவளையல். தூசின்றி நெல் மணியைத்**
**தூற்றித் தரும் தோழர்கட்குக் காசில்லை கட்டத்**
**துணியில்லை - ஆண்டையர்க்கு வேசு கிட்டப்பா**
**புகையிலை"** என்று பாடினார்.

இதுபோக காடுகள், மரங்கள் அழிக்கப்படுவதால் சில காலங்களுக்கு முன் பருவமழை பொய்த்துப்போனது. தண்ணீரின்றி நிலங்கள் பாறி வெடித்து, பாலைவனங்களாகிக் கிடந்தன. தொலைநோக்குப் பார்வையில்லாமல் மழைநீரை சேகரிக்க, குளங்களை புனரமைக்க, அணைகள் கட்ட தவறிய நாம் ஆற்று மணலை வாரி விற்று, அநீதி இழைக்கும் ஈனச் செயலும் தொடர்கதையாகின்றது. எதை நாம் கொடுக்கின்றோமோ அதை திரும்பத் தருவது தான் இயற்கையின் இயல்பு. எனவே இயற்கையை அழிப்பது, நாமே நமது காலுக்கடியில் புதைகுழி வெட்டுவதற்கு ஒப்பாகும். இயற்கையை அழிப்பதால் பூமி நடுக்கம், சூழல் மாசடைதல், காலநிலை சீரற்றதன்மை, ஆழிப்பேரலை, வெள்ளம், சூறாவளி, வெப்பம் அதிகரித்தல், துருவப் பிரதேச பனிப்பாறைகள் உருகி நீர்மட்டம் அதிகரித்தல் என்பன ஏற்படும் என்பது கண்கூடாக கண்ட உண்மை. இயற்கையை அழிக்கின்ற மனிதன் படைப்பை ஆண்டு நடத்தும் தகுதியை இழக்கின்றான். இயற்கையை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொடுக்கவேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. எனவே இயற்கையில் இறைவனைக் கண்டு இயற்கையை ரசித்து, நேசித்து வாழ்வோம். வளம்பெறுவோம். ●

## இயேசுவின்....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஒரு வார்த்தையும் சொல்லாமல், அமைதியில் எவ்வாறு உடன்பயணிப்பது என்பது பற்றி அறிந்திருந்த புனித யோசேப்பு கனவுகளின் மனிதர் என்றுரைத்தார் திருத்தந்தை. கனவு காண்பதற்கும், இன்னல்கள் எதிர்வந்தாலும் நம்பிக்கையோடு வருங்காலத்திற்குத் திறந்த மனதாய் இருப்பதற்கும் உள்ள சக்தியை இழக்காதிருப்போம் என்றும் கேட்டுக்கொண்டார். நாம் ஒவ்வொருவரும், நம் குடும்பம், நம் பிள்ளைகள், நம் பெற்றோர் போன்றோரின் வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்று கனவு காண்கின்றோம். அருட்பணியாளர்களும் தங்களின் இறைமக்கள் பற்றி கனவு காண்கின்றனர். இவ்வாறு கனவு காண்பதில் இளையோரைப் போன்று வெட்கப்படாமல் கனவு காணுமாறு கூறினார் திருத்தந்தை.

நல்ல பெற்றோரின் ஞானம் பற்றி விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தவறுகள் இழைக்கும்போது கூட உடனடியாகச் சத்தம் போடாமல் காத்திருக்கும் ஞானமுள்ள பல பெற்றோர் உள்ளனர் என்றும், காத்திருப்பது எவ்வாறு என்பது பற்றி நாம் அறிந்திருப்பது முக்கியம் என்றும், மறையுரையில் கூறினார். ●

## திருப்பாலத்துவ.....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

"பிள்ளைகளே இருள் சூழ் உலகில் ஒளியாகிடுவோம்" என்பதே இவ்வாண்டின் கருப்பொருளாகும். பிள்ளைகள் தமது விசுவாசத்தை, தமது அன்பளிப்புக்களை, தமது வாழ்வை, அவர்களது அன்பை ஏனைய பிள்ளைகளோடு பகிர்ந்துகொள்ள நாம் அவர்களை வழிநடத்தவேண்டும். இவ்வாறு பிள்ளைகளும் மறைபரப்பு ஆர்வத்தை தூண்டவேண்டிய நாளாக இந்நாள் அமைகின்றது. பங்கிலுள்ள திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்களும், திருப்பாலத்துவ சபை பிள்ளைகளும் இந்நாளில் தமது மறைபரப்பு ஆர்வத்தை புதுப்பிக்கும்படி அவர்களை வழிநடத்துவோம்.

மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துச சபை இயக்குனர் அருட்பணி. சவுல்நாதன் அடிகளார், பங்குகளின் ஊக்குவிப்பாளர்கள், திருப்பாலத்துவ சபைப்பிள்ளைகள் ஆகியோருக்கு சிறப்பான வாழ்த்துக்களை மன்னா தெரிவிக்கின்றது. ●

## புனித மரியாளின்.......

02 ஆம் பக்கத் தொடர்ச்சி.

விடத்தல்தீவு புனித யாகப்பர் ஆலயத்தில் கடந்த 08.01.2019 அன்று காலை 10.00 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் முன்னிலையில் அரிப்பு பங்கைச் சேர்ந்த அருட்சகோதரி. யோசப்பின் தொம்மை, ஆட்காட்டிவெளிப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரி கொன்சலீற்றா மடுத்தீன் ஆகிய இருவரும் புனித மரியாளின் பிரான்சிஸ்குவின் மறைபரப்பு சபையில் தமது இறுதி அர்ப்பணத்தை எடுத்துக்கொண்டார்கள். ●

**புதிய அலுவலக விலாசம்:**
மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202,
தலைமன்னார் வீதி, மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## இல்லற வாழ்வில் 60வது ஆண்டு வைரவிழா வாழ்த்து!



திரு. திருமதி. ஞா. மரியதாஸ் மடுத்தின்
ம. மேரி லம்பேட்

28.01.1959 - 28.01.2019
(தலைமன்னார், மன்னார்)

"நான் ஒருபோதும் அவர்களை கைவிடவும் மாட்டேன், அவர்களை விட்டுப்பிரியவும் மாட்டேன்"
(எபி. 13:5)

இல்லறம் என்னும் பாதையிலே, நல்லறம் நடத்தி, நானிலத்தில் நற்பெயருடன் வாழ்ந்து, இறை நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் வளர்ந்து, அறுபது ஆண்டுகள் அன்புடன் வாழ்ந்து, மூவிரு மழலைகளைப் பெற்றெடுத்து, அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வளர்த்த எம் அன்புப் பெற்றோரை வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி காண்கின்றோம்.

வாழ்த்துவோர் :
அன்புப் பிள்ளைகள்.

## நீங்காத நினைவுகள்

### 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. யேசுதாசன்
அன்னம்மா (சீதா)
(கொன்னையன் குடியிருப்பு,
ஓலைத்தொடுவாய்)

மலர்வு : 25 - 10 - 1955
உதிர்வு : 13 - 12 - 1999

"நீரே என் புகலிடம், என் அரண், நான் நம்பியிருக்கும் இறைவன்" (தி.பா 9:12)

அடிமுடி தேடினாலும்,
அகராதி புரட்டினாலும்,
முழுமையான அர்த்தம்
அறிய முடியாத உயிரே!
ஊர் பேர் சொல்லி, உருவம் கொடுத்தவளே!
ஊன் உறக்கம் இன்றி, எம்மை வளர்த்தவளே!
கருவறையில் எமக்கோர் காவியம் கொடுத்து,
கல்லறை சென்றாய் கலங்குதே இதயம்
அம்மா!

பிரிவை நினைந்துருகும், பிள்ளைகள்,

### 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 06 1949 — உதிர்வு 07 01 2018



திரு. கைத்தான் பர்னவாஸ் (பாப்பா)
(பொன்தீவுகண்டல், முருங்கன்)

ஆண்டொன்று உருண்டோடி மறைந்தாலும், உங்களது அன்பான பார்வையும், அமைதியான முகமும், இனிய பாடல் வரியும் எங்கள் மனதில் பாடமாகி, இதயத்தை விட்டு விலகவே இல்லை அப்பா!. நீங்கள் என்றும் எங்களோடு இருக்கின்றீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இன்புற்றிருக்க இறைவனிடம் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

### 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 06 1945 — உதிர்வு 05 01 2015



திரு. முத்தையா அன்ரனி
(லிற்றோ காஸ் விற்பனையாளர் - மன்னார்)

ஆண்டுகள் நான்கு கடந்திடினும், இன்றும்
ஆறாத்துயரில் நாமுள்ளோம்.
ஆறுதல் வார்த்தை பல கேட்டினும்,
ஆட் கொள்ளுதே உங்கள் நினைவு.
குடும்பத்தின் நிலையறிந்து - என்றும்
குல விளக்காய் நாம் வாழ வழி சமைத்தீர்கள்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
எந்நாளும் வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
பாசமிகு மனைவி, சகோதரி, உறவினர்கள், நண்பர்கள்.

### 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 07 1981 — உதிர்வு 24 01 2018



திரு. மரியாம்பிள்ளை செபஸ்ரியான் (நிக்சன்)
(இசைமாலைத்தாழ்வு, முருங்கன்)

மூன்று சகோதரிகளுக்கிடையில் இளையவராய், வசந்தமாய் செழித்து, விருட்சமாவோம் எனக் காத்திருக்கையில், வேரறுத்துச் சென்று ஓராண்டுகள் ஆகிவிட்டதே. '

அன்று இதே நாள். உறவுகள் உன்னைப் பார்க்க அனுராதபுரம் தயாராகிய போது ஒருமாதமாக வார்த்தையின்றிருந்த நீ விடியற்காலை 5.00 மணிக்கு ஒளியாகிய உன் பார்வையை உன் தந்தையிடம் கொடுத்து விட்டு, எம் கண்களில் கண்ணீரை நிரந்தரமாக விதைத்துவிட்டு இறையடி சென்றுவிட்டாயே! வார்த்தைகளில் வடித்துவிடமுடியவில்லை எம் துயரை! உன் இழப்பை! உன் இனிய ஆன்மா இறைமடியில் இன்புற்றிருப்பதாக.

பிரிவால் நினைந்துருகும்,
அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள், அத்தான்மார், மருமக்கள், உற்றார், உறவினர்கள். நண்பர்கள்.

### 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி.
இந்திரா அல்பிறட்

திரு. அல்பிறட்
வியஜரட்ணம்

(பாலைக்குழி, அடம்பன், மன்னார்.)

மலர்வு :- 26.05.1950
உதிர்வு :- 01.02.2006

மலர்வு :- 10.07.1943
உதிர்வு :- 02.01.2006

இல்லறத்தை நல்லறமாக்கி, எமக்கெல்லாம் வழிகாட்டி,
பண்பாய், பாசமாய், நேசமாய் அரவணைத்து,
உயர் வாழ்வு தந்த அம்மா! அப்பாவே!
உங்கள் ஆன்மா சாந்திபெற உளமாற
வேண்டுகின்றோம்.


உங்கள் பிரிவால் துயருறும் :-
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 5ஆம் மாத நினைவஞ்சலி / 31ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. சவிரிமுத்துப்பிள்ளை
யேசுதாசன்
(பிரான்ஸ்)

மலர்வு 24-04-1936
உதிர்வு 19-08-2018



திருமதி. யே. நசரேத்தம்மா
கற்கண்டு ரீச்சர்
(இளைப்பாறிய ஆசிரியை)

மலர்வு 20-03-1937
உதிர்வு 04-12-2018

(நெடுங்கண்டல், அடம்பன்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம்
அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது"

பாரினில் பல்லாண்டு வாழ்ந்து,
பரமனின் பாதம் சரணடைந்தீர்கள்.
நித்தியமும் வான்வீட்டில் இளைப்பாற,
நித்தமும் நாம் இறைவனை இரஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் : பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 09 1957 — உதிர்வு 22 12 2018



திரு. லோறன்ஸ் சகாயநாதன் (குணம்)
(பள்ளங்கோட்டை, நானாட்டான்)

அன்பின் பிறப்பிடமாய், பண்பின் இதயமாய்,
எம் குடும்ப சுடர் ஒளியாய், மகுடமாய்
எம்மை வாழவைத்த தெய்வம் நீங்களல்லவோ!
31 நாட்கள் சென்றாலும் கண்ணீரால் கலங்கி துடிக்கின்றோம்.
அப்பா! நீங்கள் தொலைதூரத்தில் இருந்தாலும்,
எம் விழி ஓரத்தில் இருக்கின்றீர்கள்.
நினைக்க நினைக்க நெஞ்சம் உருகுதையா - உங்கள்
நிலையான பிரிவினை எண்ணியே
விண்ணகம் வாழும் நீங்கள் எமக்காய் இறைஞ்சிடுங்கள்
உமங்கள் ஆன்மா அமைதிபெற ஆண்டவரை
வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும், மனைவி, மகன், சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் [illegible] அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org